விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 28 திங்கட்கிழமை (14.11.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 330

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## யாழ். புறநகர் பகுதி விடுதியில் விபச்சார சீரழிவு; 9 பேர் கைது

### யாழ்ப்பாணப் பொலிஸார் அதிரடி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புறநகர் பகுதியில் இயங்கும் தங்குமிட விடுதியொன்றில் விபச்சாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நான்கு பெண்கள் உட்பட 9 பேரை யாழ்ப்பாணப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இத்தகவலை யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிகாரே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். நகரை அண்மித்த இடத்தில் இயங்கும் தனியார் தங்குமிட விடுதி ஒன்றில் விபச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் தகவல் வழங்கப்பட்டது.

இத்தகவலின் அடிப்படையில் நேற்று பிற்பகல் மேற்குறித்த தங்குமிட விடுதியில் விசேட பொலிஸ் குழுவினரால் சோதனையிடப்பட்டது. இதன்போது விபச்சார தொழில் ஈடுபட்ட 3 பெண்களையும் அவர்களுடன் தொடர்பை வைத்திருந்த 3 ஆண்கள் மற்றும் முகவராக செயற்பட்ட பெண் ஒருவர், விடுதியின் உரிமையாளர், முகாமையாளர் என ஒன்பது பேர் கைது செய்யப்பட்டனர். (20ஆம் பக்கம் பார்க்க)

## தனயன் தாக்கியதில் தந்தை மரணம்

### விஸ்வமடுவில் சம்பவம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, விஸ்வமடு வள்ளுவர்புரம் பகுதியில் தனது தந்தையை வாளியால் அடித்து மகன் கொலை செய்த சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் சோமசுந்தரம் கதிரவேல் (வயது 62) என்ற முதியவரே உயிரிழந்தவராவார்.

தந்தையாருடன் ஏற்பட்ட வார்த்தை தர்க்கத்தில் (20ஆம் பக்கம் பார்க்க)

# போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கு முன்னர் புலிகளுடன் இந்தியா இரகசிய சந்திப்பு

### உடன்படிக்கையிலும் றோவுக்கு முக்கிய பங்கு

### 9 ஆண்டுகளின் பின் அம்பலப்படுத்துகிறார் சொல்ஹெய்ம்



(ஒஸ்லோ) 2002ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னர் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை இந்திய அதிகாரிகள் இரகசியமாக சந்தித்திருந்தனர். அத்துடன் போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்வதில் இந்தியா முக்கிய பாத்திரம் வகித்தது. இவ்வாறு நோர்வேயின் முன்னாள் சமாதான தூதுவரும் அந்நாட்டின் சுற்றாடல் மற்றும் சர்வதேச அபிவிருத்தி அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## மீள்குடியேற்றம் டிசம்பர் இறுதிக்குள் நிறைவுறும் - ஜனாதிபதி

இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் தாக்கப்படும் சம்பவத்தை தடுத்து நிறுத்தவேண்டும், தமிழர்களை மீள்குடியமர்த்தும் பணியை விரைவுபடுத்த வேண்டும் என இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் வலியுறுத்தினேன் என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

மாலைதீவில், சார்க் மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு, நேற்று பிரதமர் மன்மோகன் சிங் டில்லி திரும்பினார். ஏர் இந்தியா விசேட விமானத்தில் பயணம் செய்த அவர், தன்னுடன் பயணம் (20ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளின் தலைவர்கள் சரணடைவது குறித்து பசிலுடன் பேசப்பட்டது

### நோர்வே அறிக்கையில் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர்கள் சரணடைவது குறித்து அப்போது ஜனாதிபதி ராஜபக்ஷவின் ஆலோசகராக இருந்த பசில் ராஜபக்ஷ மூலம் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டதாக நோர்வேயின் சமாதான முயற்சிகள் குறித்த மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் நோர்வேயால் முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகள் தொடர்பில் நோர்வே பேர்கன் நகரில் அமைந்துள்ள ஆய்வு நிறுவனமான மைக்கேல்சன் இன்ஸ்டிரியூட் மற்றும் லண்டனில் இருந்து செயற்படும் கீழ்த் திசை மற்றும் ஆபிரிக்க கல்விகள் கழகம் (சோஅஸ்) ஆகிய நிறுவனங்கள் இணைந்து மேற்கொண்ட சமாதான முயற்சி என்னும் தலைப்பிலான மதிப்பீட்டு அறிக்கை நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் விடுதலைப் புலிகளின் தலைவர்கள் சரணடைவது குறித்து அப்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசகராக இருந்த பசில் ராஜபக்ஷ மூலம் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதாக கொழும்பில் இருந்து வெளிவரும் சன்டே ரைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

2009-ம் ஆண்டு மே மாதம் 17-ம் திகதிக்கும் 18ஆம் திகதிக்கும் இடைப்பட்ட நேரத்தில் தமிழீழ (20ஆம் பக்கம் பார்க்க)

## கொலைக்களம் - 2 தொடர்பில் உன்னிப்பாக கவனிக்கப்படுகிறது

### வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சி இலங்கை தொடர்பாக வெளியிட உத்தேசித்துள்ள கொலைக்களம் இரண்டாவது பாகம் வீடியோ குறித்து உன்னிப்பாக கவனம் செலுத்தியுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

சனல் 4 தொலைக்காட்சி வெளியிடவுள்ள வீடியோ தொடர்பில் இதுவரை மேலதிக தகவல்கள் வெளியிடப்படவில்லை என வெளிவிவகார அமைச்சின் மக்கள் தொடர்பு மற்றும் தொடர்பாடல்துறை பிரிவின் பணிப்பாளர் சரத் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து எடுக்கக்கூடிய சட்ட நடவடிக்கைகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் பிரித்தானியாவில் உள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம் செயற்பாடுகளை முன்னெடுக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதற்கு முன்னரும் சனல் 4 தொலைக்காட்சி இலங்கையில் (20ஆம் பக்கம் பார்க்க)

## நாடு பூராகவும் தனியார் பஸ்கள் நள்ளிரவு முதல் பகிஷ்கரிப்பு

அரசாங்கம், எரிபொருள் மானியம் வழங்காவிட்டால் இன்று திங்கட்கிழமை நள்ளிரவு முதல் நாடளாவிய ரீதியில் பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்படும் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

இத்தகைய நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு சங்கத்தின் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டதாக அச்சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன, செய்தியாளர் மாநாடொன்றில் தெரிவித்தார்.

அண்மையில் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டதால், இச்சங்கம் பல மில்லியன் ரூபாய் இழப்பை எதிர்கொண்டுள்ளது. இச் சுமையை இனிமேலும் தாங்கமுடியாது என்பதால் இந்நடவடிக்கையை நாம் மேற்கொள்கிறோம் என அவர் கூறினார்.

பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டபோதிலும் எரிபொருள் மானியம் வழங்க அரசாங்கம் தவறியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் அழைப்பை ஏற்று யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப் பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத்தின் தனியார் பஸ்களும் (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவதாஸன் நேற்று காலமானார்

(யாழ்ப்பாணம்)



ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான சங்கரப்பிள்ளை சிவதாசன் நேற்று மாலை தனது 77 வது வயதில் காலமானார்.

இடதுசாரிக் கொள்கைகளை ஏற்றிருந்த இவர் 1994ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத்தேர்தலில் ஈ.பி.டி.பியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்று முதன் முதலாக பாராளுமன்றத்திற்கு தெரிவானார்

இதன் பின்னர் 2000 ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின் போதும் ஈ.பி.டி.பி கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார்.

பனை அபிவிருத்திச் சபைத்தலைவராக பணியாற்றிய இவர் கலைக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண சபையின் உறுப்பினராகவும் இருந்துள்ளார். (பா)

# நட்டமடையும் அரச நிறுவனங்களின் தலைவர்களது பதவிகளுக்கு ஆபத்து

(கொழும்பு)

நாட்டில் தொடர்ச்சியாக நட்டமடைந்து வரும் அரச நிறுவனங்களின் தலைவர்களது பதவிகளுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீண்டகாலமாக நட்டத்தை எதிர்நோக்கி வரும் 115 அரச நிறுவனங்களின் தலைமைப் பதவிகளில் மாற்றம் கொண்டு வர அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

திணைக்களம், சபைகள், அரசாங்க நிறுவனங்கள் உள்ளிட்ட பல முக்கிய நிறுவனங்களின் தலைமைப் பதவிக்கு புதியவர்கள் நியமிக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊழல் மோசடி குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட தலைவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (பா)

# இத்தாலிய பிரதமர் இராஜினாமா

(ரோம்)

இத்தாலிய பிரதமர் பதவியிலிருந்து சில்வியோ பேர்லுஸ்கோனி ராஜினாமா செய்துள்ளார். 75 வயதான பேர்லுஸ்கோனி பல்வேறு பாலியல் சர்ச்சைகளில் சிக்கி பரபரப்பை ஏற்படுத்தியவர்.

ஆனால் தற்போது இத்தாலியின் கடன் நெருக்கடி தொடர்பான சர்ச்சையால் அவர் ராஜினாமா செய்துள்ளார்.

இத்தாலிய நாடாளுமன்றத்தில் அரசாங்கத்தின் சிக்கன நடவடிக்கை சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட பின்னர் தனது ராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி ஜோர்ஜியோ நெப்போலிடானோவிடம் பிரதமர் சில்வியோ பேர்லுஸ்கோனி கையளித்தார். (பா)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவயோகலட்சுமி இரத்தினசபாபதி

## (மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய பாதுகாவலர்)



அல்லைப்பிட்டியை பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவயோகலட்சுமி இரத்தினசபாபதி 12.11.2011 சனிக்கிழமை பிரான்ஸில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அல்லைப்பிட்டி செல்லத்துரை உடையார் சொர்ணம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற மண்டைதீவு சிதம்பரநாதர் சொர்ணம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ் சென்ற இரத்தினசபாபதி (தபால் அதிபரும், சமாதான நீதவான்) அவர்களின் அன்பு மனைவியும் ஆவார். அன்னார் கேதீஸ்வரநாதன் (பிரான்ஸ்), கௌரிநாயகி (நோர்வே), சொர்ணநாயகி (கனடா), ஸ்ரீறங்கநாயகி (பிரான்ஸ்), யோகநாதன் (பிரான்ஸ்), பிரபாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பபச (பிரான்ஸ்), சேனாதிராஜா (நோர்வே), தேவநாதன் (கனடா), ஜெயகோபால் (பிரான்ஸ்), பரமேஸ்வரி (பிரான்ஸ்), சுகந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் அருமை மாமியாரும், காலஞ்சென்ற தவவிநாயகம் (கிராமசபைத்தலைவரும், கிராமதலைமைக்காரரும் அல்லைப்பிட்டி), தையல்நாயகி (சுதுமலை), காலஞ்சென்ற வேலாயுதப்பிள்ளை (பிரபல வர்த்தகர், மட்டக்களப்பு), காலஞ்சென்ற நடேஸ்வரி, நடேசப்பிள்ளை (பிரபல வர்த்தகர் யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புச்சகோதரியும்,

கிறிஸ்ணாம்பாள் (பிரான்ஸ்), ஞானசம்பந்தர் (விவாகப்பதிவாளர் சுதுமலை), இராசம்மா (பிரான்ஸ்), சச்சிதானந்தம் (உதவி ஆணையாளர் யாழ்ப்பாணம்), மங்கையற்கரசி (யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற கந்தையா (சிறாப்பர் வேலணை), திருநாவுக்கரசு (மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய தர்மகர்த்தா), செல்வலட்சுமி (யாழ்ப்பாணம்), புவனேஸ்வரி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சுயம்புலிங்கம் (ஈஸ்வரி சினிமா முகாமையாளர் வாழைச்சேனை) ஆகியோரின் மைத்துன மைத்துனியும், பிருஷா, நிஷா, பிறஜா, சுயா, சசி, பிரதீப், நிருஷா, வாகீசன், சகீசன், அருளினி, வதனா, பிரகாஸ், தர்ஷினி, பிரசாந்தன், உமா, உமைமணாளன், ஆனந்தா, அபி, சாருஷன், அதீஸ், சாருஜா, மதுஷன் ஆகியோரின் பேர்த்தியும், அரன், சஜன், சஜன், கிஷான், மத்தீஸ், ராகுல், ஜசா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 17.11.2011 அன்று அவரது இல்லத்தில் காலை 7 மணியிலிருந்து 9 மணிவரை நடைபெற்று பின்னர் (Crematorium du Pere Lachaise 71- rue des Rondeaux-75020 Paris M°-Gambetta (Ligne 3, 3Bis) எனும் முகவரியில் 10 மணி முதல் 11மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் : பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

தொலைபேசி :- 0145946910 : பிரபு பிரான்ஸ் 0699724023 பிரபு பிரான்ஸ்
0620108123 : இந்திரன் பிரான்ஸ் 0609707981 நாதன் பிரான்ஸ்
004722109932 (நோர்வே) 0016473512129 (கனடா) 00121225921 நடேசபிள்ளை யாழ்ப்பாணம்.

(சி-4968)

## திருமதி மகேஸ்வரி நல்லையா

சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் நாதன் திட்டம் விஸ்வமடுவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி நல்லையா அவர்கள் நேற்று (13.11.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா சின்னம்மா தம்பதியினரின் மூத்தமகளும் காலஞ்சென்ற நல்லையாவின் அன்பு மனைவியும் சரோஜினிதேவி, சர்வகலாதேவி, வயறிங்சிறி, தவசோதி, கிருஸ்ணபாலன் (குகன்-லண்டன்), ஜெயசோதி, சிவசோதி, அருந்ததி (டென்மார்க்), சத்தியபாலன் (சுரேஸ்), அனுபாமினி (ஆசிரியை, பிரமந்தனாறு மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சந்திரசேகரம், நாகேஸ்வரன், வதனா, கந்தசாமி, வசந்திமாலா (லண்டன்), கருணாகரன், சிவலிங்கம், யோகராசா (டென்மார்க்), நாகசத்தி, தயாபரன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை இன்று 14.11.2011 திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக 12-ம் கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்
நாதன் திட்டம்,
விஸ்வமடு.

(சி-4969)

# பூண்டுலோயாவில் தீ விபத்து 2 கடைகள் முற்றாக சேதம்

(பூண்டுலோயா)

பூண்டுலோயா நகரில் நேற்று ஏற்பட்ட தீவிபத்தில் இரண்டு கடைகள் முற்றாக எரிந்து சேதத்துக்கு உள்ளாகியுள்ளன.

பிரதான வீதியிலுள்ள மின் உபகரண விற்பனை செய்யும் கடையொன்றில் நேற்று பிற்பகல் திடீரென தீ பரவல் ஆரம்பித்தது.

தீ கட்டுக்கடங்காமல் மேலும் பரவி குறித்த கடைக்கு அருகிலுள்ள பலசரக்குக் கடைக்கும் பரவியதை தொடர்ந்து இரண்டு கடைகளும் எரிந்து சேதமடைந்துள்ளன.

பின்னர் பிரதேச மக்கள் மற்றும் பொலிஸாரின் முயற்சியால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. குறித்த இரு கடைகளுக்கும் சுமார் பல இலட்சத்துக்கும் மேற்பட்ட சேதம் ஏற்பட்டிருக்கலாமென பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பூண்டுலோயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (பா)

# சைக்கிளால் தவறி வீழ்ந்தவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மதுபோதையுடன் சைக்கிளில் பயணித்தவர் தவறி விழுந்ததில் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் 2.00 மணியளவில் ஈச்சமோட்டை கடற்கரை வீதியில் இடம் பெற்றுள்ளது.

இதில் உயிரிழந்தவர் அதே இடத்தைச் சேர்ந்த பஞானராஜ்(வயது-53) என யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (பா-6)

# போர்நிறுத்த ஒப்பந்த...

விடுதலைப் புலிகள் பற்றிய மிகப் பெரிய தகவல் களஞ்சியமான அறிக்கையை வெளியிட்ட பின்னர், தனது செயலகத்தில் வைத்து இந்திய ஐ.என்.எஸ் செய்தி சேவைக்கு வழங்கிய செவ்வியின்போதே எரிக்சொல்ஹெய்ம் போர் நிறுத்த உடன்பாட்டில் இந்தியாவின் பங்கு பற்றிய பல இரகசியங்களை வெளியிட்டுள்ளார்.

2002 பெப்ரவரியில் போர் நிறுத்த உடன்பாடு கையெழுத்திடப்படுவதற்கு முன்னர், தமிழீழவிடுதலைப்புலிகளை இந்திய அதிகாரிகள் இரகசியமாக சந்தித்துள்ளனர்.

ஆனால் இந்தச் சந்திப்பு எங்கே நடந்தது என்றோ இருதரப்பிலும் சந்திப்புகளில் பங்குபற்றியவர்கள் யார் என்பது பற்றியோ தகவல்களை வெளியிட சொல்ஹெய்ம் மறுத்துவிட்டார்.

இது உண்மையானால், முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலையின் பின்னர் 1992 இல் விடுதலைப்புலிகளை புதுடெல்லி தடை செய்த பின்னர், இந்திய அதிகாரிகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இடம் பெற்ற முதலாவது சந்திப்பாக இருக்கும்.

நோர்வேயின் அனுசரணையுடனான போர் நிறுத்த உடன்பாட்டை வரைவதில் அப்போது இந்தியாவில் ஆட்சியில் இருந்த பாரதீய ஜனதா அரசாங்கம் பின்னணியில் முக்கிய பாத்திரம் வகித்ததாகவும் எரிக்சொல்ஹெய்ம் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கொழும்பையும் விடுதலை புலிகளையும் போர்நிறுத்த உடன்பாட்டுக்கு இணங்க வைப்பது குறித்து இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர், இந்தியாவின் புலனாய்வு முகவர் அமைப்பான றோ அதிகாரிகளுடன் பலமுறை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினேன்.

றோ அதிகாரிகளுடனான பல சந்திப்புகள் புதுடெல்லி விமான நிலையத்தில் இடம் பெற்றது.

இந்த விவகாரத்தில் இந்திய புலனாய்வு அமைப்பான றோவின் தலையீடு பற்றிய தகவல்களை வெளியிடவேண்டாம் என்று கோரப்பட்டதால், இந்தப் போர் நிறுத்த உடன்பாடு நோர்வேயின் தனித்துவமான குழந்தை போலவே கருதப்பட்டது.

2001-2002 இல் இலங்கை மற்றும் விடுதலைப்புலிகளின் தலைவர்கள் போர் நிறுத்த உடன்பாடு குறித்து அமைதியாக கலந்துரையாடினர். ஒவ்வொரு முன்னேற்றம் குறித்தும் புதுடில்லிக்கு அறிவிக்கப்பட்டது.

போர் நிறுத்த உடன்பாடு குறித்து இந்தியா குரல் ஆலோசனைகளை வழங்கியதுடன் தொடர்ந்து நல்ல உள்ளடக்கங்களைப் புதுப்பித்துக் கொண்டது.

சமாதான முயற்சிகளில் பிரதான அனைத்துலக சக்தி தொடர்புபடுவதை இந்தியா விரும்பவில்லை. எந்தெந்த நாடுகள் இலங்கைப் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவில் பங்கேற்கவேண்டும் என்றுகூட இந்தியாவே பரிந்துரைத்தது.

இந்திய அதிகாரிகள் அதில் தெளிவாகவே இருந்தனர். இலங்கை பிளவுபடுத்தப்படுவதை கடுமையாக எதிர்த்த அவர்கள், தமிழீழத்தை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்பதில் உறுதியாக இருந்தனர்.

2006ஆல் புற்றுநோயால் மரணமான விடுதலைப்புலிகளின் தத்துவ ஆசிரியர் அன்ரன் பாலசிங்கம், பிராந்தியத்தில் இந்தியாவின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டிருந்தார்.

இந்திய நலன்களுக்கு விரோதமாக எதையும் செய்ய முடியாது என்று அவர் கருதியிருந்தார். ஆனால் 2001 தொடக்கம் 10 தடவைகளுக்கு மேல் நான் சந்தித்த விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஒரு இராணுவமேதையாக இருந்தாலும் அனைத்துலக அரசியல் விவகாரங்களில் முழுமையான அனுபவம் கொண்டவரல்ல.

ராஜீவ்காந்தி கொலையில் தமது குழு விற்கு தொடர்பில்லை என்று பிரபாகரனும் பொட்டு அம்மானும் பல மாதங்களாக வலியுறுத்தியதாக அன்ரன் பாலசிங்கம் என்னிடம் முறையிட்டார். அவர்கள் தாம் அதைச்செய்ய வில்லை என்று பாலசிங்கத்தை சமாதானப்படுத்த முயன்றனர்.

தான் அதை நம்பவில்லை என்றும் அதன் பின்னர் தன்னிடம் பொய் சொல்வதை அவர்கள் நிறுத்திக் கொண்டதாகவும் பாலசிங்கம் என்னிடம் கூறினார் என்றும் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார். (பா)

## இன்று ஒரு தகவல்

# எது சுலபம்?

ஒரு வயதான குரு சாய்வு நாற்காலியிலே உட்கார்ந்திருந்தார். ஒரு ஆள் அவரைத் தேடி வந்தான். வந்தவன் அவர் முன்னாடி நின்றான்.

ஐயா... நான் உங்களுக்குச் சீடனா இருக்க விரும்புகிறேன்! என்றார்.

அந்த குரு நிமிர்ந்து பார்த்தார்.

இதோ பாருங்கள்.. அது அவ்வளவு சுலபமான வேலை இல்லையே! என்றார்.

அப்படியா சொல்லுகிறீர்கள்? என்றான்.

ஆமாம்! நீ ஒரு சீடனாக மாறவேண்டுமென்றால் உன்னுடைய அகங்காரத்தை உன்னிடத்தில் இருந்து அகற்ற வேண்டும் தியானத்திலே முழுமையாக ஈடுபடவேண்டும். இது மாதிரி இன்னும் பல விடயங்களை ஒழுங்காகச் செய்ய வேண்டும்.

ஒரு ஈடுபாட்டோடு செய்ய வேண்டும். அதுமட்டுமல்ல... இதையெல்லாம் தொடர்ந்து நீண்ட நாட்களுக்குச் செய்ய வேண்டியிருக்கும் அது உன்னாலே முடியுமா? என்றார்.

வந்தவன் யோசிக்க ஆரம்பித்தான்.

சீடனாக இருப்பதிலேயும் இவ்வளவு சிரமம் இருக்கும் என்பது பற்றி அவனுக்குத் தெரியாது.

யோசனை செய்தபடியே அந்தக் குருவைப் பார்த்தான்.

அவர் சாய்வு நாற்காலியிலே இருந்த நிலைமையைப் பார்த்தான்.

சரி.. சுவாமி.. சீடனாக மாறுவதில் இவ்வளவு கஷ்டம் என்றால் அது வேண்டாம்: அதுக்குப் பதிலாக உங்களை மாதிரி ஒரு குருவாக மாறிவிடுகிறேனே! என்றான்.

குரு சிரித்தார். நீ சொல்வதும் சரிதான். குருவாக மாறுவது சுலபமான வேலைதான் என்றார்.

இதைக் கேட்டதும் அந்த ஆளுக்கு ஏகப்பட்ட சந்தோஷம்... கஷ்டப்படாமலே குருவாக மாறிவிடலாம் போல இருக்கிறதே எனக் கணக்குப் போட்டான்.

பின்பு அந்தக் குரு சொன்னார்; நீ குருவாக மாறினால் பல சீடர்களுக்குத் தலைவனாக ஆகவேண்டும். அவர்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும். அது கஷ்டமான செயல்! ஏனென்றால் பல பேர் கோபப்படுகிறவர்களாக இருப்பார்கள். பணிவு இருக்காது. இப்படிப்பட்டவர்களையெல்லாம் சமாளிக்கிறது மிகவும் கஷ்டமான விடயம் என்றார்.

என்ன சுவாமி... சற்று முன்தானே சொன்னீர்கள் குருவாக மாறுவது சுலபம் என்று.

ஆமாம்! அது சரிதான். இப்போது என்னையே பார் நான் எவ்வளவு ஓய்வாக இருக்கின்றேன். ஆனால் ஒன்று... நடத்திச் செல்ல வேண்டும் அல்லது ஒரு சீடனாக ஆக வேண்டும்.

சுவாமி... நீங்கள் சொல்வதைப் பார்த்தால் இரண்டுமே கஷ்டமான காரியமாகத்தான் தெரிகிறது... என்ன முடிவு எடுப்பதென்று எனக்கு விளங்கவில்லை. அதனாலே உங்களுடைய அபிப்பிராயம் என்ன? தெளிவாகக் கூறுங்கள் என்று கேட்டான்.

அந்தக் குரு சொன்னார்; நீ பல சீடர்களின் தொல்லைகளுக்கு ஆளாவதைவிட நீயே முதலில் சீடனாகி தொல்லைப்படுவது தான் சரியாக இருக்கும்!

அவ்வேளையில் உன்னுடைய பிரச்சினையை மட்டும் தான் கவனிக்க வேண்டியிருக்கும். குருவாக மாறினால் பல பேர்களின் பிரச்சினையிலே தலையிடவேண்டிருக்கும் என்றார்.

ஒரு உண்மையான குருவுக்கும் சீடனுக்கும் உள்ள உறவு மிகவும் பயன் கருதாத ஒரு அன்புக் கலப்பு (ஓஷோ)

இரண்டு இயற்கையான முழுமை நெருங்கி வந்து ஒன்றுடன் ஒன்று கலப்பது அது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஆளணிப்பற்றாக்குறையால் அவதியுறும் மாங்குளம் பொது வைத்தியசாலை

மாங்குளம் பிரதேச பொது வைத்தியசாலையில் நோயாளர் விடுதி மேற்பார்வை வைத்தியர், ஆண் பெண் மருத்துவ தாதிகள், மேற்பார்வை உத்தியோகத்தர்கள் ஆகியோர் நியமிக்கப்பட்டமையால் தங்கி நின்று சிகிச்சை பெறும் நோயாளர்கள் சிகிச்சை பெற முடியாது அவலப்படும் நிலையினை காணக்கூடியதாகவுள்ளது.

இது தொடர்பாக தெரியவருவது, கடந்தமாதம்27ஆம் திகதி அம்பாந்தோட்டை பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவினால் 54 மில்லியன்ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட உள்நோயாளர் விடுதி திறந்துவைக்கப்பட்டது.

மேற்படி விடுதியில் 10 பெண் நோயாளர்களும் 10 ஆண் நோயாளர்களும் தங்கி நின்று சிகிச்சை பெற முடியும். ஆயினும் மேற்கூறப்பட்ட உத்தியோகத்தர்கள் இன்மையால் இவ்விடுதி செயற்பட முடியாதுள்ளது.

தற்போது வெளிநோயாளர் பிரிவில் பெண்வைத்தியர் ஒருவரே நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கி வருகின்ற போதும் மேற்பார்வையாளர்கள் இன்மையால் சிற்றூழியர்களை கொண்டே ஏனைய வேலைகளையும் மேற்கொள்ளவேண்டியநிலைமை ஏற்பட்டுள்ளது.

இவ் வைத்தியசாலைக்கு ஒரு பெண்மருத்துவதாதி நியமனம் அண்மைக்காலத்தில் இடம்பெற்றிருந்த போதும் அவர்தங்குமிடவசதியின்மையால், இதனை காரணம் காட்டி மல்லாவி ஆதாரவைத்தியசாலைக்கு மாற்றம் பெற்று சென்று விட்டார்.

கடந்த மாதம் நோயாளர் விடுதி திறப்பு நிகழ்வின் போது வைத்தியர், தாதியர்களுக்குரிய விடுதிகளும் திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ் வைத்தியசாலை கனகராயன்குளம், கொல்லர்புளியங்குளம், தச்சடம்பன், கரிப்பட்ட முறிப்பு, ஒலுமடு, மாங்குளம், பனிக்கனிகுளம் கிழவன்குளம், கல்குவாரி, வன்னிவிளான்குளம், பாலைப்பாணி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்களின் மக்கள் சிகிச்சை பெறுவதோடு ஏ9 வீதிக்கு அண்மையில் இருப்பதால் விபத்துக்கள் ஏற்படும் போது சிகிச்சை வழங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. ஆயினும் இங்கு உரியஆளணிவசதியில்லை.

எனவே உரியதரப்பினர் மேற்படி சிகிச்சை நிலையத்திற்கு ஆளணி வசதிகளை ஏற்படுத்தி தருமாறு அப்பகுதி மக்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும், நோயாளர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-2-3-15)

### முல்லை. அரச அதிபர் கிண்ணப்போட்டியில்

# வீதி அபிவிருத்தி அதிகார சபை அணி இறுதிச் சுற்றுக்கு தெரிவாகியுள்ளது

முல்லை. மாவட்ட அரச திணைக்களங்களுக்கிடையிலான அரச அதிபர் வெற்றிக்கிண்ண பெருவிளையாட்டுப்போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் 10 ஓவர்களை கொண்ட மென்பந்து துடுப்பாட்டப்போட்டியில் 14 அணிகள் பங்குபற்றின.

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகிய போட்டியில் முதல் அணிகளாக முல்லை. மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபை அணியும் முல்லை. கட்டட திணைக்கள அணியும் மோதி, வீதி அபிவிருத்தி அதிகாரசபை அணி 12 ஓட்டங்களால் அரையிறுதிப்போட்டிக்கு தெரிவாகியது.

கடந்த 10 ஆம் திகதி ஆரம்பமாகிய போட்டியில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக அணியுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபை அணி மோதி இறுதிச்சுற்றுக்கு தெரிவாகியுள்ளது.

இதேவேளை இன்று இன்னுமொரு சுற்றில் முல்லைத்தீவு கரைதுறைபற்று உதவி அரசாங்க அதிபர் செயலக அணியும் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார திணைக்கள அணியும் அரையிறுதிப்போட்டிக்கு தெரிவாகியுள்ளன. இதில் வெற்றியீட்டும் அணியானது இறுதிப்போட்டியில் முல்லைத்தீவு வீதி அபிவிருத்தி அதிகார சபை அணியுடன் மோதவுள்ளது. (அ-3-15)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 75 | 90 | 80 |
| பச்சைமிளகாய் | 230 | 190 | 150 |
| தக்காளி | 110 | 120 | 80 |
| மரவள்ளிக் கிழங்கு | 25 | 40 | 30 |
| கோவா | - | 60 | 40 |
| கரட் | 80 | 120 | 100 |
| பூசணி | 50 | 50 | 40 |
| புடோல் | 60 | 100 | 30 |
| வாழைக்காய் | 35 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 70 | 90 | 70 |
| பெரிய வெங்காயம் | 75 | 70 | 80 |
| பாகற்காய் | - | 190 | 100 |
| வெண்டிக்காய் | 30 | 60 | 30 |
| கருணைக் கிழங்கு | 70 | 60 | 70 |
| பயற்றங்காய் | 100 | 120 | 90 |
| லீக்ஸ் | - | 60 | 30 |
| பீற்றூட் | 10 | 30 | 20 |
| கறிமிளகாய் | - | 160 | 90 |
| முருங்கைக்காய் | 40 | 90 | 50 |
| போஞ்சி | - | 200 | -- |
| கத்தரிதம்புள்ள | - | 90 | 70 |
| கீரை - 1 பிடி | 15 | 40 | 20 |
| தேசிக்காய் | 220 | 150 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 20-30 | 30 | 30 |

## இராசி பலன்

*14.11.2011*
*(ஐப்பசி 28, திங்கட்கிழமை)*
**சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு**
**திருதியை காலை 6.36 மணிவரை**
**சதுர்த்தி காலை 6.37 மணி வரை**
**மிருகசீரிடம் பிற்பகல் 1.23 மணிவரை**
**இராகுகாலம் 7.37-9.07 மணிவரை**
**சுபநேரம் 12.07-1.37 மணிவரை**
**சங்கடஹர சதுர்த்தி விரதம், அமிர்தசித்தம்**

**மேடம்** வெற்றிகரமான செய்திகள் வீடு வந்து சேரும் நாள், உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும், நீண்ட நாளைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும்.

**இடபம்** நிதிநிலை உயரும் நாள், நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி நகர்வீர்கள், மாற்றினத்தவர் மகிழ்ச்சியான செய்திகளைக் கொண்டு வந்து சேர்ப்பர், பொது வழியில் புகழ் கூடும்.

**மிதுனம்** இறைவழிபாட்டில் இன்பம் காண வேண்டிய நாள், காணாமல் போன பொருளொன்று கைக்கு கிடைக்கலாம், வாழ்க்கை முன்னேற்றத்திற்கு பெரிதும் பாடுபடுவீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்** இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், பால்ய நண்பர்கள் சந்திப்பால் திடீர் விரயங்கள் ஏற்படலாம், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், குடும்பத்தினர்களை அனுசரித்துச் செல்வீர்கள்.

**சிங்கம்** செவிகுளிரும் செய்திகள் வந்து சேரும் நாள், பெரிய மனிதர்களின் வருகையால் விருப்பங்கள் நிறைவேறலாம், வீட்டிற்கு விலையுயர்ந்த பொருட்களை வாங்குவீர்கள், பொருளாதார நிலை உயர்வடையும்.

**கன்னி** கொள்கைப் பிடிப்போடு செயற்படும் நாள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவிசெய்ய முன்வருவர், கனவு பலிதமுண்டு.

**துலாம்** தடைகள் விலகி தனவரவு பெருகும் நாள், காரிய வெற்றிக்கு நண்பர்கள் கைகொடுத்து உதவ முன்வருவர், தந்தை வ்ழி உறவில் ஏற்பட்ட விரிசல் மறையும், பொருளாதார நிலை உயரவழிவகை செய்வீர்கள்.

**விருச்சிகம்** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், வரவைக்காட்டிலும் செலவு கூடும், உடல் நலனில் கவனம் செலுத்த வேண்டிய நாள், குடும்பத்தில் சிறுசிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும்.

**தனுசு** தாராளமாகச் செலவுகள் செய்து மகிழும் நாள், குடும்பநலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், அரசு வழியில் அனுகூலமுண்டு, குடும்ப சுகமுண்டு.

**மகரம்** மாற்றுக்கருத்துடையோர் மனம் மாறுவர், உற்றார், உறவினர்கள் கைகொடுத்து உதவுவர், உடல்நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், தொழில் முன்னேற்றகரமாக அமையும்.

**கும்பம்** சுப செய்திகள் வந்து சேரும் நாள், பிள்ளைகளால் பெருமைகள் சேர வேண்டிய நாள், வளர்ச்சிப் பாதையை நோக்கி நகர்வீர்கள், தொழில்ரீதியாக புதிய திட்டங்கள் திட்டுவீர்கள்.

**மீனம்** எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள், ஊக்கத்தோடும், உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், தாய் வழி உறவினர்களால் நன்மையுண்டு, வாகன சுகமுண்டு, சுப செலவுகள் அதிகரிக்கும்.

வளவன்

உலக வரலாற்றில்

# 3 வருடங்களில் 97 வீதமான மக்களை மீள்குடியமர்த்தியது இலங்கை மட்டுமே

## மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் புகழாரம்



உலக வரலாற்றில் யுத்தம் நடைபெற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் மூன்று வருடங்களுக்குள் 97 வீதமான இடம் பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றிய நாடு இலங்கையே என மீள் குடியேற்ற அமைச்சின் செயலாளர் யு.டி.பஸ்நாயக்க தெரிவித்துள்ளார்.

மீள்குடியேற்ற அமைச்சின் நிதியுதவியுடன் வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்குட்பட்ட 80 பயனாளிகளுக்கு கடற்தொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று ஆழியவளை கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் மீள்குடியேற்ற அமைச்சு உலக வரலாற்றில் பெரும் சாதனை படைத்துள்ளது. முப்பது வருட கால யுத்தம் முடிவடைந்து மூன்று வருடத்தில் 97 வீதமான மக்களை அவர்களின் சொந்த இடத்தில் மீள் குடியேற்றியுள்ளது. இதேவேளை மெனிக்பாம் போன்ற இடைத்தங்கல் முகாம்களில் பாதிக்கப்பட்ட மக்களைபராமரித்தும் வந்துள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களை சொந்த இடங்களில் மீள்குடியேற்றியதோடு மட்டுமல்லாது அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் பல திட்டங்கள் ஊடாக நிதி உதவி வழங்கி வருகின்றது.

மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரக்கோன் மற்றும் பிரதி அமைச்சர் அ.முரளிதரன் ஆகியோர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ளனர்.

வடமராட்சி கிழக்கைப் பொறுத்தவரை யாழ். மாவட்டத்தில் இந்தப் பிரதேசத்திலேயே இறுதியாக மீள்குடியேற்றம் செய்யப்பட்டது.

யுத்தத்தினால் வன்னிப் பகுதி எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதோ அதேபோன்று வடமராட்சி கிழக்கும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் மக்களை மீள்குடியேற்றுவதில் தாமதம் ஏற்பட்டது.

மக்களுக்கான தேவைகளை கண்டு கொள்வதில் ஆரம்பத்தில் பெரும் பிரச்சினையாக இருந்தது. உதவி அரசாங்க அதிபர் ஊடாக அவை பின்பு நிவர்த்தி செய்யப்பட்டதோடு மக்களின் தேவைகளும் இனங் காணப்பட்டது.

மீள்குடியேற்ற அமைச்சினால் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியிலான கடற்தொழில் உபகரணங்கள் ஒவ்வொரு பயனாளிக்கும் வழங்கப்படுகின்றது. இதன்மூலம் எதிர் காலத்தில் உங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள முடியும்.

இதுதவிர மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவை யாழ். மாவட்டத்தில் மாதிரி உதவி அரசாங்க அதிபர் பிரிவாக மாற்றும் திட்டமும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இத்திட்டம் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதன்மூலம் யாழ். மாவட்டத்தில் சகல வசதிகளையும் கொண்ட ஒரு பிரதேசமாக மருதங்கேணி பிரதேசம் எதிர்காலத்தில் மாற்றப்படவுள்ளது.

அத்தோடு இத்திட்டத்தின் கீழ் வட மாகாணத்தில் 10 பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பகுதிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இதில் இரண்டு பிரதேச செயலாளர்கள் யாழ். மாவட்டத்தை சேர்ந்தவை. இத்திட்டத்தில் உள்வாங்கப்படும் பிரதேச செயலர் பிரிவு யுத்தத்தினால் அதிகமாக பாதிக்கப்பட்ட பிரதேசங்களை உள்ளடக்கியதாக உள்ளது.

இதன்மூலம் வீதி, வீடு, குடி தண்ணீர், மின்சாரம் போன்ற அனைத்து தேவைகளும் பூர்த்தி செய்யப்படும். எனவே, அரசாங்கத்தினாலும் அரசசார்பற்ற நிறுவனங்களினாலும் வழங்கப்படும் வாழ்வாதார உதவிகளை நன்கு பயன்படுத்தி வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## தேசிய மரநடுகை திட்டம்

(சாவகச்சேரி)

தேசிய மரநடுகை திட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணி ஒரு நிமிடத்திற்கு நாடளாவிய ரீதியில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இத்திட்டத்திற்கென நல்லூரில் உள்ள பிராந்திய மரக்கூட்டுத்தாபனத்தின் நடுகைக்கான கன்றுகள் விநியோகிக்கப்படவுள்ளது. இம்மரக்கன்றுகள் பிரதேச செயலர் பிரிவுகள் ரீதியாக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் மூலம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (அ-3-29)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சில்லாலை மேற்கு சாந்தை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத் திருப்பணி சபையின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக உத்தியோகத்தர்கள் தெரிவும் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறுமென திருப்பணி சபையினர் தெரிவித்துள்ளனர். (அ-3)




## உதைபந்தாட்ட இறுதிப் போட்டிக்கு அல்வாய் மனோகரா தெரிவு

(கரவெட்டி)

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக உதைபந்தாட்ட இறுதிப் போட்டிக்கு அல்வாய்மனோகரா அணி தகுதி பெற்றுள்ளது.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்ஸ் இற்கு உட்பட்ட 24 கழகங்கள் பங்குபற்றிய அரையிறுதி ஆட்டம் ஒன்று மைதானத்தில் நடைபெற்றது

இப்போட்டியில் சக்கோட்டை சென்சேவியர் அணியும் அல்வாய் மனோகரா அணியும் மோதியது.

இப்போட்டியில் 1:0 என்ற கோல்கணக்கில் அல்வாய் மனோகரா அணி வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தெரிவாகியது. எதிர்வரும் புதன்கிழமை இரவு 7 மணிக்கு மின் ஒளியில் நடைபெறும் இறுதிப்போட்டியில் அல்வாய் மனோகரா அணியும் நவிண்டில் கலைமதி அணியும் மோதவுள்ளன. (அ-3-24)

## வடமராட்சி கல்வி வலயத்தின் உதைபந்தாட்டப் போட்டியில் தேவரையாளி இந்து தெரிவு

(கரவெட்டி)

வடமராட்சி கல்வி வலயத்தினால் நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டிகளில் 16 வயது,18வயது பிரிவுகளில் தேவரையாளி இந்துக்கல்லூரி அணி சம்பியனாகியுள்ளது.

வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற 16 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் இமையாணன் அ.த.க. அணியை 1:0 என்ற கோல் கணக்கில் தேவரையாளி இந்துக்கல்லூரி அணி வெற்றி பெற்று சம்பியனாகியது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியை 2:0 என்ற கோல்கணக்கில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி வெற்றி பெற்று 3 ஆம் இடத்தைப் பெற்றது.

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற 18வயதுப் பிரிவினருக்கான இறுதிப்போட்டியில் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி அணியை 4:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று தேவரையாளி இந்துக்கல்லூரி அணி சம்பியனாகியது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரி அணியை பனால்டி உதைமூலம் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி 3 ஆம் இடத்தைப் பெற்றது. (அ-3-24)

## டெங்கு ஒழிப்பில் பொலிஸார் தீவிரம்

(பருத்தித்துறை)



வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவில் டெங்கு நோய் ஒழிப்பு நடவடிக்கைகளில் பொலிஸார் முழுமையாக ஈடுபட்டு வருகின்றனர்.

மேற்குறித்த பொலிஸ் பிரிவில் மக்கள் குடியிருப்பு பகுதிகளை துப்புரவாக வைத்திருக்குமாறும் நுளம்பின் பெருக்கத்தை கட்டுப்படுத்துமாறும் வீடு வீடாகச் சென்று தெரிவித்து வருகின்றனர்.

அத்துடன் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் சம்பந்தமான அறிவுறுத்தல்களை வழங்கியதுடன் மக்களிடம் கையொப்பங்களையும் பெற்றுச் செல்கின்றனர்.

அதேவேளை அப்பகுதிகளில் ஏற்படுகின்ற திருட்டுச் சம்பவங்களை கட்டுப்படுத்தவும் ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர்.

அந்த ஆலோசனைகளை பின்பற்றுகின்றார்களா எனவும் கண்காணித்து வருகின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது. (அ-3-10)



மீள்குடியேற்ற அமைச்சின் நிதி உதவியுடன் வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கு உட்பட்ட 80 பயனாளிகளுக்கு கடற்தொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று ஆழியவளை கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் இடம் பெற்றது. இதில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் திருலிங்கநாதன் ஆகியோர் உரையாற்றுவதையும் பயனாளி ஒருவருக்கு மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் யு.டி.பஸ்நாயக்க கடற்தொழில் உபகரணங்களை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட பயனாளிகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:-அலுவலகச் செய்தியாளர்)

# வலி கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.

# கேள்வி அறிவித்தல்-2012

கீழ்க் குறிப்பிடப்படும் சந்தை, இறைச்சிக் கடைகளினை 2012 ஆம் ஆண்டிற்கு (01.01.2012-31.12.2012) குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி :-14.11.2011-28.11.2011
கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் திகதி :-29.11.2011 பி.ப. 12.00 மணிவரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :- 29.11.2011 பி.ப. 02.00 மணி.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியை "தவிசாளர், வலி கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்" எனும் முகவரிக்கும், இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கும் எதிர்வரும் 29.11.2011ஆம் திகதி பி.ப. 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

| தொ. இல. | விபரம் | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் (வரி நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்விப் வைப்புப் பணம் (வரி நீங்கலாக) | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை (வரி நீங்கலாக) | மாதாந்த வாடகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | **அச்சுவேலி உப அலுவகம்** | | | | |
| 01. | அச்சுவேலி பொதுச் சந்தை (துவிச்சக்கரவண்டித் தரிப்பிடம் உட்பட) | 2000.00 | 10,000.00 | 3,531,000.00 | |
| 02. | அச்சுவேலி மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2,000.00 | 193,000.00 | 500.00 |
| 03. | அச்சுவேலி கோழியிறைச்சிக் கடை | 500.00 | 2,000.00 | 25,000.00 | 500.00 |
| 04. | அச்சுவேலி ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 2,000.00 | 42,000.00 | 500.00 |
| 05. | வளலாய் தம்பாலை பொதுச் சந்தை | 500.00 | 2,000.00 | 54,000.00 | |
| | **புத்தூர் உப அலுவலகம்** | | | | |
| 01. | புத்தூர் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2,000.00 | 90,000.00 | 500.00 |
| 02. | புத்தூர் பொதுச் சந்தை | 500.00 | 2,000.00 | 116,000.00 | |
| 03. | புத்தூர் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 300.00 | 500.00 | 8,500.00 | 500.00 |
| 04. | ஆவரங்கால் பொதுச் சந்தை | 500.00 | 1,000.00 | 23,000.00 | |
| | **நீர்வேலி உப அலுவலகம்** | | | | |
| 01. | நீர்வேலி மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2,000.00 | 45,000.00 | 500.00 |
| 02. | நீர்வேலி ஆட்டிறைச்சிக்கடை | 300.00 | 1,000.00 | 10,000.00 | 500.00 |
| 03. | நீர்வேலி மீன் சந்தை | 300.00 | 1,000.00 | 10,000.00 | |
| 04. | நீர்வேலி பொதுச் சந்தை | 300.00 | 1,000.00 | 10,000.00 | |
| | **கோப்பாய் உப அலுவலகம்** | | | | |
| 01. | கோப்பாய் வடக்கு மாட்டிறைச் சிக் கடை | 500.00 | 2,000.00 | 90,000.00 | 500.00 |
| 02. | கோப்பாய் வடக்கு ஆட்டிறைச் சிக் கடை | 300.00 | 1,000.00 | 10,000.00 | 500.00 |
| 03. | இருபாலை சந்தி மாட்டிறைச் சிக்கடை | 500.00 | 2,000.00 | 300,000.00 | 500.00 |
| 04. | இருபாலை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1,000.00 | 20,000.00 | 500.00 |
| | **உரும்பிராய் உப அலுவகம்** | | | | |
| 01. | உரும்பிராய் மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2,000.00 | 105,000.00 | 500.00 |
| 02. | உரும்பிராய் ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 2,000.00 | 68,000.00 | 500.00 |
| 03. | உரும்பிராய் மத்திய சந்தை | 500.00 | 2,000.00 | 35,000.00 | |
| 04. | ஊரெழு மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2,000.00 | 56,000.00 | 500.00 |
| 05. | ஊரெழு ஆட்டிறைச்சிக் கடை (இடத்தினை தாங்கள் ஒழுங்கு செய்தல், பொதுசுகாதார பரிசோதகரின் அனுமதியுடன்) | 500.00 | 1,000.00 | 20,000.00 | |

01. சந்தையிலிருந்து 01 கி.மீற்றர் சுற்றாடலில் மீன், மரக்கறி விற்பது தடை செய்யப்பட்டுள்ளது.
02. கேள்விப் பத்திரங்களைப் பெற விரும்புபவர்கள் தத்தமது பிரதேச கிராம சேவையாளர்களின் வதிவிடச் சான்றிதழ், கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் தலைமை அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.
03. கேள்விப்படிவக் கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு 12% பெறுமதி சேர் வரியும் 2% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியும் காலத்துக்குக் காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரியும் செலுத்தப்படவேண்டும்.
04. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுனராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
05. இறைச்சிக் கடைக்கு விண்ணப்பப்படிவங்கள் பெறுபவர்கள் தங்களது முன் அனுபவத்தை நிருபிக்கும் கடிதமும் கடை நடாத்திய பிரதேச சபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லை என உறுதிப்படுத்திய கடிதமும் சமர்ப்பித்தல் வேண்டும்.
06. ஆகக்குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
07. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோ அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
08. கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**வலி கிழக்கு பிரதேசசபை,**
**தலைமை அலுவகம், புத்தூர்.**
**11.11.2011**

**திரு. அன்னலிங்கம் உதயகுமார்,**
**தவிசாளர்.**

(ஜ-4956)

# பண்டிகை காலத்தின் போது மிக அவதானத்துடன் இருங்கள்

## நுகர்வோர் அதிகாரசபை மக்களுக்கு அறிவுரை

எதிர்வரும் பண்டிகை காலத்தில் சந்தை நடவடிக்கைகள் தொடர்பாக மிகவும் அவதானத்துடன் இருக்குமாறு நுகர்வோர் அதிகாரசபை மக்களை கேட்டுள்ளது.

பொருட்களை விற்பனை செய்யும் போது இடம்பெறும் முறைகேடுகளைத்தவிர்ப்பது இதன் நோக்கமாகும் என்று அதிகார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

காலாவதியான உணவுப் பொருட்களின் விற்பனை விலை பற்றிய விபரத்தை காட்சிப்படுத்தாமல் இருத்தல் நிர்ணயிக்கப்பட்ட எடையை கொண்டிருக்காது பொருட்களை விற்பனை செய்தல் போன்ற தவறுகள் தொடர்பில் சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

இந்த வருடம் அதிகாரசபை 35 ஆயிரத்திற்கு மேற்பட்ட சுற்றுவளைப்புக்களை மேற்கொண்டுள்ளது.

இதன்மூலம் சுமார் 75 கோடி ரூபா தண்டப்பணமாக அறிவிடப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)

# இலங்கைக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 45 கோடி ரூபா நிதியுதவி

இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி மேலும் ஒரு தொகை நிதியை வழங்கவுள்ளது.

உட்கட்டமைப்பு வசதியை மேம்படுத்துவதற்காக அடுத்த வருடம் நடுப்பகுதிகளில் இந்த நிதி கிடைக்கப் பெறவுள்ளது.

மேல் மாகாணத்தில் 9 உள்ளூராட்சி மன்றங்களின் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 45 கோடி ரூபாவிற்கு மேற்பட்ட தொகையை வழங்கவுள்ளதாக மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொழும்பு மாவட்டங்களின் உள்ளூராட்சி மன்றங்களினது புதியதுறை நிதிகளுக்கு விளக்கமளிக்கும் மாநாடு அடுத்த மாதம் முதல் வாரத்தில் இடம்பெறும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# நல்லிணக்க ஆணைக்குழு மற்றும் நோர்வேயின் அறிக்கைகளை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்

கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை சில தினங்களில் வெளிவரவுள்ள நிலையில் இலங்கையில் இடம்பெற்ற சமாதான பேச்சுவார்த்தைகள் தொடர்பில் நோர்வே அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளிவந்ததும் அதில் உள்ள விடயங்களையும் நோர்வே வெளியிட்டுள்ள அறிக்கையையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியுள்ளது என்று பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரும் மனித உரிமைகள் குறித்த ஜனாதிபதியின் விசேட தூதுவருமான மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையையும் நோர்வேயின் அறிக்கையையும் ஒப்பிட்டுப் பார்த்த பின்னரே எதனையும் கூற முடியும். முக்கிய மூன்று விடயங்களை இதன்போது நாம் பார்க்க வேண்டியுள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ-2)

# அரசினதும் த.தே.கூட்டமைப்பின் பேச்சுக்கள் வெற்றி பெறும்

## அமைச்சர் தினேஷ் நம்பிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளின் போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பானது யதார்த்தத்தைப்புரிந்து கொண்டு ஆரோக்கியமான பங்களிப்பை வழங்கும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

அரசாங்கம், கூட்டமைப்பு ஆகியவற்றுக்கு இடையில் இடம்பெறும் பேச்சுக்கள் வெற்றிபெறும் என்றும் நம்புகின்றோம் என ஆளும் கட்சியின் பிரதம கொரடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்க் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் அர்ப்பணிப்புடனேயே இருக்கின்றது.

அந்தவகையில் கூட்டமைப்புடன் இடம்பெறும் பேச்சுவார்த்தையின் தொடராக அடுத்து இடம்பெறும் பேச்சுவார்த்தையை குறிப்பிட முடியும். இந்த பேச்சுவார்த்தை சிறந்த பலனைத் தரும் என்று எதிர்பார்க்கின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் மரியாம்பிள்ளை எட்வின் யோசப்

(இளைப்பாறிய கல்வித்திணைக்கள உத்தியோகத்தர்)

மலர்வு 06.12.1944 உதிர்வு 15.10.2011



அன்னையவள் தந்த பிரிவுத்துயர் மாறுமுன்
இம்மையிலே எமைத் தவிக்கவிட்டு
இறைவனடி சேர்ந்ததேனோ?
தாயவள் அங்கு நலம் தானோ?
முத்தாக முதலுதித்து சோதரர் நாம் பரிதவிக்க
பாதிவழி பறந்ததேனோ?
கொண்டவள் பெற்றோருடன் பரமன் நிழல்
இளைப்பாற இறையவனை இறைஞ்சுகிறோம்.

88/2, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

இவரின் பிரிவால் துயருறும்,
பிள்ளைகள், சகோதரர்,
உற்றார், உறவினர் (சில்லாலை).

(6793)

# இத்தாலியில் வசிக்கும் இலங்கையர் பிரச்சினை குறித்து கவனமெடுங்கள்

## அந்நாட்டுக்கான இல. தூதுவரிடம் ஜயலத் எம்.பி. வேண்டுகோள்

(கொழும்பு)

தமது எதிர்கால நல்வாழ்விற்காக இத்தாலி வந்து இத்தாலியிலேயே வாழ்ந்துவரும் இலங்கையர்கள் தொழிலில்லாமலும் சட்டபூர்வமான ஆவணங்கள் இன்மையினாலும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகிறார்கள்.

இப்பிரச்சினைகள் குறித்து இத்தாலிய அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்து இராஜதந்திர நடவடிக்கைகள் மற்றும் சிநேக பூர்வமான அணுகுமுறைகளினாலும் இவற்றைத் தீர்த்து வைப்பீர்கள் என நம்புகின்றேன் என இத்தாலிக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள அசித்த பெரேராவுக்கு ஒக்டோபர் 26ஆம் திகதி திகதியிட்டு அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் ஐ.தே.க. பிரதிப் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

அசித்த பெரேரா இத்தாலிக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளமை குறித்து தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டுள்ள அவர் அக்கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தாங்கள் இத்தாலி வாழ் இலங்கையர்கள் சம்பந்தப்பட்டமட்டில் பாரிய சவாலையும் பெரும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டுள்ளீர்கள். அவர்களுடைய அபிலாசைகளையும் தேவைகளையும் தாங்கள் பூர்த்தி செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு .

கொரியாவில் தாங்கள் பணியாற்றுகையில் அங்கு வாழ்ந்த இலங்கையர்களின் நலன்களுக்காக ஆற்றியசேவைகளை நன்கறிவேன்.

இவ்வாறு அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ள ஜயலத் ஜயவர்த்தன, இத்தாலி வாழ் இலங்கையர்களின் பூரண விபரங்களடங்கிய கணக்கெடுப்பொன்றினையும் நடத்தும்படி இத்தாலிக்கான புதிய இலங்கைத்தூதுவர் அசித்த பெரேராவைக் கேட்டுக்கொண்டுள்ளார். (அ-2)

# பாதுகாப்பு அமைச்சின் பணிப்புரைக்கு அமையவே பொலிஸ் பதிவு நடைபெறுகிறது

பொலிஸ் பதிவு மலையகத்தில் மட்டுமன்றி நாட்டின் சகல பகுதிகளிலும் மேற் கொள்ளப்படுகின்றது.

இதனால் எவரும் அச்சமடையத் தேவையில்லையென ஹற்றன் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியவை வருமாறு,

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் பணிப்புரைக்கிணங்க பிரதேச செயலாளர்களினால் கிராம உத்தியோகத்தர்கள் மூலம் கிராமங்கள், தோட்டங்கள், நகரங்கள் என்பவற்றில் இந்த விபரக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுகிறது.

அதேவேளை, பாதுகாப்பு அமைச்சின் பணிப்புரைக்கமைய பொலிஸாரும் அச்சடிக்கப்பட்ட படிவங்கள் மூலமும் இந்த விபரக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுகிறது.

இரண்டு கணக்கெடுப்புக்களும் ஒன்றுக்கொன்று சமனாக உள்ளதா என்பதை ஒப்பிட்டுப் பார்ப்பதே இதன் நோக்கம் என தெரிவிக்கப்படுள்ளது.

நம்பகத் தன்மையை உறுதிப்படுத்தவே இந்த கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்த பொலிஸ் பதிவு படிவத்தில் வீட்டின் பிரதான குடியிருப்பாளர், அவரது வயது, அடையாள அட்டை, நிரந்தர முகவரி, வீட்டிலுள்ளவர்கள் பற்றி விபரங்கள் என்பன கோரப்பட்டுள்ளன.

அத்துடன் வீட்டில் தங்கி வாழ்பவர்களின் விபரங்கள், வீட்டில் வாடகைக்கு இருப்பவர்களின் விபரங்கள் என்பனவும் கேட்கப்பட்டுள்ளன.

சனத்தொகை கணக்கெடுப்புக்கு புறம்பாக இந்த விபரங்கள் கோரப்பட்டுள்ளமை மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (அ-2)

# நாளாந்தம் மது அருந்துபவர்களுக்கு மார்பக புற்றுநோய் ஏற்படும் அபாயம்

நாளாந்தம் மது அருந்துபவர்களுக்கு மார்பகப்புற்று நோய் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமென அமெரிக்க மருத்துவ ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

28 வயது மதிக்கத்தக்க சுமார் ஒரு இலட்சத்து 5 ஆயிரத்து 986 பேரிடம் இது தொடர்பான ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

அற்ககோலின் பாவனையினைக் குறைப்பதன் மூலம் புற்றுநோயைக் கட்டுப்படுத்தலாம் என்றும் மருத்துவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை வருடாந்தம் சுமார் ஒரு இலட்சம் பெண்கள் மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்படுவதாக தகவல்கள் குறிப்பிடுகின்றன. இதில் 281 பெண்கள் ஒருபோதும் மது அருந்தாதவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# தங்கக் காசுகள் என கூறி பிக்குவிடம் பண மோசடி

(கொழும்பு)

புதையலில் தோண்டியெடுக்கப்பட்ட தங்கக்காசுகளெனக் கூறி போலி தங்கக்காசுகளை வழங்கி பௌத்த பிக்கொருவரை ஏமாற்றி ஒன்பது இலட்சம் ரூபா பண மோசடி செய்ததாக தெரிவிக்கப்படும் சந்தேகநபர்கள் மூவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பௌத்த பிக்குவும் அவரது தந்தையும் அநுராதபுரம் தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்துள்ளதாக அநுராதபுரம் தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் காமினி ஜயசேன கூறினார்.

தலாவ பகுதியிலுள்ள இடமொன்றில் தங்கக்காசுகளைப் பெற்றுக்கொள்ள வருமாறு மேற்படி பௌத்த பிக்குவை சந்தேகநபர்கள் அழைத்துள்ளனர். இந்த நிலையில் மேற்படி பௌத்த பிக்கு தனது தந்தையை அழைத்துக் கொண்டு பதினொரு இலட்சம் ரூபா பணத்தையும் எடுத்துக் கொண்டு குறித்த இடத்திற்கு சென்றுள்ளார்.

இதன்போது ஆயிரத்து 300 கிராம் தங்கக்காசுகளை சந்தேகநபர்களிடமிருந்து பெற்ற பௌத்த பிக்கு அவற்றினை பரிசோதித்துக் கொண்டிருந்த போது சந்தேக நபர்களில் ஒருவர் எதிர்பாராத விதமாக பௌத்த பிக்குவின் கையிலிருந்த பணத்தை பறித்துக் கொண்டு ஓடியுள்ளார்.

இவ்வாறு பறித்துக் கொண்டு ஓடும்போது இரண்டு இலட்சம் ரூபா பணம் தவறிக் கீழே வீழ்ந்ததாகவும் அப்பணத்தை மேற்படி பௌத்த பிக்கு எடுத்துக் கொண்டதாகவும் அவர்கள் செய்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார். (அ-2)

# சண்டிலிப்பாய் கோட்டத்தின் மாற்று திறனுடையோருக்கான போட்டி முடிபுகள்

சண்டிலிப்பாய் கோட்டப் பாடசாலைகளிடையே மாற்றுத்திறனுடைய மாணவர்களிற்கான போட்டிகள் அண்மையில் நடைபெற்றது.

அப்போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களின் விபரம் ஆசிரிய ஆலோசகரும் விசேட கல்விப் பிரிவு நிர்வாகியுமான என். முருகானந்தனால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் விபரம் வருமாறு,

**பேச்சு**

**பிரிவு I**

ப.பவிசன் (யா/ஆனைக்கோட்டை றோ.க), அ.மேரி லக்சிகா (யா/மாரீசன் கூடல் றோ. க), அ.றஜீபனா (யா/ பண்டத்தரிப்பு ஜசிந்தா. றோ.க),

**பிரிவுII**

யோ. பௌவிந்தன் (யா/ ஆனைக்கோட்டை. றோ.க), ம. சாளினி (யா/நவாலி அட்டகிரி சை.வி), க. நிரூபன் (யா/ சண்டிலிப்பாய் இந்து கல்லூரி)

**பிரிவு III**

பா.திசாந்தி (யா/ஆனைக்கோட்டை றோ.க), பா. வதனி (யா/இளவாலை கன்னியர் ம), க. லக்சியப்பிரியா (யா/பண்டத்தரிப்பு பெண்கள் பாட.)

**கட்டுரை**

**பிரிவு I**

து.விதுசன் (யா/ சில்லாலை. றோ. க.த.), த. தேவதனுசியா (யா/சண்டிலிப்பாய் இந்து கல்லூரி), அ.றபீக்சன் (யா/பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.)

**பிரிவு II**

பு.கார்த்திகா (யா/இளவாலை கன்னியர் ம.), அ.லக்சிகா (யா/ நவாலி அட்டகிரி சை.வி), அ.கயனிதா (யா/பண்டத்தரிப்பு பெண் கள் கல்லூரி),

**பிரிவுIII**

ம.நிஷாந்தினி (யா/பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலை), யோ. சுபாஜினி (யா/இளவாலை கன்னியர் மடம்), வே. திபேதினி (யா/ ஆனைக்கோட்டை. றோ.க),

**தனிஇசை**

**பிரிவுI**

செ. தெய்வரூபி (யா/பண்டத்தரிப்பு பெண்கள் கல்லூரி), அ.பவுஸ்தினா (யா/ மாரீசன் கூடல் றோ.க.), செ.விதுஷா (யா/நவாலி அட்டகிரி சை.வி),

**பிரிவுII**

யோ. பிரந்ஜீவன் (யா/மானிப்பாய் இந்து கல்லூரி), யோ. டினுஜா (யா/இளவாலை கன்னியர் மடம்), யோ. நிசாந்தினி (யா/ நவாலி அட்ட கிரி சை.வி), க.நிலோஜினி (யா/ சில்லாலை றோ.க.த.க. வித்தி

**பிரிவு III**

த.சலூயர (யா/ நவாலி ம.வி), போ. அம்சனா (யா/ ஆனைக்கோட்டை. றோ.க), தி.தினியா (யா/ பண்டத்தரிப்பு பெண்கள் பாட.), ப.திரேசியா குமுதினி (யா/ இளவாலை கன்னியர் மடம். ம.வி.)

**குழு இசை**

**பிரிவுI**

(யா/ சில்லாலை றோ.க.த.க.பாடசாலை), (யா/பெரியவிளான் றோ.க.த.க. பாடசாலை), (யா/ மாதகல் சென்தோமஸ் வித்தியாலயம்)

**பிரிவுII**

(யா/பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலை), (யா/சில்லாலை. றோ.க.த.க.பாடசாலை),(யா/ நவாலி அட்டகிரி சைவ வித்தி

**பிரிவுIII**

( யா/நவாலி அட்டகிரி சைவ வித்தி, (யா/ பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.), (யா/ ஆனைக் கோட்டை. றோ.க),

**தனி நடனம்**

**பிரிவுI**

க.டிசானி (யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), ஜே.ஜனுசியா (யா/ பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலை), சி.யூட்டினோஜன் (யா/ மாதகல் சென் ஜோசப் வித்தி.), ஜெ. கிருசாந் தினி (யா/ ஆனைக்கோட்டை றோ.க.)

**பிரிவு III**

லோ. கயனா (யா/ பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலை), கி.லங்ஜெயரூபன் (யா/ பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ. க.),

**குழு நடனம்**

**பிரிவுI**

(யா/ மாதகல் சென்ஜோசப் ம. வித்தியாலயம்), (யா/ மாதகல் சென்தோமஸ் வித்தியாலயம்), (யா/பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலை),

**பிரிவுII**

(யா/பண்டத்தரிப்புபெண்கள் பாடசாலை), (யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை), (யா/ மாதகல் சென்ஜோசப் வித்தியாலயம்),

**நாடகம்**

(யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி), (யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை) (யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி)

**வில்லிசை**

(யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), (யா/ இளவாலை கன்னியர் மடம்.ம.வி), (யா/ ஆனைக்கோட்டை. றோ.க.த.க.வித்தி. (அ)

# கலந்துரையாடல்


(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கட்டட திணைக்களத்தின் கீழ் இயங்கும் என்றிப் திட்டத்தினால் முன்னெடுக்கப்படும் கட்டட வேலைத்திட்ட ஒப்பந்த காரர்களுக்கான முக்கிய விடயங்கள் தொடர்பான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை காலை 11 மணிக்கு யாழ். நூலகப் பகுதியில் அமைந்துள்ள வடமாகாண சபை கேட்போர் கூடத்தில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திர சிறி தலைமையில் நடைபெறும். (அ-2)



யாழ். எயிட் நிறுவனத்தினரால் கோப்பாய் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் நலிவுற்ற மாணவர்களுக்கு உதவி வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கலாநிதி எஸ்.பிரபாகர் உரையாற்றுவதையும் யாழ். பல்கலைக்கழக இரசாயனவியல் விரிவுரையாளர் கலாநிதி திருமதி பிரபர்கர் யசோதா மாணவிக்கு உதவிப் பொருட்கள் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# நீதி மற்றும் நியாயம் மேலோங்கும் சமூகமொன்றை காண்பதே அவசியம்



## கரு ஜயசூரிய தெரிவிப்பு

நீதி மற்றும் நியாயம் மேலோங்குகின்ற சமூகம் ஒன்றை காண்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும் என ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித்தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்று முற்பகல் பேராயர் பேரருட்திரு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் கொழும்பு பேராயரின் உத்தி யோகபூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் நாட்டின் தற்போதைய நிலைமைகுறித்து அவர் பேரருட்திரு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகைக்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

இதேவேளை எதிர்வரும் சில தினங்களுக்குள் மகாநாயக்க தேரர்களையும் சந்தித்து கலந்துரையாட எண்ணியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பௌத்த தலைவர்கள், தேரர்கள் மற்றும் இந்து, முஸ்லிம் தலைவர்களையும் ஏற்கனவே சந்தித்து தற்போதைய நிலைமைகள் குறித்து கலந்துரையாடியுள்ளதாக கரு ஜயசூரிய இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# வடக்கு-கிழக்கு அரச வனப்பகுதி காணிகள்

# தனிநபருக்கோ அரச தரப்புக்கோ வழங்கப்படமாட்டாது-யாப்பா

(கொழும்பு)

வடக்கு,கிழக்கு மாகாணத்திலுள்ள அரச காணிகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகள் தனிநபர்களுக்கோ,அரச தரப்புகளுக்கோ வழங்க முடியாது என சுற்றாடல் வளத்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை அஷ்டப் நகரில் இராணுவத்தினர் அமைக்கும் முகாமிற்கு எதிராக அப்பிரதேசமக்கள் நடத்திய போராட்டம் தொடர்பில் அமைச்சர் கருத்துத் தெரிவிக்கையிலேயே, இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் அப்பிரதேசத்தில் அரச அல்லது தனியார் கட்டடங்களை அமைப்பதற்கு தனது அமைச்சு அனுமதி வழங்கவில்லை எனவும் தேசிய நலனுக்காக இராணுவ முகாமொன்றை அமைப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு கோரும் பட்சத்தில் அதனைக் கருத்தில் கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பள்ளிக்காடு பிரதேசத்திலுள்ள அரச காணிகளை தமது நிலங்கள் என ஒவ்வொரு வருடமும் சிலர் தெரிவிப்பதாகவும் அம்பாறை மாவட்ட வனத்துறை அதிகாரி லலித் கமகே தெரிவித்துள்ளார்.

மக்கள் குறித்த நிலத்திற்கு போலியான ஆவணங்களைச் சமர்ப்பிப்பதாகவும் மாவட்ட செயலாளரின் உதவியுடன் இதற்கெதிராக நடவடிக்கை எடுக்கவுள்ளளேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி இராணுவ முகாம் அரச காணியில் அமைக்கப்பட்டுள்ளது எனவும் அப்பகுதியில் புராதன மற்றும் மத முக்கியத்துவம் வாய்ந்த தலங்கள் இருப்பதாகவும் அதனைப் பாதுகாப்பதற்கே இராணுவ முகாம் அமைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# அடுத்த வருடம் டிஜிட்டல் தொழில்நுட்ப தொலைக்காட்சிகளை அமைக்க திட்டம்

## ஊடகத்துறை அமைச்சு தகவல்

டிஜிட்டல் தொழில்நுட்பத்துடனான தொலைக்காட்சிகளை மக்கள் கொள்வனவு செய்வதனை ஊக்குவிப்பதற்கான திட்டங்களை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக ஊடகத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

அடுத்த வருடம் முதல் டிஜிட்டல் தொழில்நுட்பத்துடனான தொலைக்காட்சி ஒளிபரப்புகளை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் டபிள்யூ.வி.கனேகல குறிப்பிட்டுள்ளார்.

டி.வி.பி.ரி.2 என்ற தொழில்நுட்பத்துடனான தொலைக்காட்சி ஒளிபரப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அத்துடன் முதலில், மேல் மற்றும் வட மாகாணங்களில் இந்த ஒளிபரப்பு ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஊடக அமைச்சின் செயலாளர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏனைய மாகாணங்களிலும் விரைவில் இது நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். (அ-2)

# நாட்டில் உவர் நீர் கலக்கும் சாத்தியம்

## கரையோரவள முகாமைத்துவ திணைக்களம்

(கொழும்பு)

கடல் நீர் மட்டம் உயர்வடைந்துள்ளதன் காரணமாக நாட்டினுள் உவர்நீர் கலக்கும் தன்மை அதிகரித்துள்ளதாக கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவதிணைக்களம் தெரிவிக்கின்றது.

இதற்கு தீர்வாக பசுமையான கடற்கரைகளை [illegible]க்கும் தி[illegible]ட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள[illegible] திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அனில் பிரேம[illegible]த்ன குறிப்பிட்டார்.

இதனை நீண்டகால திட்டமாக முன்னெடுப்பதற்கு எண்ணியுள்ளதாகவும் அவர் கூறினார்.

பசுமையான கடற்கரையை உருவாக்குதல் மற்றும் அதனை பராமரித்தல் பணிகளில் கடற்படையினரதும் பிரதேச மக்களினதும் பங்களிப்பை பெற்றுக் கொள்ள எண்ணியுள்ளதாக கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# மட்டு.வில் நவீன முறையில் இறால் வளர்க்கும் திட்டம் நடைமுறைக்கு

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நவீன முறையில் இறால் வளர்க்கும் திட்டங்கள் அமுல்படுத்தப்படவுள்ளதாக மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். இது தொடர்பாக நன்னீர் இறால் வளர்க்கும் நிலையம் ஒன்று மட்டக்களப்பு புதுக்குடியிருப்பில் உத்தி யோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இது தவிர குளத்தில் இறால் வளர்க்கும் நிலையங்கள் வட்டவான் மற்றும் வாகரை ஆகிய இடங்களிலும் அமை க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

நன்னீர் இறால் வளர்ப்பிற்காக 49 ஹெக்டேயர் விஸ்தீரணமான நீர்ப்பரப்பு அடையாளம் காணப்பட்டு ள்ளதாக தெரிவித்த அவர் இந்த திட்டங்களு க்கு 27 மீனவ குடும்பங்கள் ஈடுபடுத்தப்ப டவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை ஏற்கனவே தற்போது ஓட்டமாவடி, வாழைச்சேனை மற்றும் கொக்கட்டிச்சோலை ஆகிய பிரதேசங்களில் 150 ஏக்கர் நீர்ப்பரப்பில் இறால் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வருடாந்தம் 2 கோடி இறால் உற்பத்தி செய்ய முடியும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதற்காக 8 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.(அ-2)

# ஈ-ஓய்வூதிய முறைமை அடுத்த வருடம் முதல் நடைமுறைக்கு

## ஓய்வூதிய திணைக்கள ஆணையாளர்

ஓய்வூதியக்காரர் ஒருவர் காலமான பின்னர் அந்தத்தொகையினை விதவைகள் மற்றும் ஆதரவற்றோருக்கான ஓய்வூதிய முறைமைக்கு மாற்றப்படுகின்ற ஈ-ஓய்வூ திய முறை தயாரிக்கப்பட்டுள்ளதாக ஓய்வூதியத்திணைக் களம் குறிப்பிடுகின்றது.

ஈ-ஓய்வூதிய முறைமையை அடுத்த வருடம் முதல் நடைமுறைப்படுத்துவதாக ஓய்வூதியத்திணைக்கள ஆணையாளர் கே.ஏ திலகரத்ன கூறினார்.

இந்தமுறைமை குறித்து தற்போது ஆரம்பகட்ட பரீட்சார்த்த நடவடிக்கைகள் இடம் பெறுவதுடன் அதன்மூலம் அனுகூலங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஜனவரி மாதம் முதல் ஈ-ஓய்வூதிய முறைமையை முன்னெடுப்பதில் எவ்வித பிரச்சினையும் ஏற்படமாட்டாதென ஓய்வூதியத் திணைக்கள ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்க ஊழியர் ஒருவர் ஓய்வு பெற்ற பின்னர் அதற்கடுத்த மாதம் முதல் ஈ-ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (அ 2)

# பூநகரியில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை பருவமழையால் அழிவு

## விவசாயிகள் கவலை

(கொழும்பு)

கிளிநொச்சிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கையில் சுமார் ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்கள் அழிவடைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே தமக்கு இதற்கான நிவாரணத்தை பெற்றுக் கொடுக்கும் படி விவசாயிகள் கமநல சேவை நிலையத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி பூநகரிப் பகுதியின் கூடுதலான பகுதியில் இவ்வாண்டு காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்படி பகுதிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ள காலபோக நெற்செய்கையில் ஆயிரம் ஏக்கர் வரையான நெற்பயிர்கள் சீரற்ற காலநிலை மற்றும் பருவமழையினால் அழிவடைந்துள்ளதாக கமநல சேவை நிலைய புள்ளி விபரங்களில் இருந்து தெரியவருகின்றது.

அதாவது 12 ஆயிரத்து 600 ஏக்கர் நிலப்பரப்பில் செய்கைகள் மேற்கொள்ளப்படவிருந்தன. இதில் 8 ஆயிரத்து 400 ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதில் தற்போது பெய்த பருவமழை மற்றும் சீரற்ற காலநிலை காரணமாக சுமார் ஆயிரம் ஏக்கர் வரையில் நெற்செய்கை அழிவடைந்துள்ளது.

இவை விதைப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட நாளில் இருந்து ஏற்பட்ட வெள்ளம் காரணமாகவே முளைக்கவில்லை எனவும் இந்த ஆயிரம் ஏக்கர் நிலப்பகுதிகளும் மீள விதைப்பு செய்ய வேண்டியுள்ளதாகவும் இதனை மீளவும் விதைப்பதற்கு விதை நெல்லைப் பெற்றுத் தருமாறும் விவசாயிகள் கமநல சேவை நிலையத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சில இடங்களுக்கு மீள விதைக்கப்பட்ட நெல் வயல்களும் அழிவடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். நெற்செய்கை இவ்வாறு அழிவடைந்துள்ளமையால் தமக்குப் பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் கூறினார்கள்.

இதேவேளை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் சீரற்ற காலநிலை மற்றும் மழை வெள்ளம் காரணமாக ஏற்பட்ட நெற்செய்கை அழிவு குறித்த விபரங்கள் தற்போது திரட்டப்பட்டு வருவதாகவும் அவற்றின் முழுமையான விபரம் இதுவரை கிடைக்கவில்லை எனவும் கமநல சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ-2)

# வண்ணமோட்டையில் மருத்துவமுகாம்

(கொழும்பு)

சுகாதார அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மருத்துவ முகாம் ஒன்று மன்னார் கல்வி வலயத்துக்குட்பட்ட வண்ணமோட்டை பாடசாலையில் நடைபெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை முதல் மாலை வரை நடத்தப்பட்ட இந்த வைத்திய முகாமில் சுமார் 100 வைத்தியர்கள் கலந்து கொண்டதாக தெரிவித்துள்ளார்.

மீள்குடியேற்றக் கிராமங்களில் இருந்து வருகை தந்த ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் இந்த வைத்திய முகாம் மூலம் நன்மை அடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சகல மருத்துவ தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் இந்த மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை விசேட அம்சமாகும். மருத்துவ முகாமில் கலந்துகொண்ட மக்களுக்குத் தேவையான ஏனைய அனைத்து வசதிகளையும் 54 ஆவது இராணுவப் படைப் பிரிவினர் மேற்கொண்டிருந்தனர். (அ-2)

# வாக்காளர் இடாப்பு சீரமைப்பு குறித்து தெளிவூட்டும் நடவடிக்கை ஆரம்பம்

## பவ்ரல் அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மக்களுக்கு 2011 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு சீரமைப்பு குறித்து தெளிவுபடுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தப் பிரதேசங்கள் உள்ளிட்ட பல இடங்களில் வாக்காளர் இடாப்பு குறித்து மக்கள் தெளிவடையவில்லை எனவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

வாக்காளர் இடாப்பு குறித்து தெளிவுபடுத்துவதற்காக யாழ்ப்பாணத்தின் 3 நிலையங்களை அமைத்துள்ளதாகவும் 2011 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலில் பெயர் விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து மக்களிடம் கேட்டறிந்து மேலதிக நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாகவும் அவ் அமைப்பு தெரிவித்துள்ளது.

2011 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர் பட்டியல் மீளாய்வு குறித்த தெளிவூட்டல்களை மேற்கொள்ள வடபிராந்தியத்தில் நாளை செவ்வாய்க்கிழமை மாநாடு ஒன்று இடம்பெறவுள்ளதாகவும் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் குறித்த தெளிவூட்டல் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அவ் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டி ஆராச்சி தெரிவித்தார்.

அந்த மாநாட்டுக்காக குறித்த மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்ட செயலாளர்கள் மற்றும் அரசியல் கட்சி பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர் எனவும் அத்துடன் தேர்தல்கள் செயலகத்தின் அதிகாரிகள் சிலரும் பங்கேற்கவுள்ளதாக பணிப்பாளர் குறிப்பிட்டார். (அ-2)

# உலக நீரிழிவு ஒழிப்பு தினத்தை முன்னிட்டு பாதயாத்திரை பேரணி

உலக நீரிழிவு ஒழிப்பு தினத்தை முன்னிட்டு பாத யாத்திரைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இம்முக்கிய நிகழ்வில் ஜனாதிபதியின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ உட்பட சுகாதார துறையைச் சேர்ந்த அமைச்சர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வுகள் தொடர்பாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் பாலித மஹிபால தகவல் தெரிவிக்கையில்,

உலக நீரிழிவு ஒழிப்பு தினம் இன்றாகும். அதனை முன்னிட்டு இன்றைய தினம் பாதயாத்திரைகள் இடம்பெறவுள்ளன.

அவற்றில் ஜனாதிபதியின் பாரியார் மற்றும் சுகாதாரத்துறை அமைச்சர்கள் ஆகியோர் நகரசபை மண்டப வளாகத்திலிருந்து கலந்து கொள்வதாக அவர் தெரிவித்தார்.

விசேடமாக இதன்போது பொதுமக்களை தெளிவுபடுத்தும் படி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் சனத்தொகையில் 10 சதவீதமானோர் நீரிழிவு நோய் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தகவல் வழங்கினார். (4-2)

# ஏற்றுமதிசெய்யப்படவிருந்த கழிவுத்தேயிலை கைப்பற்றப்பட்டது

(கொழும்பு)

ஏற்றுமதி செய்வதற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த 86 ஆயிரம் கிலோ கிராம்களுக்கும் அதிகமான கழிவுத் தேயிலையை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இலங்கை தேயிலை சபைக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய களஞ்சிய சாலையில் வைத்து இந்த கழிவுத் தேயிலை தொகை கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர்.

சீதுவைப் பகுதியில் உள்ள களஞ்சியசாலையில் இருந்து 69 ஆயிரம் கிலோ கிராம்களுக்கும் அதிகமான கழிவுத் தேயிலை கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு கிடைக்கப் பெற்ற தகவல்களுக்கு அமையக் கொட்டுகொட பகுதியில் உள்ள களஞ்சியசாலை ஒன்றிலிருந்து 17 ஆயிரத்து 224 கிலோகிராம் கழிவுத் தேயிலை கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கழிவுத் தேயிலையை ஏற்றுமதி செய்வதற்காக போலியாக தயாரிக்கப்பட்ட ஆவணங்களும் இதன் போது கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தப் போலி ஆவணங்களை தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட 28 இறப்பர் முத்திரைகள் உள்ளிட்ட போலி ஆவணங்கள் பலவும் கைப்பற்றப்பட்டதாக குற்றப் புலனாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ-2)

# பொதுநலவாய போட்டி பிரசாரத்திற்கு 400 மில். ரூபாவை இழந்தது இலங்கை

## சண்டே லீடர் தகவல்

(கொழும்பு)

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட பல மில்லியன் ரூபாய்கள் முதலிடப்பட்ட முயற்சி ஒன்று தோல்வியடைந்துள்ளதாக சண்டே லீடர் தெரிவித்துள்ளது.


பொதுநலவாய நாடுகளின் 2018 ஆம் ஆண்[illegible] [illegible]யவிளை[illegible]ாட்டுப் போட்டிகளை இலங்கையின் [illegible]ம்பாந்தே[illegible]ட்டையில் நடத்துவதற்கான வாக்கெடுபபு கட[illegible]த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதற்காக அரசாங்கத்தினால் சுமார் 300 தொடக்கம் 400 மில்லியன் ரூபாய்கள் வரை செலவிடப்பட்டன.

முன்னாள் கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன், அழகுராணி அனார்கலி உட்பட பல கிரிக்கெட் மற்றும் ஏனைய துறைகளை சார்ந்தோர் இதற்கான பிரசாரங்களில் ஈடுபட்டனர். (அ-2)

# தமிழ்மக்களுக்காக நீதிவேண்டி அமெரிக்காவுக்கு சென்றோம்

## அமெரிக்க விஜயம் குறித்து சுரேஷ்



ஜே.வி.பி காலத்தின் போது தமது மக்களுக்காக இன்றைய ஜனாதிபதி சர்வதேச அரங்கிற்குச் சென்று குரல் கொடுத்தார். அது போலவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களுக்காக நீதிகோரி வெளிநாட்டுப் பயணத்தை ஆரம்பித்தனர் என அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் கூட்டமைப்பின் வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்ட குழுவின் உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கம் அமைத்துள்ள நல்லிணக்க ஆணைக்குழு அன்றைய அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடந்த 2002 ஆம் ஆண்டு செய்து கொண்ட உடன்படிக்கை ஏன் தோல்வி கண்டது. போர் ஏன் ஏற்பட்டது என்பது குறித்தே கவனம் செலுத்துகின்றது.

போர்க் குற்றச்சாட்டுக்கள் குறித்தோ, காணாமல் போனோர் குறித்தோ ஆராய்ந்து தீர்வு காண முற்படவில்லை.

எனவே தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க சர்வதேச விசாரணை ஆணைக்குழு அமைக்கப்பட வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் வெளிநாட்டுப் பயணம் குறித்து அலட்டிக் கொள்பவர்கள். 12 சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் கண்ட தீர்வு என்ன என்பது குறித்துக் கூற முன்வர வேண்டும்.

கூட்டமைப்பினரின் வெளிநாட்டுப் பயணம் குறித்து அழுது புலம்புவதை விடுத்து இன விவகாரத்துக்கான தீர்வினைக் காண இந்தச் சக்திகள் முன்வர வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (அ-2)

# நாட்டினுள் போலி விசாவில் தங்கியுள்ள வெளிநாட்டவரை கைது செய்ய நடவடிக்கை

விசா காலாவதியாகி அல்லது போலி விசாவின் மூலம் நாட்டினுள் தங்கியுள்ள வெளிநாட்டவர்கள் குறித்து முறைப்பாடு செய்வதற்கான விசேட தொலைபேசி இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக குடிவரவு-குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

இத்தகைய வெளிநாட்டவர்களைக் கைது செய்வதற்கான விசேட திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாக குடிவரவு-குடியகல்வு கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா கூறினார்.

சட்டவிரோதமாக நாட்டில் தங்கியுள்ள வெளிநாட்டவர்கள் தொடர்பான தகவல்கள் 0115329000 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அறிவிக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

விசாஇன்றியும் மோசடி முறைகளைக் கையாண்டும் இலங்கையில் தங்கியுள்ள சில வெளிநாட்டவர்கள் பல்வேறு சமூக விரோத செயல்களில் ஈடுபடுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இத்தகைய வெளிநாட்டவர்கள் தொடர்பில் கூடுதல் அவதானம் செலுத்தி அவர்களைத் கைது செய்வதற்கான விசேட திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.


இந்த நாட்டிலுள்ள நிறுவனங்களில் இத்தகைய வெளிநாட்டவர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருப்பின் அந்த நிறுவனங்களும் பொறுப்புக்கூற வேண்டியுள்ளதாக குடிவரவு-குடியகல்வு கட்டுப்பாட்டாளர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை விசா இன்றியும் விசா சட்டங்களை மீறும் வகையிலும் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கடந்த மூன்று மாதங்களில் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டதாக அவர் கூறினார். (அ-2)

# மின்தடை பற்றிய அறிவித்தல்


(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதனால் இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம், புன்னாலைக்கட்டுவன் வடக்கு, தெற்கு, மயிலங்காடு பிரதேசத்தின் ஒரு பகுதி, ஈவினைப் பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்குமென மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (அ)



யாழ்.மாவட்ட முதியோர் பேரவையினர் நடத்திய முதியோர் தின விழா அண்மையில் வலி. தென்மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மானிப்பாய் இலங்கை வங்கி முகாமையாளர் க.இலட்சுமணசர்மா மக்களுக்கு சிறந்த சேவையாற்றி ஓய்வு பெறுவதையிட்டு லயன் பரமசிவம் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் அருகில் பேரவைத் தலைவர் க. சிவகுமாரன் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:-நவாலிச் செய்தியாளர்.)

# குருவின் பார்வையில்



## ஆயுள்

மனித ஆயுளை நீடிக்கச் செய்ய முடியுமா? என்ற கேள்வி எப்போதுமே எல்லோர் மனதிலும் இருக்கிறது. நாம் வாழ்கின்ற சூழலை சிறிது கவனித்துப் பார்க்காமல் கேட்கப்படும் கேள்வி இது. இந்தியா சுகந்திரம் அடைந்த காலகட்டத்தில், அதாவது 1940 களில் ஒரு மனிதனின் ஆயுட்காலம் தோராயமாக 27 என்று கண்டறியப்பட்டது, ஆனால், தற்போது மருத்துவ விஞ்ஞான வளர்ச்சியினால்,



பலவிதமான நோய்த்தடுப்பு முறைகள் கண்டறியப்பட்டு, ஒரு மனிதனின் சராசரி வயது 55 ஆக உயர்ந்துள்ளது. அப்படியென்றால், 2மடங்காக உயர்ந்துள்ள மனிதனின் சராசரி வயதே அவனது ஆயுளை நீட்டிக்க முடியுமா என்ற கேள்விக்கான பதில்.

என்ன உண்கிறோம் என்பதையும், எப்படி உணவை உண்கிறோம் என்பதையும், எப்படி வாழ்கிறோம் என்பதையும் கவனித்துப் வாழ்ந்தால், மனித ஆயுளை நீட்டிக்க முடியும் என்பது நிச்சயமான ஒன்று.

நம் சுமூகத்தில் 35 வயதில் இரத்த அழுத்தமென்றால் பரவாயில்லை,45 வயதில் சர்க்கரை நோய் வந்தால் பிரச்சினை ஒன்றுமில்லை, 50 வயதில் மாரடைப்பு வந்தால் அதுவும் பரவியில்லை என்று சொல்லி, இவையனைத்தையும் மனித வாழ்வில் நிழமும் இயல்பான விடயங்கள் ஆக ஆக்கிவிட்டார்கள். ஆரோக்கியமாக இருப்பது சமுகத்தில் அசாதாரணமாகக் கருதப்படுகிறது. ஆரோக்கியமின்றி இருப்பதே சாதாரணமாகிவிட்டது. நோய் என்பது சாதாரணமான விடயமாக கருதப்படும் போது, இந்தக் கருத்தோடு ஒரு மனிதன் ஆராக்கியமாக ஆயுள்முழுவதும் வாழ வாய்ப்பில்லை. ஆயுள் நீட்டிப்பை பலவிதமாக நாம் புரிந்து கொள்ள முடியும், உணர முடியும்.

யோக விஞ்ஞானத்தில் அதனை ஒரு விதமாக பார்க்கிறோம். அதாவது நம் உடலில் கோடிக்கணக்கான செல்கள் உள்ளன. கோடிக்கணக்கான செல்கள் சேர்ந்ததே உடல். இந்த உடலில் உள்ள பழைய செல்கள் அனைத்தும் இறந்து புதிய செல்கள் பிறந்தவரே இருக்கின்றன. தோராயமாக 2 1/2 ஆண்டுகளில் உடலில் உள்ள பழைய செல்கள் அனைத்தும் இறந்து,புதிய செல்கள் பிறக்கின்றன. அப்படியானால் 2 1/2 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரு புதிய உடலே உருவாகிறது. எனவே நம்முள் நிகழும் புத்துணர்வை முழுமையான நிலையில் வைத்திருந்தால் நம் ஆயுளை முழு அளவில் அதிகரிக்கச் செய்ய முடியும்.

முழு அளவில் என்றால் என்ன? விலங்குகளை கவனித்துப்பார்த்தால், ஒரு நிமிடத்திற்கு அது எவ்வளவு சுவாசம் எடுக்கிறதோ அதற்கும் அதன் ஆயுட் காலத்திற்கும் நெருங்கிய தொடர்புள்ளது. உதாரணமாக, ஒரு நாய் ஒரு நிமிடத்திற்கு சராசரியாக 72 முறை சுவாசிக்கிறது. அதன் ஆயுட்காலம் 12 வருடங்கள். குதிரை ஒரு நிமிடத்திற்கு 30 முறை சுவாசிக்கிறது. அதன் ஆயுட்காலம் 25-30 வருடங்கள், யானை ஒருநிமிடத்திற்கு 14-18 முறை சுவாசிக்கிறது, அதன் ஆயுட்காலம்80-100 வருடங்கள். ஒரு மனிதன் ஒரு நிமிடத்திற்கு 13-15 முறை சுவாசிக்கின்றான். ஒரு மனிதன் சரியான சூழ்நிலையில் வாழ்ந்திருந்தால் 160 வருடங்கள் வாழ அவனுக்கு வாய்ப்பிருக்கிறது.

ஒரு மனிதனின் ஆரோக்கியம் மிக உயர்ந்த நிலையிலிருந்தால் சுவாசம் தாமாகவே மெதுவாய் நடக்கும். யோகப்பயிற்சியின் மூலமாக இந்த நிலையை நம்மால் உருவாக்க முடியும். 8 வார யோகப் பயிற்ச்சிக்குப் பின்னர் கவனித்துப் பார்த்தால், ஒரு நிமிடத்துக்குள் நடக்கும் சுவாசங்களின் எண்ணிக்கையும் இரத்த அழுத்தமும் நாடித்துடிப்பும் குறைந்து இருப்பதை நீங்கள் காண்பீர்கள். அப்படியானால் உங்கள் உடல் என்ற இயந்திரம்

**ஆன்மீகம் 33**

மிகச்சீராக செயற்பட்டுக் கொண்டிருக்கிறது என்றே பொருள். இது எவ்விதமான முயற்சிகளும் இன்றி சீராய்ச் செயற்படும் நிலை. கார் அல்லது மோட்டார் சைக்கிள் எஞ்சினை உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால், அதில், ஒரு நிமிடத்தில் எஞ்சினில் நடக்கும் சுழற்சியின் அளவு அது. ஒரு நிமிடத்திற்கு மிக அதிகமான முறை ஓடும் எஞ்சின் வெகு விரைவில் பழுதடைய வாய்ப்பு உண்டு. ஒரு நிமிடத்தில் குறைந்த அளவில் செயல்படும் எஞ்சினே நீண்ட நாட்கள் செயற்படும். அதேபோலத்தான் நமது உடலும் செயல்படுகிறது. உடல் எப்போது சீரான நிலையிலும், தேவையற்ற வேகத்தில் இல்லாமலும் செயற்படுகிறதோ அப்போது இயல்பாகவே ஆயுட்காலம் நீடிக்கிறது. யோகப் பயிற்சியை மேற்கொள்வதன் மூலம் உடல் சீராகவும் மென்மையாகவும் செயல்படுகிறது. இதனால் ஆயுட்காலம் இயல்பாகவே அதிகரிக்கிறது. இந்த வாய்ப்பை மனிதர்கள் பயன்படுத்தி முழு வாழ்க்கையை வாழவேண்டும். (தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசு தேவ்**

# ஒடுக்கப்பட்ட மக்களின் சின்னஞ்சிறு கடவுளர் வழிபாடு

**06**

## நாட்டாரியல்

மூன்றாம் நாள் காமனை உயிர்த் தெழுப்பும் விழா நடைபெறும். இதனை காமன் உடல் எரியாத காட்சி சார்ந்த பிரிவினர் காமனை உயிர் தெழுப்பும் காட்சியை நடிக்கின்றனர். காமன் அங்கு உடம்பு எரியாத சாம்பலில் படுத்திருக்க, ரதி சிவனிடம் சென்று காமனின் உயிரை மீட்டுத் தரும்படி வேண்ட, அந்தப்பெண்ணுக்காக மனமிரங்கி தன்னிலையிலிருந்து இறங்கி காமனுக்கு உயிர் கொடுக்கிறான் சிவன். இது தோட்ட மக்களின் கோரிக்கைக்கு தோட்டத் துரை இறங்கி இசைவளிக்கிறார் என்பதன் குறியீடாகும். இதன்பின் காமன் விருந்து நடை பெறும். இது கோரிக்கை வெற்றி பெற்றதற்கான மகிழ் வினைப் பகிர்ந்து கொள்ளுதலாகும். இக்காமன் கூத்தின் உட்கிடை, அது தொழிலாளர் வர்க்கம் அதிகார வர்க்கத்திற்கு எதிராக பிரதியாக்கப் போர் ஒன்றை கூத்தாக நடத்திக் காட்டுகிறது. அதன் புனைவியல் காமன் கூத்தாகும். இக்கூத்தின் புனைவியலில் உள்ள குறைபாடு, அல்லது தொய்வு, ரதி சிவபெருமானிடம் காமனின் உயிர்ப் பிச்சையைக் கோருவது மட்டும்தான். ஆனால், தொழிலாளர்கள் தமது எண்ணங்களுக்கு ஏற்ப கதையின் அமைப்பை முற்றாக மாற்றி அமைக்க விரும்ப வில்லை. இங்கு கதையின் மரபு அப்படியே. எனவே காமன் கூத்து வர்க்கப் போராட்டத்தின் ஒரு பிரதி விம்பமாக தோட்டப்புறங்க ளில் வெளிப் படுவதை அவதானிக்கலாம்.

**பெருந் தோட்ட வழிபாட்டில் மதுரை வீரன்**

காமன் கூத்தை ஒத்த இன்னுமொரு வழிபாடுதான் மதுரைவீரன் வழிபாடு. நாட்டார் நிலை வீரனாக மதுரைவீரன் மலை நாட்டுத் தேயிலைத் தோட்டங்களிலும் தாழ் பூமி இரப்பர் தோட்டங்களிலும் சிறப்பாக நிலவியதான அவன் பொம்மணன் மகள் பொம்மியை காதலிக்கிறான். சாதி வேறுபாடு காரணமாக அவர்களின் திருமணத்தில் இடர்பாடுகள் ஏற்படுகின்றது. எனவே உடன்போக்காக மதுரைவீரன் பொம்மியை திருச்சிக்கு அழைத்து வருகிறான். இடையில் பொம்மணனின் படை பொம்மியை மீட்க வந்து அவனுடன் மோதுகிறது. அப்போரில் பொம்மணன் இறந்தவிடுகிறான். பின்னர் அவனின் வீரத்தைக் கண்ட திருமலை நாயக்கன் அவனைத் தனது படைத் தளபதியாக நியமிக்கின்றான். ஆனால், சிறிது காலத்தின் பின் மதுரைவீரன் திருமலை நாயக்கனின் மகளைக் காதலிக்கிறான். அதனை அறிந்த நாயக்கன் .மதுரை வீரனை தேவைப்படுகின்றது. எனவே மதுரை வீரனை, மன்னன் மதுரைக்கு அழைப்பிக்கிறான். மதுரை வீரன் கள்ளர்க்ளை அடக்கி வென்றான். அதனால், கள்ளர்கள் அவனுக்கு நிரந்தர பகைவர்களாயினர். ஆனால், மதுரைவீரன் மீண்டும் திருமலை நாயக்கனின் காதல் கிழத்தியுடன் காதல் கொள்கிறான். கோபம் கொண்ட மன்னன், மதுரைவீரனின் ஒருகை, ஒருகால் என்பவற்றைத் துண்டிக்கும்படி கட்டளையிட மதுரைவீரன் கொல்லப்படுகிறான். அவனின் மரணம் மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சந்நி தானத்தில் இடம்பெற்றிருக்கின்றது. எனவே

## பெருந்தோட்ட மக்களின் மத வழிபாடு தொடர்பான சமூகவியல் ஆய்வு

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"

**ரா.நித்தியானந்தன் B.A.(Hons),M.Phil**

மதுரைவீரன் கதை முற்றிலுமாக ஒருவீர வணக்கமாகத் தோட்ட மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மதுரை வீரன் தாழ்த்தப்பட்ட வர்க்கத்தினன். மலைகளில் மாடுமேய்ப்பது, செத்த மாட்டை அறுப்பது, அதன் தோல்களைப் பதனிடுவது என்பன அவன் தொழில் திருச்சி மாவட்டத்தில் பொம்மணன் என்ற பாளையக்காரரிடம் வேலை செய்து வந்த நாட்டை விட்டு ஓட்டுகிறான். ஆனால், அச்சமயம் கள்ளழகர் கோவிலைச் சேர்ந்த கள்ளர்கள் மதுரையில் பல இடங்களில் கொள்ளையில் ஈடுபடுகின்றனர். அதனை அடக்க மதுரை வீரனின் வீரம் மீண்டும் மன்னனுக்குத் அவன்தெய்வ நிலையை அடைந்ததாக மக்கள் நம்புகின்றனர். மேற்குல மக்களை அவன் எதிர்த் தமையால், ஒடுக்கப்பட்ட மக்களால் தெய்வமாக மதிக்கப்பட்டான்.

(தொடரும்)

# இந்தியா,மாலைதீவு இடையே ஆறு முக்கிய ஒப்பந்தங்கள்



இந்நிலையில் மாலைதீவில் சார்க் மாநாடு நடந்து முடிந்தபின் பிரதமர் மன்மோகன்சிங் அந்நாட்டின் ஜனாதிபதி முகமது நஷீப்புடன் பல்வேறு விடயங்கள் குறித்து பேச்சு வார்த்தை நடத்தினார். தொடர்ந்து இரு தரப்புக்கும் இடையில் ஆறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் இரு நாடுகளிலும் சிறைப்பட்டுள்ள அந்தந்த நாடுகளின் கைதிகளை விடுவித்து பரிமாற்றம் செய்து

இந்தியப் பெருங்கடலில் உள்ள நாடுகளுடன் சீனா அதிக இணக்கம் காட்டி வரும் நிலையில் இந்தியா மற்றும் மாலைதீவு இடையில் ஆறு முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. இரு நாடுகளுக்கும் பயங்கரவாதம் பொதுவான சவாலாக இருப்பதாக பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

மாலைதீவு, இலங்கை மற்றும் தெற்காசிய நாடுகளுடன் சீனா சமீபகாலமாக அதிகளவில் இணக்கம் காட்டி வருகிறது. இது இந்தியா மீதான அதன் முத்துமாலை வியூகத்தை மேலும் வலுப்படுத்தும் விதத்தில் அமைந்திருக்கிறது. சமீபத்தில் சீன தேசிய மக்கள் காங்கிரஸ் நிலைக்குழு தலைவர் வூ பன்குவோ மாலைதீவுக்கு சமீபத்தில் மேற்கொண்ட பயணம் இதில் குறிப்பிடத்தக்கது.

கொள்வது ஆகியவை இந்த ஒப்பந்தங்களில் குறிப்பி டத்தக்கவை. இவை தவிர இருதரப்பு வர்த்தகப் பரிமாற்றம் குறித்தும் ஒப்பந்தங்கள் கையெ முத்தாகின. மேலும் பயங்கரவாதத் தடுப்பில் மாலைதீவில் மேம்பட்ட பொலிஸ் அகடமி நிறுவுதல், கொச்சிக்கும் மாலைதீவுக்கும் இடையில் சரக்கு பயணிகள் படகு போக் குவரத்து ஆரம்பித்தல் ஆகியவற்றிற்கும் இந்தியா முன்வந்துள்ளது. மாலைதீவுக்கு 10 கோடி டொலர் நிதியுதவி வழங்கப்படும் எனவும் பிரதமர் மன்மோகன்சிங் உறுதியளித் துள்ளார்.

இதற்கிடையில் மாலைதீவு பாராளுமன்றில் நேற்று முன்தினம் பிரதமர் உரையாற்றுகையில் ,இரு நாடுகளும் பயங்கரவாதம், மத அடிப்படைவாதம், போலிப் பொருட்கள் உற்பத்தி கடத்தல் மற்றும் போதை மருந்து கடத்தல் ஆகிய சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இவற்றை சமாளிக்க இரு நாடுகளும் பல்நோக்கு அணுகுமுறைகளை மேற் கொள்ள உறுதி பூண்டுள்ளன. மாலைதீவுக்கு இன்றும் எதிர்காலத்திலும் இந்தியா பல்வேறு விடயங்களிலும் உதவும். திறன் மேம்பாட்டுத்துறையில் மாலைதீவு இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்க இந்தியா தயாராக இருக்கிறது. மாலைதீவின் மீன்பிடி மற்றும் உணவுப் பதப்படுத்தல் துறைகளை நவீனமயப்படுத்தவும் இந்தியா ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறது.

கடல் மட்டம் அதிகரிப்பு பிரச்சினையில், மாலைதீவு கரியமில் வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துவதில் இந்தியா உதவும் என பிரதமர் தெரிவித்தார்.

முதன் முதலாக பேசிய பிரதமர் மாலைதீவில் 2008 இல் அரசியல் சாசனம்முழுமையாக திருத்தியமைக்கப்பட்டது. அதன்பின் 2009 இல் பொதுத்தேர்தல் நடந்தது. அதைத் தொடர்ந்து மக்கள் மஜ்லிஸ் எனப்படும் பாராளுமன்ற ஜனநாயக ரீதியில் முழு அதிகாரங்களுடன் செயற்பட ஆரம்பமாகியது. மாலை தீவு பாராளுமன்றம் செயற்பட ஆரம்பமாகியபின் அதில் முதன்முதலாக பிரதமர் மன்மோகன்சிங்தான் பேசியுள்ளார்.(அ-2)

## மும்பைத் தாக்குதல் பயங்கரவாதிகள் மீது பாக். நடவடிக்கை எடுக்கவேண்டும்

### பிரதமர் மன்மோகன் தெரிவிப்பு

(புதுடில்லி)

மும்பை தாக்குதல் தொடர்பாக பயங்கரவாதிகள் மீது பாகிஸ்தான் நடவடிக்கை எடுத்த பின்னரே அந்நாட்டுடன் பேச்சுவார்த்தை நடத்துவது பற்றி முடிவெடுக்கப்படும் என பிரதமர் மன்மோகன்சிங் டில்லி திரும்பும் வழியில் விமானத்தில் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

மாலைதீவு சார்க் மாநாட்டை முடித்துக் கொண்டு இந்தியா திரும்பும் வகையில் விமானத்தில் பத்திரிகையாளர்களுக்கு பிரதமர் மன்மோகன்சிங் பேட்டியளித்தார்.

அவர் தனது பேட்டியில், பாகிஸ்தானுடனான உறவை பலப்படுத்த இந்தியா விரும்புகிறது. இந்தியா மற்றும் பாகிஸ்தானுடனான பேச்சுவார்த்தை பல நிபந்தனைகளுக்குட் பட்டது. இந்தியாவில் மும்பை தாக்குதல் போன்று மீண்டும் தாக்குதல் நடந்தால் இரு நாடுகளுக்கு இடையேயான உறவு பாதிக்கப்படும்.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையேயான பேச்சுவார்த்தையில் பாகிஸ்தான் இராணுவமும் உள்ளது.

மும்பை தாக்குதல் தொடர்பாக பயங்கரவாதிகள் மீது பாகிஸ்தான் நடவடிக்கை எடுத்த பின்னரே அந்நாட்டிற்கு செல்வது குறித்து முடிவெடுக்கப்படும் என்றார்.

(அ-2)




## சோமாலிய கடற்கொள்ளையர்கள் 26 பேர் இந்திய கடற்படையால் கைது

(மும்பை)


ஏடன் வளைகுடா பகுதியில் சோமாலியா கடல் கொள்ளையர்கள் 26 பேரை இந்தியக் கடற்படையினர் கைது செய்துள்ளனர். அரபிக் கடலில் ஏடன் வளைகுடா வழியாகச் செல்லும் கப்பல்களை வழிமறித்து சோமாலிய கொள்ளையர்கள் பல ஆண்டுகளாகக் கொள்ளையடித்து வருகின்றனர். கப்பல் ஊழியர்களைப் பணயக்கைதிகளாகப் பிடித்து பலகோடி ரூபாய் பெற்றுக் கொண்டு விடுவிக்கின்றனர். இந்த பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் ஏடன் வளைகுடா பகுதியில் இந்திய கடற்படை கப்பல்கள் ரோந்து பணியில் ஈடுபட்டுள்ளன.

இந்தியக் கடற்படையின் வர்த்தகப் பிரிவு கப்பல் ஒன்று ஏடன் வளைகுடா பகுதியில் வந்த போது சந்தேகத்திற்குரிய ஐந்து படகுகள் அந்த கப்பலை நோக்கி விரைந்தன.

இதனால் சந்தேகமடைந்த சுகன்யாகப்பலில் இருந்த வீரர்கள் அந்த ஐந்து படகுகளை சுற்றி வளைத்தனர். எனினும் இந்த நடவடிக்கையில் இரண்டு படகுகள் தப்பிவிட்டன. அவர்களிடமிருந்து அதிநவீன ஆயுதங்களும் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன. கடந்த செப்டெம்பர் மாதத்திலிருந்து இந்திய கடற்படையினர் ஐந்தாவது முறையாக இப்பகுதியில் கடல் கொள்ளையை முறியடித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

## அமெரிக்காவில் அப்துல்கலாம் மீது சோதனை நடத்திய அதிகாரிகள்

### அதிருப்தியில் மத்திய அரசு



(நியூயோர்க்)

அமெரிக்கா சென்றிருந்த முன்னாள் இந்திய ஜனாதிபதி அப்துல்கலாமிடம் பாதுகாப்பு என்ற பெயரில் அவரிடம் சோதனை நடத்திய அதிகாரிகள் கலாமின் கோட் மற்றும் ஷூவை பிடுங்கி சென்று எதுவுமில்லை என்ற பின்னர் மீண்டும் திரும்ப ஒப்படைத்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து மத்திய அரசு கடும் அதிருப் தியையும் கண்டனத்தையும் தெரிவித்துள்ளது.

இது குறித்து உயர் அதிகாரிகள் வட்டாரம் தெரிவிப்பதாவது, கடந்த செப்டெம்பர் மாதம் 29 ஆம் திகதி அப்துல்கலாம் அமெரிக்கா சென்றிருந்தார். நியூயோர்க்கில் உள்ள ஜான் எப் கென்னடி விமான நிலையத்தில் இந்திய விமானம் நின்றது. இந்நேரத்தில் இங்கு வந்த அமெரிக்க பாதுகாப்பு துறை அதிகாரிகள் யார் இவர் என கேட்டு தொடர்ந்து அவரிடம் சோதனை நடத்த வேண்டும் என்றார்.

இவர் இந்தியாவின் ஜனாதிபதி அப்துல் கலாம். இவரிடம் சோதனை நடத்த வேண்டிய அவசியமில்லை என உடன் இருந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதை அவர் கண்டுகொள்ளவில்லை. கலாமின் கோட் சூட் மற்றும் ஷூக்களை பிடுங்கி சென்றனர். சில நிமிடங்கள் கழித்து சோதனை முடிந்தது. கொண்டு செல்லுங்கள் என கொடுத்தனர். இதற்கு கலாம் எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை.மத்திய அரசு விடயத்தை கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என அதிகாரிகள் கூறுகின்றனர்.

கலாமை பொறுத்தவரையில் இதுபோன்ற அமெரிக்கா அதிகாரிகளின் கெடுபிடிக்கு 2 ஆவது முறை ஆளாகிறார். கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்க விமானம் ஒன்று டில்லியில் இருந்து புறப்படும் போதும் இவரிடம் கெடுபிடிகள் காட்டப்பட்டது. இதற்கு எதிர்க்கட்சியினர் பார்லியில் கடும் எதிர்ப்பு தெரிவித்து கோஷங்கள் எழுப்பினர்.

தற்போது நடந்திருக்கும் இந்த சம்பவம் குறித்து மத்திய அரசு உயர் அதிகாரி ஒருவர் கூறுகையில், இது மிக துரதிர்ஷ்டமானது. பாதுகாப்பு என்ற பெயரில் இந்தியாவின் உயர் பொறுப்பில் இருந்தவர்களிடம் அமெரிக்கா தனது கெடுபிடிகளை தளர்வு செய்து கொள்ள வேண்டும். மாறாக நடந்து கொள்வது இந்திய- அமெரிக்க பரஸ்பர கொள்கைக்கு இடையூறாக இருக்கும்.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி புஷ் சமீபத்தில் மும்பை வந்திருந்த போது அவரிடம் இந்தியாவில் எவ்வித சோதனையும் நடத்தப்படதில்லை. இவருக்கும் விலக்கு அளிக்கப்பட்டது. எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் தவிர்க்கப்பட வேண்டும் என அவர் கூறினார். (அ-2)

## இந்தியாவிலிருந்து இறக்குமதியான பொருட்கள் மீதான தடை நீக்கம்

### பாகிஸ்தான் தெரிவிப்பு

(இஸ்லாமாபாத்)

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யும் 12 பொருட்கள் மீதான கட்டுப்பாடுகளை பாகிஸ்தான் முற்றிலுமாக நீக்கியது. சாகசப் பொருட்கள், இயந்திர உதிரிப்பாகங்கள் இதில் அடங்கும். இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தக உறவை மேம்படுத்த இத்தகைய நடவடிக்கையை பாகிஸ்தான் எடுத்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இஸ்லாமாபாத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நிதி அமைச்சர் அப்துல்ஹபீஸ்ஷேக் தலைமையில் நடைபெற்ற பொருளாதார ஒத்துழைப்பு குழுக் கூட்டத்தில் இந்த முடிவுஎடுக்கப்பட்டுள்ளது.

விலக்கு அளிக்கப்பட்டுள்ள பொருட்கள் அனைத்தும் ஒருமுறை இறக்குமதி செய்து கொள்ள அனுமதிக்கப்படும். இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தக செயலர்கள் இன்றும் நாளையும் புதுடில்லியில் சந்தித்து பேசவுள்ளனர். இந்தப் பேச்சுவார்த்தையில் முக்கிய முடிவுகள் எட்டப்படும் என்று பாகிஸ்தானின் வர்த்தகச் செயலாளர் ஜாபர் மெஹ்மூத் நம்பிக் கை தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கு வாய்ப்புள்ள பொருட்களின் பட்டியல் அளிக்கப்பட்டு அதை அரசின் பரிந்துரைக்கு அளிக்கப்பட்டது. இந்தப் பட்டியலில் மூலப்பொருட்கள், இயந்திய உதிரிப்பாகங்கள், தோல் மற்றும் ஜவுளித்துறை பொருட்களும் சேர்க்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாகிஸ்தானில் உள்ள தொழிலதிபர்கள் இந்தியாவிலிருந்து ஜவுளித் தொழிலுக்கு தேவையான இயந்திரங்களை நேரடியாக இறக்குமதி செய்யமுடியாது.

அவை வேறு ஒரு நாட்டுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து பாகிஸ்தானுக்கு கொண்டு வரப்படும். ஏனைய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும்போது ஆகும் செலவைக் காட்டிலும் இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்தால் அது குறைவாக இருக்கும் என பாகிஸ்தான் தொழிலதிபர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அத்துடன் பாகிஸ்தானில் அதிகரித்துவரும் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டு குண்டு துளைக்காத வாகனங்களை வாங்குவது குறித்தும் பரிசீலிக்கப் பட்டது. (அ-2)

# டீன் ஏஜ் கர்ப்பங்களைத் தடுக்க பாலியல் கல்வி

# பாடசாலையில் இருந்தே அறிமுகப்படுத்த வேண்டும்

உலகம் முழுவதும் சமூக ஆர்வலர்களதும் மருத்துவத்துறையைச் சார்ந்தவர்களினதும் விசேட கவனத்துக்குரிய விடயம் தான் டீன் ஏஜ் கர்ப்பம்.

ஒரு கர்ப்பிணியின் கடைசி மாதவிடாய் திகதி அவளது இருபதாவது பிறந்தநாளுக்கு முன் அமையுமாயின் அது ஒரு டீன் ஏஜ் கர்ப்பம் எனக் கொள்ளப்படுகிறது.

குறித்த பெண் திருமணம் செய்திருந்தாலும் அல்லது செய்யாதிருந்தாலும் இது பொருந்தும். ஏனெனில் திருமண வயது நாட்டுக்கு நாடு, சமூகத்துக்கு சமூகம் வேறுபடுகின்றது.

இலங்கையின் பொதுத் திருமணச் சட்டத்தின்படி ஆணினதும் பெண்ணினதும் திருமண வயது 18 ஆகும். எனினும் இஸ்லாமிய திருமணச் சட்டத்தின்படி பெண்ணின் திருமண வயது 12 என்பதும் கவனிக்கத் தக்கது.

பெண்கள் பொதுவாக 12-15 வயதில் பருவமடைகின்றார்கள். பருவமடைதல் என்பது ஒரே நாளில் நிறைவு பெறுகின்ற நிகழ்வல்ல. அது உடலமைப்பியல் ரீதியாகவும் ஓமோன்களின் தொழிற்பாட்டின் ரீதியாகவும் தொடச்சியாக பல வருடங்களாக நிகழ்வதாகும்.

டீன் ஏஜ் பெண்கள் குழந்தை பெற்றெடுப்பதற்குத் தேவையான உடல் அமைப்பையும் உள அமைப்பையும் முழுமையாக்ப் பெறவில்லை என்றே மருத்துவ ஆய்வுகள் கூறுகின்றன.

ஒரு பெண்ணின் கர்ப்ப காலத்தின் போதும் மகப்பேற்றின் போதும் ஏற்படக் கூடிய சிக்கல்கள் டீன் ஏஜ் கர்ப்பங்களில் அதிகமாகும். எனவே அபிவிருத்தி அடைந்த நாடுக ளில் கூட டீன் ஏஜ் கர்ப்பம் விசேட அவதானத் துக்குரியதாகவுள்ளது.

இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட சில மாவட்டங்களில் டீன் ஏஜ் கர்ப்பங்களின் சதவீதம் (2009) (தகவல்: குடும்ப சுகாதார பணியகம், இலங்கை)

| பிராந்திய சுகாதார வைத்திய அத்தியட்சகர் பிரிவு | டீன் ஏஜ் கர்ப்பங்களின் எண்ணிக்கை | சதவீதம் (%) |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 373 | 4.4 |
| கிளிநொச்சி | - | - |
| முல்லைத்தீவு | - | - |
| மன்னார் | 87 | 6.2 |
| வவுனியா | 583 | 10.8 |
| திருகோணமலை | 1,109 | 12.9 |
| மட்டக்களப்பு | 1,394 | 12.7 |
| அம்பாறை | 504 | 8.7 |
| கொழும்பு | 1,199 | 4.2 |
| கண்டி | 1,395 | 5.4 |
| *இலங்கை மொத்த சனத்தொகையில்* | *24,621* | *6.5* |

தென்னாசிய நாடுகளில் டீன் ஏஜ் கர்ப்பங்களின் எண்ணிக்கை அபிவிருத்தி அடைந்த நாடுகளை விட அதிகமாக உள்ளது.

தென்னாசியாவில் பெரும்பாலான டீன் ஏஜ் பெண்கள் குழந்தை பெற்றெடுத்தல் என்பதற்கான காலத்தைத் தீர்மானிப்பதில் பங்குதாராக இருப்பதில்லை. குழந்தைப் பேறு என்பது இந்த டீன் ஏஜ் பெண்களுக்கு ஒரு விபத்தாகவோ, தற்செயலாகவோ தவிர்க்க முடியாமல் ஏற்பட்டதாகவோ அமைவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

தென்னாசியாவில் பெரும்பாலான பெற்றோர்கள் தங்கள் டீன் ஏஜ் பெண் பிள்ளைகள் தங்களுக்குரிய வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் பக்குவத்தை அடையவில்லை என்றே கருதுகிறார்கள்.

எத்தனையோ டீன் ஏஜ் கர்ப்பங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தும் அது தொடர்பான தெளிவு இல்லாமலே இந்த டீன் ஏஜ் வயதுடையவர்களும் அவர்களது பெற்றோர்களும் வாழ்ந்து வருகிறார்கள்.

டீன் ஏஜ் கர்ப்பங்களால் பின்வரும் சிக்கல் நிலைமைகள் அதிகளவில் ஏற்படலாம்.

குறை மாதத்தில் குழந்தை பிறத்தல், அதிகரித்த சிசுமரணங்கள், நிறை குறைந்த குழந்தைகள் பிறத்தல், குழந்தை பிறப்பின் போது மூளைக்குத் தேவையான ஒட்சிசன் வழங்களில் தடை ஏற்பட்டு மூளையின் செயற்பாட்டில் பாதிப்பு ஏற்படல்,

அதிகரித்த இயற்கையான கருச் சிதைவுகள், தாய்க்கு குருதிச் சோகை ஏற்படல், தாய்க்கு கர்ப்ப காலத்தில் உயர் குருதியமுக்கம் ஏற்படல். இவை தவிர டீன் ஏஜ் கர்ப்பங்கள் தொடர்பான ஆய்வுகள் பின்வரும் பிரச்சினைகளையும் சுட்டிக் காட்டுகின்றன.

குறித்த பெண்களின் உயர் படிப்புக்கான வாய்ப்புக்கள் குறைவாக இருத்தல், விவாகரத்து வீதம் அதிகளவில் காணப்படல், ஆரோக்கியம் குறைந்த குழந்தைகள் பிறத்தலும் அவர்களை வளர்த்தெடுப்பதில் சிக்கல் தன்மையும், கணவனால் கைவிடப்பட்ட அல்லது கணவனிடமிருந்து விலகி வாழும் ஒற்றைத் தாய்மார்களின் (SINGLE MOTHERS) எண்ணிக்கை அதிகரித்தல், தங்களதும் குழந்தைகளினதும் தேவைகளை நிறைவேற்றப் போராடும் இந்த ஒற்றைத் தாய்மார்களின் வாழ்க்கை மிகக் கடினமானதாகவே காணப்படுகின்றதுது மற்றும் வறுமை நிலை.

**டீன் ஏஜ் கர்ப்பங்களைத் தடுக்க பெற் றோர்கள் செய்யக் கூடியவை எவை?**

தங்களின் டீன் ஏஜ் பிள்ளைகளுடன் (ஆண்/பெண்) பாலியல் தொடர்பாக சரியான கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுதல் நன்று. இதற்கு முன்னோடியாக பெற்றோர்கள் பாலியல் தொடர்பாக தெளிவான அறிவைப் பெற்றிருத்தல் முக்கியமானதாகும்.

தென்னாசிய நாடுகளில் பெரும்பாலான மக்கள் பாலியல் என்ற சொல்லையே வெட்கத்துக்குரியதொன்றாகவும் பாலியல் கல்வி என்பது தேவையற்றது என்பதாகவுமே கருதுகிறார்கள்.

ஒரு குடும்பத்துக்குள்ளேயே பெற்றோரும் பிள்ளைகளும் பாலியல் தொடர்பாக ஆரோக்கியமான கலந்துரையாடல்களில் ஈடுபடுவது முக்கியம் என பாலியல் கல்வியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தங்களின் டீன் ஏஜ் பிள்ளைகள் (ஆண்/பெண்) என்ன செய்கின்றார்கள், எங்கெங்கு போகிறார்கள், அவர்களின் அண்மைக்கால நடவடிக்கைகள் என்ன வகையானவை என்று பெற்றோர்கள் கட்டாயம் அறிந்து வைத்திருத்தல் வேண்டும்.

இதனுடைய நோக்கம் பிள்ளைகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி வீட்டிற்குள்ளே அடைத்தல் என்பதல்ல, மாறாக பிள்ளைகளை நெறிப்படுத்தல் என்பதாகும்.

தங்களின் டீன் ஏஜ் பிள்ளை (ஆண்/பெண்) எதிர்ப்பாலைச் சேர்ந்த குறிப்பிட்ட ஒருவருடன் யாருமற்ற இடங்களில் படிப்பு, விளையாட்டு அல்லது பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் அதிக நேரத்தை செலவிடுவதை பெற்றோர் தடுக்க வேண்டும். மாறாக ஆண், பெண் இருபாலாரும் குழுவாக சேர்ந்து இயங்குதலை ஊக்குவிக்கலாம்.

தங்களின் டீன் ஏஜ் பிள்ளைகள்(ஆண்/பெண்) அண்மைக்காலமாக ஆர்வமாகப் படிக்கும் புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் ஆர்வமாகப் பார்க்கும் சினிமா, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தொடர்பாக அறிந்து வைத்திருத்தல் வேண்டும்.

பாலியல் தொடர்பாக தவறான கருத்துக்களைப் பரப்புவதில் ஊடகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவை பாலியல் தொடர்பாக போலியான தோற்றங்களையும். மிகைப்படுத்தப்பட்ட தகவல்களையும் வழங்குகின்றன.

இன்டர்நெட் பாவனை அதிகரித்துள்ள இக்காலத்தில் கணனி மூலமோ கைத்தொலைபேசி மூலமோ பிள்ளைகள் என்ன வெல்லாம் செய்கிறார்கள் என்று பெற்றோர்கள் கண்காணிப்பது கடினமான ஒன்றாகிப் போய் விட்டது.

பல டீன் ஏஜ் கர்ப்பங்களின் பின்னணியில் கைத்தொலைபேசிகளின் தவறான பாவனை இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

தந்தையார் பொறுப்பு மிக்கவராக இருத்தல் டீன் ஏஜ் கர்ப்பங்களைத் தடுக்க உதவும். தந்தை இல்லாமல் வளர்ந்த பிள்ளைகள் (ஆண்/பெண்) பெற்றோருடன் வாழும் பிள்ளைகளைவிட வறுமையில் வாடுவது 5 மடங்குவரை அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிள்ளைகளே அதிகளவில் பாடசாலைகளிலிருந்து இடை விலகுகிறார்கள். மது மற்றும் போதைப்பொருட்களுக்கு அடிமையாகிறார்கள்.

அதிகளவில் உளவியல் மற்றும் நடத்தை தொடர்பான பாதிப்புக்களுக்கு உள்ளாகிறார்கள். இவர்களிடையே டீன் ஏஜ் கர்ப்பங்கள் அதிகளவில் அவதானிக்கப்பட்டுள்ளன.

பெற்றோருடன் வாழும் பெண் பிள்ளைகளை விடவும் தந்தை இல்லாமல் வளரும் பெண் பிள்ளைகள் தங்கள் பாலியல் தொடர்புகளை டீன் ஏஜ்ஜிலேயே ஆரம்பிப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே டீன் ஏஜ் கர்ப்பங்களைக் குறைக்கின்ற செயற்றிட்டங்களில் ஆண்களையும் இணைத்துக் கொள்வது முக்கியமானது.

**டீன் ஏஜ் கர்ப்பங்களைத் தடுக்க டீன் ஏஜ் வயதில் உள்ளவர்கள் செய்யக் கூடியவை எவை?**

♦ டீன் ஏஜ் வயதில் பாலியல் தொடர்புகளை நிறுத்துதல், திருமணத்திற்கு முன் பாலியல் தொடர்பு தவறானது என்ற கருத்து உலகம் முழுவதும் பல நூற்றாண்டுகளாகப் போதிக்கப்பட்டு வந்தாலும் இன்றுவரை டீன் ஏஜ் கர்ப்பங்களை முற்றாகத் தடுக்க முடியவில்லை.

♦ கர்ப்பத்தடை முறைகளில் ஏதாவது ஒன்றைப் பின்பற்றுதல், டீன் ஏஜ் வயதினருக்கு கர்ப்பத்தடை முறைகளை வழங்குவது, உலகம் முழுவதும் எதிர்ப்பலைகளை உருவாக்கியுள்ளது. பெரும்பாலான மத அமைப்புக்களும் பெற்றோரும் இதனை எதிர்த்தே வருகின்றனர்.

அவசர கர்ப்பத்தடை மாத்திரை உட்பட எத்தனையோ கர்ப்பத்தடை சாதனங்கள் இன்று தனியார் மருந்தகங்களில் விற்பனையாகின்றன.

எந்தவொரு தற்காலிக கர்ப்பத்தடை முறையும் 100% பாதுகாப்பானதல்ல என்பதை டீன் ஏஜ் வயதினர் கவனத்தில் கொள்ள வேண்டும். அபிவிருத்தி அடைந்த நாடுகளில் டீன் ஏஜ் வயதினரிடையே அதிகளவில் பாலியல் தொடர்பான நோய்கள் பரவுவதற்கு கண்மூடித்தனமான பொருத்தமற்ற கர்ப்பத்தடை முறைகளின் தெரிவும் காரணமாக இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

**டீன் ஏஜ் கர்ப்பங்களைத் தடுக்க ஆசி ரியர்கள் மற்றும் சமூகப் பெரியார்கள் செய்யக் கூடியவை எவை?**

சம்பவத்துடன் தொடர்புடையவர்களை குற்றவாளிகளைப் போல் பார்ப்பதையோ விமர்சிப்பதையோ நிறுத்த வேண்டும். ஏனெனில் பல தவறுகள் மறைவாக நிகழ்வதற்கு எமது சமூக அமைப்பே காரணமாகவுள்ளது.

இயலுமான நேரத்தை ஒதுக்கி டீன் ஏஜ் கர்ப்பத்தினால் ஏற்படக்கூடிய மருத்துவ, சமூக, பொருளாதார மற்றும் கல்வி தொடர்பான சிக்கல்களை விளக்க வேண்டும். இது ஒன்றும் பகிடி விளையாட்டு அல்ல என்பதையும் நிச்சயம் தீமையையே உண்டாக்கும் என்பதையும் அவர்களின் கல்வி மட்டத்திற்கு ஏற்ப விளக்க வேண்டும்.

பாலியல் தொடர்பை நிறுத்துவது இயலாத காரியம் என கருதுமிடத்து கருத்தடை முறைகள் பற்றி விளக்கலாம். இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெறுவதற்கு அருகிலுள்ள குடும்ப சுகாதார மாதுவின் (Midwife) துணையை நாடலாம்.

தேவைப்படுகின்ற சந்தர்ப்பங்களில் பிரதேச மனநல வைத்திய அதிகாரி அல்லது சுகாதார வைத்திய அதிகாரியின் ஆலோசனையைப் பெறலாம்.

**ஒரு பெண் டீன் ஏஜ் வயதில் கர்ப்பமடைந்து விட்டாள் என அறிந்தால் நீங்கள் செய்ய வேண்டியது என்ன?**

அந்தப் பெண்ணை அருகிலுள்ள வைத்தியசாலைக்கோ அல்லது தாய்-சேய் கிளினிக்குக்கோ அழைத்துச் சென்று பதிவு செய்வதன் மூலம் அவசியமான மருத்துவ சேவையை தாய்க்கும் சேய்க்கும் கிடைக்க உதவுங்கள்.

எக்காரணம் கொண்டும் கருச்சிதைவு செய்ய முயற்சிக்க வேண்டாம். இலங்கையின் சட்டங்களின்படி தாயின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் சந்தர்ப்பங்களில் மட்டுமே வைத்திய நிபுணர்கள் கருச்சிதைவு செய்ய அனுமதி உள்ளது என்பதை கவனத்தில் கொள்க.

நாட்டில் கருச்சிதைவு நிலையங்களாக செயற்படுபவை எவையும் அனுமதியற்ற கொலைகார கூடாரங்கள் என்பதையும் அவற்றுடன் தொடர்புடையவர்கள் என்றோ ஒருநாள் சிறை செல்ல நேரிடும் என்பதையும் நினைவில் கொள்க.

டீன் ஏஜ் கர்ப்பங்களை அழிக்கும் முயற்சியில் சட்டவிரோத கருக்கலைப்பு நிலையங்களால் கொல்லப்பட்ட டீன் ஏஜ் பெண்கள் ஏராளம்.

பாலியல் வல்லுறவு முதலிய காரணங்களால் ஏற்பட்ட கர்ப்பமாயின் காவல்துறையினதும் நீதித்துறையினதும் உதவியை நாடுங்கள். குறித்த குற்றவாளிக்கு தண்டனை வழங்கவும் குறித்த பெண்ணுக்கும் குழந்தைக்கும் தேவையான நிவாரணத்தைப் பெறவும் சட்டத்தில் இடம் உள்ளது என்பதை நினைவில் கொண்டு குறித்த பெண்ணுக்கு உதவி செய்ய அரசாங்க மற்றும் அரசசார் பற்ற நிறுவனங்கள் இந்த நாட்டில் உள்ளன.

பாலியல் வல்லுறவில் ஈடுபட்ட ஆணினால் குறித்த பெண்ணினதும் குழந்தையினதும் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய வாய்ப்புகளும் உள்ளன.

எனவே கர்ப்பகாலத்திலும் அதற்குப் பின்னரும் அவசியமான பாதுகாப்பை பெற நீதித்துறையை நாடுவதே சிறந்தது.

குழந்தையை ஆரோக்கியமாகப் பெற்ற பின்னர் அக்குழந்தையை அரசாங்கப் பதிவுகளினூடாக குழந்தை இல்லாத தம்பதியினருக்கு வழங்கமுடியும் என்பதை மறக்க வேண்டாம்.

இப்படியாக தத்தெடுக்கப்பட்ட எத்தனையோ குழந்தைகள் சிறப்பான கல்வியைப் பெற்று உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் நல்ல வாழ்க்கையை வாழ்ந்து வருகிறார்கள்.

**எனவே டீன் ஏஜ் கர்ப்பங்கள் தொடர்பாக மருத்துவத் துறையைச் சார்ந்தவர்களும் கல்விக் கூடங்களும் இணைந்து செயற்பட வேண்டியது அவசியமாகும். முறையான பாலியல் கல்வி பாடசாலை மட்டத்திலிருந்தே அறிமுகப் படுத்தப்படுதல் வேண்டும்.**

வே. ஜெகரூபன்
மனநல மருத்துவ அதிகாரி,
மாவட்ட வைத்தியசாலை,
மொறட்டுவ.

# கயிறே என் கதை கேள்!

# முருகன் சொல்லும் கண்ணீர்

14

எந்த விதத்திலும் ஒருவனை வீழ்த்த முடியாத நிலையில், அவனுடைய அந்தரங்கத்தை துழாவிப் பார்ப்பது சிலருடைய அரக்ககுணம். ராஜீவ்காந்தியை கொலை செய்யப் போகிறார்கள் என்பது எந்தக்கணத்திலும் எனக்குத் தெரியாது என்பது விசாரணை அதிகாரிகளுக்கு உறுதியாகத் தெரியும். ஆனால், அந்தச் சதி எனக்குத் தெரிந்தே நடந்ததாகச் சித்திரிக்கத் துடித்தார்கள். ஒப்புதல் வாக்கு மூலத்தை எனக்கு எதிராக வாங்க நளினியை பலவிதங்களில் சித்திரவதை செய்தனர். நளினி மசியாத போது அதிகாரிகள் கையில் எடுத்த ஆயுதம் அந்தரங்கம். எனக்குப் பல பெண்களுடன் தொடர்பு இருப்பதாக நளினியிடம் சொன்னார்கள். அவரது நடத்தைபற்றி மோசமாக என்னிடம் சொன்னார்கள். மனைவியின் கருவைக்கூட களங்கப்படுத்தினார்கள். ஆனால், எங்கள் இருவருக்குமான இல்லறப்பிணைப்பை அவ்வளவு சீக்கிரத்தில் அதிகாரிகளால் அறுக்க முடியவில்லை.

தீர்ப்பின் பக்கம் 299ல் "எந்தவொரு இடத்திலும் தமக்கு ஏதேனும் அநீதி (Prejudice) இழைக்கப் பட்டதர்க நீதிமன்ற விசாரணையின் போது (during the trial period) எதிரிகள் 'புகார் எதுவும் செய்யவில்லை" என்று எழுதப்பட்டு உள்ளீது. எங்களைக் கொலை செய்யாதது மட்டும்தான் பாக்கி என்கிற நிலையில், எங்களுக்கு எவ்வித அநீதியும் இழைக்கப்படவில்லை என்பது எத்தகைய கொடூரம்? வழக்கின் புலன் விசாரணையும் நீதிமன்ற விசாரணையும், முறை கேடுகளையும் துஸ்பிரயோகங்களையும் மூலாதாரமாகக் கொண்டே நடத்தப்பட்டன. ஈவு இரக்கத்தை காலில் போட்டு மிதித்தபடியே அதிகாரிகளும் சட்ட நிபுணர்களும் பணியாற்றினார்கள். "சட்டப் போராட்டம் எப்படியும் எங்களைக் காப்பாற்றிவிடும்" என நாங்கள் இவ்வளவு உறுதியாக நம்புவதற்குக் காரணமே, கடந்து வந்த துயரங்கள்தான். எங்களின் ஆயுள் பலம் இல்லாததாக இருந்திருந்தால், விசாரணை அதிகாரிகளின் கொடுமைகளியே அதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு இருக்கும். யுத்தமும் ரத்தமுமாகக் கலங்கடித்த அந்த நாட்களையே கடந்து வந்த உயிர், அவ்வளவு சீக்கிரத்தில் கயிறுக்கு இரையாகிவிடாது.

சி.பி.ஐ. எஸ்.ஐ.டி.யினர் கொடூரங்களுக்குப் பயந்து சுமார் 35 பேர் தற்கொலை செய்து கொண்டனர். கைது செய்யப்பட்ட எதிரி சண்முகம் மண்டியிட்ட படி தூக்கில் தொங்கிய காட்சியை தமிழகம் அவ்வளவு சீக்கிரத்தில் மறக்காது. அதனைத் திட்டமிட்ட கொலை என்றே ஊடகங்கள் சுட்டிக்காட்டின. அனைத்து விதமான சட்ட விரோதங்களையும், முறைகேடுகளையும், பாரபட்சங்களையும், அநீதிகளையும் அவ்வப்போது எழுத்து பூர்வமாக நீதிமன்றத்தில் பூகார் செய்து இருக்கிறோம். அது தொடர்பாக விசாரணை நீதிமன்றம் எடுத்த முடிவுகளின் பதிவான ஆவணங்களும் எம்மிடம் உள்ளன. சுமார் 500 - க்கும் மேற்பட்ட புகார் அல்லது எதிர் மனுக்களை நாம் சமர்ப்பித்து இருக்கிறோம். இவ்வளவு இருந்தும் உயர் நீதிமன்ற நீதிபதி, "எவ்வித அநீதியும் இழைக்கப் படவில்லை" எனக்குறிப்பிடுகிறார் என்றால், அரசுத்தரப்பு எப்படியெல்லாம் பொய்யை நீருபிக்கப் போராடி இருக்கிறது என்பது புரியும். விசாரணை நீதிமன்றத்தில் நாம் இறுதியாக எழுத்து மூலம் சமர்ப்பித்த வாதங்களுடனும் cr.p.c.313 பிரிவின் கீழ் விசாரணை நீதிமன்றத்தில் சமர்ப்பித்த வாக்கு மூலங்களுடனும் அவசியமான அனைத்து புகார் மனுக்களின் நகல்களையும், அதன் மீதான நீதிமன்ற முடிவுகளின் நகல்களையும் நாங்கள் சமர்ப்பித்து இருக்கிறோம். இவையாவும் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்படவில்லை.

தீர்ப்பு பக்கம் 356-ல் "சிவராசன், சுபா, தனு மற்றும் முருகன் ஆகியோரின் கூட்டுப்பழக்கத்தினால் நளினி, ராஜீவ் காந்தி மீதும் இந்திய அமைதிப்படைப் (I.P.K.F) மீதும் அதீத வெறுப்போடு இருந்தார்" என்று எழுதப்பட்டுள்ளது.

நளினியே இதனை ஒப்புதல் வாக்கு மூலத்தில் சொல்லி இருப்பதாகவும் கதைக்குத் துணையாய் ஒரு கட்டுக் கதை. நளினி ராஜீவ்காந்தி மீது பலமான வெறுப்பு (extreme hatred) இருந்ததாக அரசு ஆவணம் 77ல்- எந்த இடத்திலும் இல்லை. மாறாக "strong feeling", "strong emotions" என்ற வார்த்தைகள் தான் பயன்படுத்தப்பட்டு உள்ளன. இவற்றிற்குக்கூட நான் காரணமாக இருந்தேன் என்று எந்த இடத்திலும் குறிப்பு இல்லை. அரசு ஆவணம் 77,81 ஆகியவற்றிலோ அல்லது வேறு சாட்சியங்களிலோ, ராஜீவ் காந்தி மீது அதீத வெறுப்பை நளினிக்கு ஏற்படுத்தும் வகையில் நான் அவரிடம் பேசினேன் என்பதற்கு எவ்விதக் குறிப்பும் கிடையாது. அசல்களுடன் போலிகளைக் கலந்து விட்டால், போலிகளும் அசல்களாக கருதப்பட்டு விடும் என்ற கோட்பாட்டை பயன்படுத்தி இருக்கிறார்கள்.

சுபா, தனு, ஆகியோருடன் சேர்ந்து நான் இந்திய அமைதிப்படை, ஈழத்து மண்ணில் நிகழ்த்திய கொடுமைகள் பற்றி நளினியுடன் கலந்து பேசியதாக மட்டும் அரசு ஆவணம் 77-ல் இருக்கிறது. இந்த வீர்த்தைகளைத்தான் தந்திரமாக திரித்து கொலைச்சதிக்கு நளினியை நானே உடன்பட வைத்ததாக சித்திரித்தார்கள். ஈழத்தில் நடந்த படுகொலைகளையும் கோரங்களையும் நளினியிடம் சொல்லி அழுததில் என்ன தவறு? ஒப்பாரி வைப்பதில் கூட உங்களுக்கு உடன்பாடு இல்லையா? உங்களுக்கு நெருக்கமானவர்களின் இறப்பையோ, வேதனையையோ பிறரிடம் நீங்கள் பகிர்ந்து கொள்ள மாட்டீர்களா? ஈழத்து வேதனையைப் பகிர்வதன் மூலமாக ராஜீவ்காந்திக்கு எதிரான மனநிலையை நளினிக்கு ஏற்படுத்தினோம். என்பது எந்த விதத்தில் நியாயம்? இந்திய அமைதிப்படையினர் அட்டூழியங்களைத் தமிழ் ஊடகங்கள் கண்ணீர் சொட்டச் சொட்ட எழுதி கடைக் கோடி உறவுகள் வரைகொண்டு போய்ச் சேர்த்தனவே... அதை வைத்து ராஜீவ்காந்தியை கொலைசெய்ய

## போகச் சொன்னாரா பொட்டு அம்மான்?

ஊடகங்களும் காரணம் எனச் சொல்ல முடியுமா? சோகத்தைச் சொல்வது கூட இந்த மண்ணில் பாவமா? காதலித்து கரம் பிடித்த -கர்ப்பம் சுமக்கும் மனைவியின் மனதில் கொலைச் சதியை என்னால் எப்படி உருவாக்க முடியும்?

தீர்ப்புப் பக்கம் 356-ல் "1991 பெப்ரவரி மாதத்தில் இருந்து விடுதலைப்புலி உறுப்பினர்களுடன் நளினி கூட்டுச்சேர்ந்தார் என எழுதப்பட்டுள்ளது.

அரச ஆவணம் 77-இல் மேற்சொன்னவாறு எந்தக்குறிப்பும் கிடையாது. மாறாக நான் (A3) 1991 பெப்ரவரியில் இங்கு ஆங்கிலம் படிப்பிக்க வந்திருப்பதாகவும் தம்முடன் தங்கியிருப்பதாகவும் நளினி சொன்னதாக இருக்கிறது. 1991 பெப்ரவரி மாதத்திற்கு முன்போ, பின்போ விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு அவர்களது வேலைகளை தான்செய்து கொடுத்ததாக எவ்வித குறிப்பும் இல்லை. சிவராசன், சுபா, தனு ஆகியோருடன் எனக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது என்பதற்கும் எவ்வித சாட்சியச் சான்றுகளும் கிடையாது. நான் முதலில் அவர்களது வீட்டில் தங்கியிருப்பவனாகவும் பின்பு நளினியின் காதலனாகவும் பின்பு கணவனாகவும் தான் அறிமுகமானேன். இதற்குத்தான் இத்தனை ஜோடிப்புக்கள்.

அரச ஆவணம் 77-இல் "கொலை நடந்தபிறகு சுபா ஏதாவது ஒரு நகரத்தில் அடைக்கலமாக நான் உதவுவதாக இருந்தது. (சிவராசனின் மேலதிக பணிப்புரை வரும்வரை ) முழு நிகழ்வின்போதும் சுபாவுக்கும் தனுவக்கும் நான் மறைப்புக் கொடுக்க வேண்டியிருந்தது என நளினி சொன்னதாக எழுதப்பட்டிருக்கிறது. மேற்படி நளின் அவ்வாறே செய்தார் என்றும் நடக்காத ஒன்றைநடந்ததாக எழுதியிருக்கிறார்கள்.

சம்பவ இடத்திலிருந்து சுபாவால் அழைத்துவரப்பட்ட நளினி, சுபாவுடன் ஒளிந்து கொண்டார் என்பதும் உண்மைக்கு எதிராகன கற்பனைதான். 09.06.91 அன்று வரை நளினி தனது வீட்டில் குடும்பத்தாருடன் தங்கியிருந்தார். அவருடைய அலுவலகத்திற்கு வேலைக்குப்போய் வந்தார்.

பக்கம் 358 இல் 233- ஆவது அரசுசாட்சியான பாரதி, நளினியின் தங்கை கல்யாணியின் தோழி, நளினியின் புலிகளுடனான கூட்டாளித்தனம் பற்றி சொல்லியிருப்பதாக எழுதப்பட்டிருக்கிறது.

233-ஆவது அரசு சாட்சி தனது சாட்சியத்தில் நளினிக்கு புலிகளின் தொடர்பு இருப்பதாக எதுவும் சொல்லவில்லை. மேற்படி சாட்சி ஒரே வீட்டில் என்னுடன் 4 மாதங்கள் தங்கினார். நளினியை விட பல மடங்கு கூடுதலாக என்னுடன் இந்தச் சாட்சி புலிகள் உறுப்பினர் எனத் தெரிந்து கொண்டு தங்கினார்; நன்கு பழகினார். நாம் நீதிமன்றக் காவலில் இருந்த போது (1991 டிசம்பர் மாதத்தின் போது) நளினி குடும்பத்திற்கு கடிதம் எழுதிய போது எனக்கும் சேர்த்துத்தான் எழுதினார். 08.06.91 அன்று நளினி வீட்டில் அனைவரும் தற்கொலை செய்ய முடிவெடுத்தபோது, அந்தச் சாட்சியும் சேர்ந்துதான் தற்கொலை செய்ய முயன்றார். அப்போது நான் தற்செயலாகப் போனதால் அதைத் தடுத்தேன். இதனால், மேற் சொன்னது போல் நளினிக்குப் பதிலாக மேற்படி சாட்சியையும் சொல்ல முடியுமா? விடுதலைப்புலிகள் உறுப்பினர் ஒருவரை கணவராக ஏற்றுக்கொண்டு உறவாடுவது அந்த அமைப்பினருடனான கூட்டாளித் தனம் என (Association) எப்படிச் சொல்ல முடியும்



பக்கம் 365-ல் இலங்கையில் புலிகளின் நடவடிக்கை பற்றியும் இந்திய அமைதிப்படை செய்த கொடுமைகள் பற்றியும், அவர்களுக்கு ராஜீவ் காந்திமீது இருந்த வெறுப்பினைப் பற்றியும் நளினியிடம் சொல்லி அவரை முழுமையாக indoctrinate செய்ததாக எழுதப்பட்டுள்ளது. நளினியிடம் விடுதலைப்புலிகளின் கொள்கைகள் பற்றியும் இந்திய அமைதிப்படையினரின் நடவடிக்கைகள் பற்றியும் நான் பேசியதாக அரச ஆவணம் 81-ல் எழுதப் பட்டுள்ளது. ஆனால், ராஜீவ்காந்தி மீது எனக்கு வெறுப்பு இருந்ததாக நான் நினைத்துப்பார்த்ததாகக்கூட எவ்வத சான்றும் இல்லை. இந்த இடத்தில் ஓர் இடைச் செருகலை பொய்யாகச் செருகியுள்ளனர்.

பக்கம் 366-ல் "வேலூர் கோட்டையைக் குண்டு வைத்து தகர்து அங்கே இருந்த போராளிகளை மீட்பது புலிகளின் நடவடிக்கையில், (இங்கிருந்த) ஒன்றாகும். என்று A3 முருகன் ஒப்புதல் வாக்கு மூலம் கொடுத்திருப்பதாக எழுதப்பட்டுள்ளது.

தண்டனை கொடுக்க வேண்டும் என்ற முடிவை நியாயப்படுத்த, வ்ழக்கில் அரசுத்தரப்பு தாக்கல் செய்த சாட்சியச் சான்றுகளுக்கு எதிராகவும் நேர்மாறாகவும்கூட ஒரு கற்பனைக் கதையினைச் சொல்லலாம் என்பதற்கு இது ஓர் உதாரணம். தமிழகத்தில் தங்கியிருந்து புலிகளின் உளவுத்துறைத் தலைவர் பொட்டு அம்மானுக்கு நான் தகவல் சொன்னதாகவும், அவர் பல பணிகளை எனக்கு வழங்கியதாகவும் அந்தக் கட்டுக்கதைகள் நீண்டதுதான் வேதனை. வேலூர் கோட்டையைப் பற்றி அவருக்கு நான் புகைப்படங்கள் எடுத்து அனுப்பி வைத்தேனாம். பொட்டு அம்மான் இயக்கத்தில் எத்தகைய இடத்தில் இருந்தவர், என்னைப்போன்ற சாதாரண நபர்களோடு அவர் வயர்லெஸ் போனில் பேசுவாரா என்பதை எல்லாம் ஏன் யாருமே எண்ணிப்பார்க்கவில்லை. நல்ல வேளை...பொட்டுஅம்மானுக்கு திட்டம் வகுத்துக் கொடுத்ததே நான்தான் எனச் சொல்லாமல் இருந்தார்களே...!

**ஜூனியர் விகடன்**

# நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்

## சிங்கள புத்திஜீவியின் கோரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளை அரசாங்கம் உடனடியாக பகிரங்கப்படுத்தப்படுவதுடன் அமுல் செய்யப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை எதிர்வரும் 20 ஆம் திகதி ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது.

இந்த நிலையில் குறித்த அறிக்கையின் பரிந்துரைகளை உடனடியாக அமுல் செய்ய வேண்டும் என்று கொத்தலாவல சட்டக்கல்லூரியின் பீடாதிபதி பேராசிரியர் பிரதீப் மஹாநாம ஹேவா கோரியுள்ளார்.

இந்தப் பரிந்துரைகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனான பேச்சுவார்த்தைகளுக்கு வழிகாட்டியாக கொள்ளப்படவேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

2012 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் அமர்வு இடம்பெறும் முன்னர் இந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தினால் இலங்கைக்கு நன்மைகள் ஏற்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் தேசிய வேலைத்திட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அனைத்து நாட்டு தூதர்களுக்கும் அதேபோல இலங்கை நாட்டின் அனைத்து மக்களுக்கும் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

இதன்போது மக்கள் மத்தியில் தெளிவான சிந்தனை ஏற்பட முடியும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த இறுதி அறிக்கையை பகிரங்கப்படுத்தும் பொறுப்பு ஜனாதிபதியிடமே உள்ளதாக ஏற்கனவே நல்லிணக்க ஆணைக்குழு தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பாரதவின் கொலை குறித்து கனேடிய பிரதமர் ஸ்டீவனிடம் முறையிடப்படும்

## பாரதவின் சகோதரர் தகவல்

(கொழும்பு)

படுகொலை செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் குடும்பத்தினர் நீதி வேண்டி கனேடிய பிரதமர் ஸ்டீவன் ஹார்பரிடம் முறையிடவுள்ளனர்.

இதற்கான முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்படுவதாக பாரத லக்ஸ்மனின் சகோதரியான சுவர்ணா பிரேமச்சந்திர கனடாவில் இருந்து தெரிவித்துள்ளார்.

தமது கோரிக்கைக்கு இணங்கி ஹார்பரை சந்திப்பதற்கு கனேடிய பிரதமர் காரியாலயம் இணக்கமான பதிலை வழங்கியுள்ளதாக சுவர்ணா குறிப்பிட்டுள்ளார்.

தமது சகோதரரின் கொலைக்கு பாதாள உலக கோஷ்டியினர் காரணம் என்பதற்கு ஆதாரங்கள் வெளிப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமது சகோதரரின் கொலை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவை அரசாங்கம் இன்னும் சந்தேக நபராக பெயரிடவில்லை.

தமது சகோதரரின் கொலை தொடர்பில் பொதுநலவாய நாடுகளின் செயலாளரிடம் முறையிட்டுள்ளதாகவும் சுவர்ணா குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இந்தக் கொலை தொடர்பில் நீதியை வேண்டி நாளை சட்டத்தரணிகள் கொழும்பில் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்துவார்கள் என்றும் சுவர்ணா தெரிவித்தார். (அ-2)

# யுத்தத்தில் வெற்றி கண்டாலும் நாட்டில் சுதந்திரம் ஏற்படவில்லை

## சஜித் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆயுதங்கள் மூலம் யுத்தத்தில் வெற்றி கொண்டாலும் உண்மையான சுதந்திரம் நாட்டிற்குள் ஏற்படவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நாட்டை ஒன்றிணைக்க வேண்டுமானால் சமய கற்பித்தல்களுக்கு அமைய புத்திசாலித்தனமான பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

சசுனட அருண வேலைத்திட்டத்தின் கீழ் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

யுத்த வெற்றியின் மூலம் நாட்டில் உள்ள ஒரு சிறிய குழுவினருக்கு மாத்திரமே நன்மை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (அ-2)

# வெள்ளை வானில் கடத்தப்பட்ட வர்த்தகரை கண்டுபிடிக்க விசேடகுழு

(கொழும்பு)

நுகேகொடயில் வைத்து வெள்ளை வானில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்ட வர்த்தகர் ஒருவரைக் கண்டுபிடிக்க மிரிஹான பொலிசார் புலனாய்வுக்குழு ஒன்றை நியமித்துள்ளது.

நுகேகொடயில் உள்ள தனது புத்தகக்கடையை கடந்த வெள்ளிக்கிழமை மூடிவிட்டு தனது வாகனத்தை நோக்கி சென்று கொண்டிருந்த வேளை அவரை சிலர் பிடித்து இழுத்துச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி கடை உரிமையாளர் கடத்தப்படுவதைக்கண்ட முச்சக்கர வண்டிச் சாரதியொருவர் இதுகுறித்து பொலிஸில் சாட்சியமளித்துள்ளார்

இச்சம்பவம் குறித்து மிரிஹான பொலிஸ் குற்றப்புலனாய்வுப்பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)




★ 1885-சேர்பியா பல்கேரியா மீது போர் தொடுத்தது.

★ 1889-நெல்லி பிளை என்ற பெண் ஊடகவியலாளர் 80 நாட்களுக்குள் உலகைச் சுற்றி வரும் தனது திட்டத்தை 72 நாட்களுக்குள் வெற்றிகரமாக முடித்தார்.

★ 1918-செக்கோஸ்லவாக்கியா குடியரசாகியது.

★ 1922-பி.பி.சி. தனது வானொலி சேவையை ஐக்கிய இராச்சியத்தில் தொடங்கியது.

★ 1940-இரண்டாம் உலகப் போர்: இங்கிலாந்தில் கவெண்ட்ரி நகரம் ஜேர்மனியரின் குண்டுவீச்சில் பலத்த சேதமடைந்தது. கவெண்ட்ரி தேவாலயம் முற்றாக அழிந்தது.

★ 1956-ஹங்கேரியில் போர் முடிவுக்கு வந்தது.

★ 1963-ஐஸ்லாந்து தீவின் அருகில் உள்ள சூர்ட்ஸி என்னும் தீவு வட அட்லாண்டிக் கடலில் எழுந்த எரிமலையால் புதிதாகத் தோன்றியது.

★ 1965-வியட்நாம் போர்: லாட்ராங் என்ற இடத்தில் அமெரிக்கப் படைகளுக்கும் வடக்கு வியட்நாம் படைகளுக்கும் இடையில் பெரும் போர் வெடித்தது.

★ 1969-அப்பலோ திட்டம்: அப்பலோ 12 விண்கப்பல் மூன்று விண்வெளி வீரர்களுடன் சந்திரனை நோக்கிச் சென்றது.

★ 1970-மேற்கு வேர்ஜீனியாவில் அமெரிக்க விமானம் ஒன்று வீழ்ந்து விபத்துக்குள்ளாகியதில் 75 பேர் உயிரிழந்தனர்.

★ 1971-மரைனர் 9 செவ்வாய் கோளை சென்றடைந்தது. இதுவே பூமியில் இருந்து வேறொரு கோளின் செயற்கைச் செய்மதியாகச் செயற்பட்ட முதலாவது விண்கலமாகும்.

★ 1975-மேற்கு சகாராவை விட்டு ஸ்பெயின் விலகியது.

★ 1990-கிழக்கு ஜேர்மனி மற்றும் மேற்கு ஜேர்மனிகளின் இணைப்பிற்குப் பின்னர் போலந்துக்கும் ஜேர்மனிக்கும் இடையிலான எல்லைகள் வரையறுக்கப்பட்டன.

★ 1991-நாடு கடந்த நிலையில் வாழ்ந்த கம்போடியாவின் இளவரசர் நொரொடோம் சிஹானூக் 13 ஆண்டுகளின் பின்னர் புனோம் பென் திரும்பினார்.

★ 1996-டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.

★ 2001-ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலை ஆப்கான் கூட்டுப் படைகள் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தன.

### பிறப்புக்கள்

★ 1840-குனோட் மொனே, பிரெஞ்சு ஓவியர் (இ.1926)

★ 1930-எட்வேர்ட் வைட், நாசா விண்வெளி வீரர் (இ.1967)

★ 1954-கொண்டலிசா ரைஸ், ஐக்கிய அமெரிக்காவின் 66 ஆவது செயலாளர்

★ 1971-அடம் கில்கிறிஸ்ற், அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்

### இறப்பு

★ 1831-ஹெகல், ஜேர்மன் நாட்டு மெய்யியல் அறிஞர் (பி.1770)

### சிறப்பு நாட்கள்

★ இந்தியா- குழந்தைகள் தினம்

★ உலக நீரிழிவு நோய் தினம்.



★ 1889-இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு பிறந்த தினம். இந்தத் தினத்தையே இந்தியா குழந்தைகள் தினமாகக் கொண்டாடுகின்றது. (இ.1967)

# கல்வியை கற்க வேண்டிய முன்னிரவுகள் மாணவர்களால் சீரழிக்கப்படுகின்றன

## விரிவுரையாளர் டாக்டர் சி.வீரசிங்க

.(கொழும்பு)

சமகால மாணவ சமுதாயம் கல்வியைக் கற்கக் கூடிய அருமையான முன் இரவு நேரங்கள், கலாசாரச் சீரழிவை ஏற்படுத்தி வன்முறைகளைத் தூண்டும் தரம் குறைந்த தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்து வீணே விரயம் செய்கின்றார்கள்.

இழந்த நேரம் மீண்டும் கிடைக்காது. எனவே நேரத்தை மிகவும் கவனமாகத் திட்டமிட்டு முகாமைத்துவம் செய்யுங்கள். இவ்வாறு செயற்படுவீர்களானால் நீங்கள் வாழ்க்கையில் பெரிதாக உயர்ச்சியடைவீர்கள்.

இவ்வாறு நுவரெலியா பரிசுத்த திருத்துவ மத்திய கல்லூரியில் நடைபெற்ற விஞ்ஞான தின விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய இலங்கை மருத்துவக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் சி.வீரசிங்க குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தற்போது மாணவ சமுதாயம் பாஸ்புட் கலாசாரத்திற்கு மாறி வருவது பெரிதும் விசனமளிக்கிறது. பாஸ்புட் உணவு வகைகள் சுவையானதாக இருந்தாலும் அவற்றில் கொழுப்பு, சீனி மற்றும் உப்பு ஆகியவை அதிகளவு சேர்ந்துள்ளன.

அவை ஆரோக்கியத்திற்கு கெடுதியானவை. மேலும் கோலா பானங்கள் அருந்தும் போது இனிப்புச் சுவை தெரியாவிட்டாலும் ஒவ்வொரு சிறுபோத்தல் கோலாவிலும் 7-8 தேக்கரண்டி சீனி சேர்க்கப்பட்டுள்ளன.

இவ்வகை திடீர் உணவுகளை உட்கொண்டு வருபவர்களுக்கு இருதய நோய்,சரீரம் பெருத்தல், முதுமையில் நீரிழிவு நோய் உருவாகும் சாத்தியம் மற்றும் குருதி அழுத்தம் அதிகரித்தல் போன்ற பிணிகள் ஏற்படும் சாத்தியம் உண்டு.

எனவே இந்த நவீன உணவுகளுக்குப் பதிலாக இயற்கையான பழங்கள், மரக்கறி வகைகள் முதலியவற்றை உபயோகித்து சிற்றுண்டிகளைத் திட்டமிடுங்கள். உணவின் பின் இனிப்புப் பண்டங்களுக்குப் பதிலாக பழங்களை உண்ணுங்கள். இவ்வாறு வீரசிங்க குறிப்பிட்டார்.

இதற்கு முன்பாக நன்நீரைப் பெறுவதில் இலங்கையின் சவால்கள் என்னும் விடயம் பற்றிச் சொற்பொழிவாற்றிய எஸ். பேராசிரியன் வெளிப்படையில் இலங்கை போதிய நீர்வளம் கொண்ட நாடு போலத் தோன்றினாலும் பருவ காலங்களுக்கு ஏற்பவும் பிரதேச வேறுபாடுகளுக்கு ஏற்பவும் நீரைப் பெற்றுக் கொள்வதில் பாரிய சவால்கள் உள்ளன என்பதை மறுப்பதற்கில்லை.

கிராமிய மட்டங்களில் பாதுகாப்பான நீரைப் பெறுவதில் தொடரும் இடர்கள் அப்பகுதியில் வறுமை, உடல் நலக்கேடுகள் அதிகரிப்பதற்கு பெரிதும் காரணம் வேகமாகப் பெருகிவரும் சனத்தொகை. நகரங்கள் விரிவாக்கம், நீர் மாசடைதல் ஆகிய காரணங்களே சுத்தமான நீரைப் பெறுவதில் சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளன.

நீரின் நெறிமுறைப்படுத்தப்படாத முகாமைத்துவமே நீர் தொடர்பான பிரச்சினைகளுக்குப் பெரிதும் காரணமாகின்றன. நாம் எதிர்கால நீர்த்தட்டுப்பாட்டை தவிர்க்க வேண்டுமாயின் தென்பகுதியில் மேலும் நீர்த்தேக்கங்களை அமைத்து மழைநீரைக் கடலில் கலக்காதவாறு பாதுகாக்க வேண்டும். வட பகுதியில் தமிழ் நாட்டைப் போன்று மழை நீர் சேகரிப்புத் திட்டத்தை அமுல்படுத்துதல் அவசியம். மழை நீரைத் தாங்கிகளில் சேகரித்து வீட்டுத் தேவைகளுக்குப் பயன்படுத்துவது சாத்தியம். இவ்வாறு பேராசிரியன் கூறினார். (அ-2)

## அதிபர்களுக்கான செயலமர்வு

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான எதிர்வரும் ஐந்தாண்டுகளிற்கான அபிவிருத்தித் திட்டம் தயாரித்தல் தொடர்பான செயலமர்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இச் செயலமர்விற்கு அனைத்து அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் அறிவித்துள்ளார். (அ)

## வாகன விபத்துக்களில் பதினொருவர் பலி

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 11 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

நாளுக்கு நாள் வாகன விபத்துக்கள் அதிகரித்து வருவதாகவும் வாகன சாரதிகளின் கவனக்குறைவு, வாகனத்தை வேகமாக செலுத்துதல் போன்ற காரணங்களால் இவ்வாறான விபத்துக்கள் இடம்பெறுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ-2)

# வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்கு போக்குவரத்து பொலிஸார் போதியளவில் இல்லை

## போக்குவரத்து பொலிஸ் பிரிவு தகவல்

(கொழும்பு)

வீதி விபத்துக்களை கட்டுப்படுத்துவதற்கு போதியளவு போக்குவரத்து பொலிஸார் இல்லையென பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு தெரிவித்துள்ளது.

போக்குவரத்து பொலிஸார் இதர பொலிஸ் பிரிவுகளுடன் ஒருங்கிணைந்து போக்குவரத்து கடமைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

அத்துடன் போக்குவரத்துப் பொலிஸார், முப்படைகள், பாடசாலை மாணவர்கள், பேருந்து ஓட்டுநர்களுக்கு போக்குவரத்து விதிகள் பற்றி அறிவுரைகளையும் நடத்தி வருகிறார்கள். யாழ்ப்பாணம், திருமலை, மட்டக்களப்பு போன்ற இடங்களிலுள்ள பாடசாலைகளுக்கும் விரைவில் விஜயம் செய்து அங்குள்ள மாணவர்களுக்கும் ஏனையோருக்கும் போக்குவரத்து சட்டங்கள் பற்றி விழிப்புணர்வுகளை ஏற்படுத்த நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக பொலிஸ் தலைமையகத்தில் போக்குவரத்து பணிப்பாளராக கடமையாற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் கே. அரசரட்ணம் கூறினார்.

கிராமிய போக்குவரத்து அபிவிருத்திக்கான இலங்கை மன்றத்தின் அனுசரணையுடன் கொழும்பு தாஜ்சமுத்ரா ஹோட்டலில் வீதி பாதுகாப்பு பற்றிய கருத்தரங்கு கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றது. பிரண்டிச் எபேட் சிப்டாங் நிறுவனத்தின் இலங்கை வதிவிட பிரதிநிதி பெற்றினாமயர் இந் நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார்.

வீதி போக்குவரத்து விபத்துக்களால் பாதசாரிகளே அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். வாகன நெரிசலால் எமது நாட்டில் தினமும் 240 மில்லியன் ரூபா நட்டமேற்படுகிறது.

கடந்த 2003 ஆம் ஆண்டிலிருந்து வாகன விபத்துகள் குறைவடைந்திருப்பதாக புள்ளி விபரங்கள் தெரிவித்தாலும் காப்புறுதி நிறுவனங்களுடன் விபத்தில் சம்பந்தப்பட்டவர்கள் இணக்கப்பாட்டுக்கு வருவதனால் இவ் விபத்துக்கள் பொலிஸாருக்கு தெரியவருவதில்லை. ஆகையால் விபத்துக்கள் அதிகரித்து வருவதாகவே தான் கருதுவதாக இக்கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரான பேராசிரியர் ஜயலத் எதிரிசிங்க கூறினார்.

போக்குவரத்து விதிகள், சட்டங்கள் பற்றி அச்சு ஊடகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள் மூலமாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டுமென இக்கருத்தரங்கில் கலந்து கொண்டோர் அறிவுறுத்தல் விடுத்தமை இங்கே குறிப்பிடத்தக்கது. (அ-2)

# எரிபொருள் விலை அதிகரிப்பால் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு பதினைந்து கோடி நட்டம்

(கொழும்பு)

எரிபொருட்களின் விலைகள் அதிகரித்ததன் காரணமாக தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு மானிய அடிப்படையில் எரிபொருள் வழங்குமாறு விடுத்த கோரிக்கைக்கு அரசாங்கம் இதுவரை பதில்வழங்கவில்லை என தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

தமது கோரிக்கைக்கமைய மானியம் வழங்கப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் குறித்து தீர்மானிக்கவுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

அண்மையில் எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்ட காரணத்தினால் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு சுமார் 15 கோடி ரூபா வரை நட்டம் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை நாளை முதல் தாமும் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

எனினும் கெமுனு விஜேரட்ன தலைமையிலான தனியார் பேருந்து உரிமையாளர்சங்கத்துடன் இணைந்து எந்தவித தொழிற்சங்க நடவடிக்கையிலும் ஈடுபடப் போவதில்லை என சம்மேளனத்தின் பிரதான செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் தெரிவித்துள்ளார். (அ-2)

# முடக்கப்பட்ட இணையத்தளங்களை மீளவும் இயக்க அரசாங்கம் கவனம்

முடக்கப்பட்ட இணையத்தளங்களை மீளவும் இயங்க அனுமதிப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.கடுமையான நிபந்தனைகளின் அடிப்படையில் இணைய தளங்களை மீளவும் இலங்கையில் பிரசுரம் செய்ய அனுமதி அளிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்தின் பல்வேறு தரப்பினருக்கும் முக்கிய பிரமுகர்களுக்கும் எதிராக சேறு பூசும் வகையில் சில இணையத்தளங்கள் இயங்கி வருவதாக குற்றஞ்சாட்டப்படுகிறது.

இதன் காரணமாகவே குறித்த இணையத்தளங்கள் முடக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# சொத்துக்களை தேசிய மயப்படுத்தும் திட்டம் பிழையான முன்னுதாரணம்

## ஜாத்க ஹெல உறுமய கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

வினைத்திறனாக இயங்காத நிறுவனங்களின் சொத்துக்களை தேசியமயப்படுத்தும் சட்டம் பிழையான முன்னுதாரணமாகும் என ஜாதிக ஹெல உறுமய கட்சி அறிவித்துள்ளது.

நீதிமன்ற மற்றும் நிறைவேற்று அதிகாரம் ஆகிய இரண்டுமே இந்தச் சட்டத்துடன் தொடர்புபட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த சட்ட மூலத்தின் சில விடயங்களில் தமக்கு உடன்பாடு கிடையாது என அரசாங்கத்திடம் அறிவித்திருப்பதாக குறித்த கட்சியின் மேல் மாகாணசபை உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

வினைத்திறனான இயங்காத நிறுவனங்களை தேசிய மயப்படுத்துவது தொடர்பில் எந்த விதமான வரைமுறைகளும் பிறப்பிக்கப்படவில்லை எனவும் நிறைவேற்று அதிகாரமே இதனை தீர்மானிக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நடைமுறை உசிதமானதாக அமையும் என கருத முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# இலங்கையின் கடல்சார் மாநாட்டை பிரி.யும் தெ.ஆபிரிக்காவும் புறக்கணிப்பு

(கொழும்பு)

இலங்கை பாதுகாப்பு அமைச்சும் கடற்படையும் இணைந்து ஒழுங்கு செய்துள்ள காலி கடல்சார் பாதுகாப்பு மாநாட்டைப் புறக்கணிக்க பிரித்தானியாவும் தென்னாபிரிக்காவும் கடைசி நேரத்தில் முடிவு செய்துள்ளன.

அத்துடன் இந்த மாநாட்டில் ஆய்வுக்கட்டுரை ஒன்றை சமர்ப்பிக்கவிருந்த சென்னை கிறிஸ்தவக் கல்லூரியின் அரசியல் விஞ்ஞானப் பிரிவின் உதவிப் பேராசிரியர் கலாநிதி லோறன்ஸ் பிரபாகர் தனது கட்டுப்பாட்டை மீறிய காரணங்களால் ஆய்வுக்கட்டுரையை சமர்ப்பிக்க முடியாதுள்ளதாக அறிவித்துள்ளார்.

இதற்கிடையே பிராந்திய கடல்சார் ஒத்துழைப்பு தொடர்பான இந்திய கடற்படையினர் கண்ணோட்டம் தொடர்பாக இந்திய கடற்படையின் சார்பில் முதன்மை நடவடிக்கை பணிப்பாளர் கப்டன் பாலகிருஸ்ணன் ஆய்வுக்கட்டுரை ஒன்றைச் சமர்ப்பிக்கவுள்ளார்.


முன்னதாக இந்தியக் கடற்படையின் மூத்த அதிகாரி ஒருவரே இந்த ஆய்வுரையை சமர்ப்பிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்தியத் தரப்பில் மூத்த கடற்படை அதிகாரிகள் பங்கேற்காததும் பிரித்தானியா, தென்னாபிரிக்கா ஆகியன வெளியேறியதும் இலங்கைக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது.

இன்று திங்கட்கிழமை தொடங்கவுள்ள இந்தக் கருத்தரங்கில் அமெரிக்கா, சீனா, பாகிஸ்தான், பிரான்ஸ், அவுஸ்திரேலியா, ஜப்பான், மாலைதீவு, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பங்காளாதேஷ், கென்யா, நைஜீரியா, பிலிப்பைன்ஸ், தென்கொரியா, மலேசியா, ஓமான், கட்டார் ஆகிய நாடுகள் பங்கேற்கவுள்ளன.

இன்று காலை இந்தக் கருத்தரங்கை இலங்கை பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆரம்பித்து வைக்கவுள்ளார். (அ-2)

# ஈரான் இராணுவத் தளத்தில் குண்டுவெடிப்பு- 27 பேர் பலி



(ஈரான்)

ஈரான் தலைநர் தெஹ்ரானுக்கு அருகில் உள்ள இராணுவ தளத்தில் சனிக்கிழமை குண்டு வெடித்தது.

இதில் 27 பேர் உயிரிழந்தனர். 23 பேர் பலத்த காயம் அடைந்தனர். காயமடைந்தவர்கள் அனைவரும் மருத்துவமைனயில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக இராணுவத் துறை செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

பித்கானே என்ற இடத்தில் உள்ள இராணுவ தளத்தின் அணு ஆயுத இருப்புக் கிடங்கில் இந்தச் சம்பவம் நிகழ்ந்தது. இது எப்படி நிகழ்ந்தது என்பது தெரியவில்லை என்று அந்நாட்டு இராணுவ கொமாண்டர் ஷரீப் குறிப்பிட்டார்.

இந்தச் சம்பவம் ஏதாவது அரசியல் சதியாக இருக்கலாம் என்று ஈரானில் தகவல் கிளம்பியுள்ளது.

ஆனால் இதை அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினரான ஹுசைன் மறுத்துள்ளார். அணு ஆயுதக் கிடங்கில் குண்டுகளை இடமாற்றம் செய்யும் போது அவை வெடித்ததாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)




# ஆங்சாங் சூகி இடைத்தேர்தலில் போட்டியிடத் தீர்மானம்



(யாங்கூன்)

மியன்மார் தேசிய ஜனநாயக லீக் கட்சித் தலைவர் ஆன் சாங் சூகி இடைத்தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ளார்.

இதன்மூலம் மீண்டும் அவர் ஜனநாயக அரசியலில் அதிகார பூர்வமாக ஈடுபட முடியும். மியன்மாரில் 1990 களில் நடந்த பொதுத் தேர்தலில் சூகியின் தேசிய ஜனநாயக லீக் (என்.எல்.டி) கட்சி பெரும் வெற்றி பெற்றது. ஆனால் அப்போதைய இராணுவ அரசு அக்கட்சியினர் பதவியேற்கவிடாமல் தடுத்து இராணுவ ஆட்சியை தொடர்ந்து சூகி வீட்டுக் காவலில் அடைக்கப்பட்டார்.

இதையடுத்து இராணுவ ஆட்சி அனைத்துக் கட்சிகளும் தங்களை தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்து கொள்ள வற்புறுத்தியது. இதை சூகி எதிர்த்தார். மேலும் கடந்தாண்டு நவம்பரில் நடந்த தேர்தலையும் அவரது கட்சி புறக்கணித்தது. அதனால் தேர்தல் ஆணையம் என்.எல்.டி. யின் அங்கீகாரத்தை இரத்து செய்தது. அமெரிக்கா மற்றும் மேற்கத்தேய நாடுகளின் நெருக்கடியால் கடந்தாண்டு நவம்பர் மாதம் நடந்த பொதுத் தேர்தலுக்குப் பின் சில நாட்களில் சூகி விடுவிக்கப்பட்டார். இதனால் மியன்மாரில் ஜனநாயக ரீதியிலான அரசியலுக்கு வழி ஏற்படும் என்ற நம்பிக்கை உருவானது.

புதிய ஜனாதிபதி தெய்ன் செய்ன் அனைத்துக் கட்சிகளும் கடந்த 2008 இல் இராணுவ ஆட்சி உருவாக்கிய புதிய அரசியல் சாசனத்தை கட்டாயமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கட்டாய சட்டத்தை நீக்கி விட்டார்.

இந்நிலையில் என்.எல்.டி. செய்தித் தொடர்பாளர் நியான் வின் அளித்த பேட்டியில், என்.எல்.டி விரைவில் பதிவு செய்து கொள்ளும் எதிர்வரும் இடைத்தேர்தலில் சூகி போட்டியிடுவார் எனத் தெரிவித்தார்.

மியன்மார் பாராளுமன்றில் தற்போது 40 இடங்கள் வெற்றிடமாக உள்ளன. எனினும் எப்போது இடைத்தேர்தல், எந்தத் தொகுதியில் சூகி போட்டியிடுவார் என்ற விபரங்கள் தெரிவிக்கப்படவில்லை.

இதற்கிடையில் அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் நேற்று முன்தினம் அளித்த பேட்டியில்,

மியன்மார் உண்மையில் சில சீர்திருத்தங்களை மேற்கொண்டிருக்கின்றது. ஆனால் இன்னும் செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள் நிறைய உள்ளன என்றார். (அ-2)

# கடாபியின் மகன் சாடி நைஜீரியாவில் தஞ்சமடைந்தார்-முகம்மது இசோபோ

(பிரடோரியா)

லிபியாவில் 42 ஆண்டுகாலம் ஜனாதிபதியாக இருந்த கடாபிக்கு எதிராக மக்கள் புரட்சி வெடித்தது.

8 மாத போராட்டத்திற்குப் பின்னர் சிர்த் நகரில் புரட்சி படையினரால் கடாபி கொல்லப்பட்டார்.

அதற்கு முன்னதாகவே அவரது மனைவி, மகள் மற்றும் இரண்டு மகன்கள் அல்ஜீரியாவில் தஞ்சம் அடைந்தனர். மற்றொரு மகன் சாடி கடாபி (வயது-38) தனது ஆதரவாளர்களுடன் நைஜர் நாட்டுக்கு தப்பி வந்தார்.

அங்கு தனக்கு தஞ்சம் அளிக்கும் படி அந்த நாட்டு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார். தற்போது அவரது கோரிக்கை ஏற்கப்பட்டு உள்ளது.

நைஜரில் அவர் தஞ்சம் அடைய அனுமதி அளித்து இருப்பதாக அந்நாட்டு ஜனாதிபதி முகம்மது இசோபோ தெரிவித்துள்ளார்.

தென் ஆபிரிக்காவில் உள்ள பிரெடோரியா நகருக்கு அவர் வருகை தந்துள்ளார். அங்கு அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அந்த தகவலை வெளியிட்டார்.

மனிதாபிமான அடிப்படையில் அவருக்கு அடைக்கலம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் அகதி போன்று அவர் நடத்தப்படுவார் என்றும் கூறினார்.

ஐ.நா. சர்வதேச நீதிமன்றினால் தேடப்படும் மற்றொரு மகனான சயீப் அல் இஸ்லாம் குறித்து கேட்டதற்கு, அவர் எங்கு இருக்கின்றார் என தனக்குத் தெரியாது என கூறினார்.

(அ-2)

# லிபியாவில் அத்துமீறி செயற்பட்ட நேட்டோவுக்கு எதிராக விசாரணை

லிபியாவில் முன்னாள் ஜனாதிபதி கடாபியை எதிர்த்து புரட்சிப் படையினர் சண்டையிட்டனர். அவர்களுக்கு ஆதரவாக களம் இறங்கிய நேட்டோ படைகள் அத்துமீறி செயற்பட்டதாக புகார் எழுந்துள்ளது. இது குறித்து சர்வதேச நீதிமன்றம் விசாரணை நடத்த உள்ளது. லிபியாவில் 42 ஆண்டுகளாக சர்வாதிகார ஆட்சி நடத்திய ஆயிரக் கணக்கான மக்களை கொன்று குவித்தவர் கடாபி.

அவருக்கு எதிராக உள்நாட்டில் புரட்சி வெடித்தது. புரட்சி படையினருக்கு ஆதரவாக அமெரிக்கா, இங்கிலாந்து உட்பட பல நாடுகளை சேர்ந்த நேட்டோ படைகளும் சண்டையில் ஈடுபட்டன.

கடாபி இராணுவத்துக்கும் புரட்சி நேட்டோ படைகளுக்கும் கடும் மோதல் நடந்தது. இதில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். நேட்டோ படையினரின் தாக்குதலில் நூற்றுக்கணக்கான அப்பாவி மக்களும் கொல்லப்பட்டதாக புகார் எழுந்தது.

மேலும் நேட்டோ வீரர்கள் அத்துமீறி லிபியாவில் செயற்பட்டுள்ளதாக பல நாடுகள் குற்றம் சாட்டின. இந்நிலையில் நேட்டோ படை வீரர்களின் போர் குற்றங்கள், மனித உரிமை மீறல் குறித்து சர்வதேச நீதிமன்றம் விசாரணை நடத்த திட்டமிட்டுள்ளது. இதனால் நேட்டோவில் இடம்பெற்ற வீரர்கள் கலக்கத்தில் உள்ளனர்.

ஆனால் ஐ.நா. பாதுகாப்பு குழு தீர்மானத்தில் கூறப்பட்டுள்ள விதிமுறைகளின்படிதான் பொதுமக்களுக்கு பாதிப்பு இல்லாமல் நேட்டோ படையினர் லிபியாவில் செயற்பட்டனர் என்று மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# வயதான பெற்றோரை கவனிக்காதோருக்கு தண்டனை வழங்க தீர்மானம்

## தாய்வான் அரசாங்கம்

வயதான பெற்றோரைக் கவனிக்காமல் கைவிட்டால் ஓராண்டு சிறைத்தண்டனை வழங்க தாய்வான் அரசு முடிவு செய்துள்ளது. தாய்வானில் வயதான பெற்றோரை கவனிக்காமல் மகன் அல்லது மகள்கள் கைவிடுவதாக ஏராளமான புகார்கள் வந்த வண்ணமுள்ளன.

ஆண்டுதோறும் 65 வயதுக்கு அதிகமான 2ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெற்றோர் தாய்வானில் கைவிடப்படுவதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இது அரசுக்குப் பெரும் தலைவலியை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினர்.

வயதான பெற்றோருக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் புதிய சட்டம் கொண்டு வரவேண்டும் என்று வலியுறுத்தினர். இதையடுத்து பெற்றோரைக் கவனிக்காமல் ஒதுக்கும் மகன் அல்லது மகளுக்கு ஓராண்டு சிறைத்தண்டனை மற்றும் அபராதம் விதிக்கும் வகையில் புதிய மசோதா தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும் பெற்றோரின் மாத செலவுக்கு சம்பளத்தில் இருந்து குறிப்பிட்ட தொகை ஒதுக்குவது அல்லது முதியோர் இல்லத்தில் சேர்க்கப்படும் பெற்றோரின் பராமரிப்புக்கு ஒரு பெருந்தொகை வைப்பு நிதியாக வழங்கவும் மசோதாவில்வழிவகைசெய்யப்பட்டுள்ளது.

இந்த மசோதா விரைவில் நிறை வேற்றப்பட்டு சட்டம் அமுலுக்கு வரும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் லாய் ஷிபோ தெரிவித்தார். (4-2)



பாலஸ்தீன ஜனாதிபதி முகம்மது அப்பாஸ் (வலது) துனிசியாவில் மாடரேட் இஸ்லாமிஸ்ட் கட்சியின் தலைவர் ரேஸிட் கனேவ்ச்சியை சந்தித்து கலந்துரையாடுவதைப் படத்தில் காணலாம்.

# இலங்கையில் நடந்தவற்றை விசாரிக்காததால் பொதுநலவாய அமைப்பில் பிரச்சினை ஏற்படலாம்

## அவுஸ். முன்னாள் பிரதமர் சுட்டிக்காட்டு

(சிட்னி)

இலங்கையில் என்ன நடந்தது என்பதை விசாரணை செய்வதற்கு ஏற்பட்ட பின்னடைவு எதிர்காலத்தில் பொதுநலவாய அமைப்பில் பிரச்சினைகளை ஏற்படுத்தலாம் என அவுஸ்திரேலியாவில் மூன்று முறை பிரதமராக பதவி வகித்த மெல்கம பிரேசர் த ஜப்பான் டைம்ஸ் பத்திரிகையில் பொதுநலவாய அமைப்பு தவறவிட்ட சந்தர்ப்பங்கள் என்ற தலைப்பில்எழுதியபத்தியில்வலியுறுத்தியுள்ளார்.

அப்பத்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

பொதுநலவாய அமைப்பிலுள்ள 54 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் கடந்த ஒக்டோபர் 28, 30 ஆம் திகதிகளில் நடைபெற்ற பொது நலவாய மாநாட்டில் கலந்து கொண்டனர். முக்கிய நிகழ்ச்சி நிரலாக பொதுநலவாய செயலகத்தைப் பலப்படுத்துவதற்கும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் நகரம் அண்மையில் நடைபெற்ற வாக்கெடுப்பின் போது தனதாக்கிக் கொண்டது.

கரீபியன் தீவு நாடான சென். கிட்சில் நடைபெற்ற 70 உறுப்பினர்களைக் கொண்ட பொது நலவாய விளையாட்டுக்கள் சம்மேளனக் கூட்டத்தின்போது நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் 43:27 என்ற கணக்கில் அதன் 21 ஆவ்து போட்டித் தொடரை நடத்தும் தகுதியை அவுஸ்திரேலியா பெற்றுள்ளதுடன் ஐந்தாவது தடவையாகவும் இப்போட்டிகளை நடத்தும் நாடாக பரிணமித்துள்ளது.இதன் முலம் பொது நலவாய விளையாட்டுக்களை முதன்முதலாக நடத்தும் இலங்கையின் கனவையும் அது கலைத்துவிட்டதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

மேற்குறித்த போட்டிகளை நடத்துவதற்கு ஏற்றவகையில் கோல்ட் கோஸ் நகரம் அனைத்து விளையாட்டு வசதிகளையும் வலுவான கட்டமைப்பையும் கொண்டிருப்பது அதன் கேள்விக்கு பலம் சேர்த்ததாக கூறப்படுகின்றது. இதேசமயம் கடந்த 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த அம்பாந்தோட்டை நகரம் எதிர்வரும் 2016 ஆம் ஆண்டளவில் புதிய விளையாட்ரங்குகளையும் சர்வதேச விமான நிலையம் ஒன்றையும் ஏனைய கட்டட அமைப்புக்களையும் கொண்டு விளங்கும் என இலங்கையின் மனுக்கோரலில் உறுதியளிக்கப்பட்டிருந்தமையும் கவனிக்கத்தக்கது.

உலகின் அதி முக்கியத்துவம் வாய்ந்த விளையாட்டுக்களில் பொதுநலவாயப் போட்டிகளும் ஒன்றெனக் குறிப்பிட்டுள்ள குயீன்ஸ்லாந்து பிரதமர் அன்னா பிளை கடின வேலைக்கேற்ற விலை கிடைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகருக்குத் தெற்கே 90 கிலோமீற்றர் தொலைவில் சுமார் 5 இலட்சத்து 40 ஆயிரம் மக்களைக் கொண்டுள்ள கோல்கோஸ்ட் இப்போட்டிகளை நடத்தவுள்ள முதலாவது பிராந்திய நகராகும். இதற்கு முன்னர் இப்போட்டிகள் மாநிலத்தலைநகரமான சிட்னியில் 1938 இலும் பேர்த்தில் 1962 இலும் பிரிஸ்பேனில் 1982 இலும் மெல்பேனில் 2006 இலும் நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 1998 இல் கோலாலம்பூரிலும் 2010 இல் புதுடில்லியிலும் நடைபெற்ற இந்தப் போட்டிகளை எதிர்வரும் 2018 இல் அம்பாந்தோட்டையில் நடத்தி ஆசியாவின் மூன்றாவது நாடாக முத்திரை பதிக்க எதிர்பார்த்த இலங்கைக்கு இத் தெரிவானது பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது. விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந் தானந்த அளுத்கமகே தலைமையிலான இலங்கைத் தூதுக் குழுவில் கிரிக்கெட் ஜாம் பவான் முத்தையா முரளிதரன் உள்ளிட்ட பல விளையாட்டுத் துறை பிரபலங்கள் இப்போட்டிக்கான ஆதரவை திரட்டும் முகமாக கரீபியன் தீவான சென் கிட்ஸுக்குப் படையெடுத்து சென்றிருந்த போதிலும் அது வெற்றி அளிக்காத நிலையில் அவர்கள் நாடு திரு ம்பியமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இப்போட்டிகளை நடத்துவதற்கான ஆற்றலை தான் கொண்டிருக்கவில்லை என இலங்கை மிகத்தெளிவாக காட்டியுள்ளது எனவும் எவ்வாறான நிலையில் எப்போது இத்தகைய கேள்வி மனுக்களை சமர்ப்பிக்கவேண்டும் என்பதனை இத் தெரிவானது இலங்கைக்கு எடுத்துக்காட்டியுள்ளது எனவும் பொதுநலவாய விளையாட்டுக்கள் சம்மேளனத்தில் முன்னாள் தலைவர் மைக்கல் பெனல் கருத்து வெளியிட்டார்.

கோல்ட்கோஸ்ட்டில் உள்ள சேர்பேர்ஸ் பிரடைஸ் ஹோட்டல் முன்றலில் நேற்று முன்தினம் காலை ஒன்றுகூடிய நூற்றுக் கணக்கானோர் கோல்கோஸ்ட் தெரிவு செய்யப்பட்டுள்ள அந்த இனிப்பான செய்தியை பெனல் அறிவித்ததும் வெற்றி முழக்கம் இட்டதுடன் மாலையில் விளையாட்டுப்போட்டிகளையும் கலைநிகழ்ச்சிகளையும் நடத்தி மகிழ்ந்தனர். (அ-2)

# ஜப்பானிய பாதுகாப்பு கப்பல்கள் இலங்கையில்

(கொழும்பு)

சோமாலிய கொள்ளையர்களுக்கு எதிராக தாக்குதல் நடத்திய ஜப்பானிய கப்பல்கள் இரண்டு இன்று கொழும்பு துறைமுகத்துக்கு வந்துள்ளன.

கடற்படை பேச்சாளர் கோசல வர்ணகுள சூரிய அதனை தெரிவித்துள்ளார்.

தமது இலக்கை நிறைவு செய்ததன் பின்னர் இந்த கப்பல்கள் இலங்கை வந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் இரண்டு நாட்டு கடற்படை பிரதானிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகளும் நடைபெறவிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# அரசு-த.தே.கூட்டமைப்பின் பேச்சுக்கள் வெளிப்படையாக அமைய வேண்டும்

## தயாசிறி எம்.பி.தெரிவிப்பு


(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையிலான பேச்சு வார்த்தைகளை ஆரோக்கியமான முறையிலேயே நாங்கள் பார்க்கின்றோம். ஆனால் கூட்டமைப்பும் அரசாங்கமும் இரகசியமான முறையில் பேச்சுக்களை நடத்தக்கூடாது.

மாறாக வெளிப்படைத்தன்மையுடன் பேச்சுக்களை நடத்த வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தமது யோசனைகளை அரசாங்கத்துக்கு ஏற்கனவே வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் அவை எவ்வாறான யோசனைகள் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு இதுவரை தெரியாது. ஆனால் அது தொடர்பில் நாங்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார். (அ-2)

# மொரீசிய நாட்டின் ரூபாய் தாளில் தமிழ் எழுத்துக்கள்




மொரீசிய நாட்டின் ரூபாய்த் தாளில் தமிழில் எழுத்துக்களும் எண்களும் இடம்பெற்றிருக்கின்றன.

கன்னட, தெலுங்கு, மராட்டிய மக்கள் தங்களுடைய எண்களை மறக்காமல் பேருந்துகளிலும் அரசுத்துறைகளிலும் பயன்படுத்துகிறார்கள்.


எங்கோ தூரத்தில் ஆபிரிக்காவின் அருகில் உள்ள மொரீசிய அரசு தமிழ் எண்களை பயன்படுத் துவது பெருமைக்குரியதே.மொரீசியசில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் வாழ் கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் அந்த தமிழ் எழுத்துக்களையும் எண்களையும் படத்தில் காணலாம். (அ-2)

# ஒன்லைன் விசா கட்டணம் குறைப்பு


(கொழும்பு)

இலங்கைக்கு வரும் சார்க் நாடுகளைச் சேர்ந்த பிரஜைகளிடமிருந்து விசாக் கட்டணமாக பத்து அமரிக்க டொலர்களையும் ஏனைய நாட்டு பிரஜைகளுக்கு 20 அமெரிக்க டொலர்களையும் அடுத்த வருடம் முதல் அறவிடவுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர் ஒன்லைன் மூலம் இலங்கை விசா பெறுவதற்கு 50 அமெரிக்க டொலர்கள் அறவிடப்பட்டன. அதனைக் குறைக்குமாறு இந்தியா கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-2)







பருத்தித்துறை பிரதேச சபை மத்திய நூல்நிலையத்தில் அண்மையில் தேசிய வாசிப்பு வார நிகழ்வு இடம் பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் செ.கிருஷ்ணராஜாவை நூலகர் எஸ்.தெய்வேந்திரன் மாலை அணிவித்து வரவேற்பதையும் புத்தகக் கண்காட்சியை மாணவர்கள் பார்வையிடுவதனையும் கட்டுரைப்போட்டியில் பரிசு பெற்ற மாணவனுக்கு பிரதம விருந்தினர் பரிசு வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-மருதங்கேணி செய்தியாளர்)

வெட்கத்துக்கு புரிவது சட்டத்திற்குப் புரியாது.

– மாபஸான்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## ஒழுங்கீனங்கள் ஒழுங்காகிவிட்டால் ஒழுங்குகளே ஒழுங்கீனமாகும்

யாழ்ப்பாணம்–கொழும்பு பஸ் சேவை முற்ற வெளிப் பகுதியில் நடைபெறுகின்றது.

யாழ்.நகர மையத்தில் இருக்கக்கூடிய வசதியீனங்களால் முற்றவெளிப் பகுதி யாழ்.–கொழும்பு பஸ் சேவைக்கு பொருத்தமான இடம் என்று எடுத்துக் கொள்ளலாம்.

எனினும் யாழ்ப்பாணத்தின் பொறுப்பான பதவிகளில் இருப்பவர்கள் எவரும் பஸ் சேவை நடைபெறும்போது அந்தப் பகுதிக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை பார்வையிடவில்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது.

அந்த அளவிற்கு அங்குள்ள நிலைமைகள் உள்ளன. இது மழை காலம் என்பதால் அப் பகுதி சேறும் சகதியுமாக காட்சி தருவதுடன், பயணிகள் ஆசனப் பதிவு செய்துகொண்ட பஸ்களை தேடிப் பிடிப்பதற்கே படாப்பாடுபடுகின்றனர்.

நிலைமை இதுவாக இருக்கையில், பயணிகளை தத்தம் பஸ்களுக்காக இழுத்துச் செல்லும் ஒரு பெரும் கூட்டத்தின் தொல்லை போதுமென்றாகிவிடும்.

இதனிடையே பயணத்தோடு தொடர்பில்லாதவர்களின் ஆக்கிரமிப்பும் இந்தப் பகுதியில் இருப்பதைக் காண முடிகின்றது.

தரமானதும் பெறுமதியானதுமான பஸ்கள் சேவையில் ஈடுபடுகின்ற போதிலும், பயணிகள் கௌரவமான முறையில் பஸ் சேவையைப் பெறமுடியாமல் இருப்பது வேதனைக்குரியது.

இதற்கு அடிப்படைக் காரணம் முற்றவெளி பஸ் தரிப்பிடத்தில் எந்தவிதமான ஒழுங்கு படுத்தலும் அறவே இல்லாது இருப்பதாகும்.

தனியார் துறையினர் பஸ் சேவையில் ஈடுபடுகின்ற போதிலும் அவர்கள் பயணிகளை இழுத்தெடுத்து தங்கள் பஸ்களில் ஏற்றி விட்டால் போதும் என்ற நிலையில் உள்ளனர்.

எனவே இதுவிடயத்தில் பொறுப்பானவர்கள் தலைப்பட்டு யாழ்–கொழும்பு பஸ் சேவையை ஒழுங்குபடுத்த வேண்டும்.

சேவையில் ஈடுபடும் பஸ்கள் தரித்துநிற்கின்ற இடங்களை முன்கூட்டியே ஒதுக்கீடு செய்வதுடன் அது தொடர்பான அறிவுறுத்தல்களை நுழைவாயில் பகுதியில் காட்சிப் படுத்துவதும் அவசியமாகும்.

அதேநேரம் பயணிகள் தமது பய்ணத்திற்கான பஸ்களை தெரிவு செய்து கொள்வதற்காகவும் பயணிக்கும் நேரம் உள்ளிட்ட இதர விடயங்களை அறிந்து கொள்வதற்காகவும் ஆன உத்தியோகத்தர்களை நியமித்து அதன் ஊடாக ஒழுங்கானதும் கௌரவமானதுமான பஸ் சேவையை ஏற்பாடு செய்ய வேண்டும்.

தற்போது யாழ்ப்பாணம் முற்றவெளிப் பகுதியில் நடைபெறும் யாழ்–கொழும்பு பஸ் சேவையின் தரத்தைப் பார்க்கும்போது யாழ்ப்பாணத்தில் இடம்பெறுகின்ற மோசமான கலாசார சீரழிவிற்கு இத்தகைய ஒழுங்கீனங்கள்தான் காரணமோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

எந்த சேவையாயினும் முதலில் அதில் ஒரு ஒழுங்கு இருக்க வேண்டும். அப்போதுதான் ஏனைய விடயங்களிலும் ஒழுங்கு ஏற்படும். மாறாக ஒழுங்கீனங்களே ஒழுங்குகளாக மாறுமாயின்,ஒழுங்குகள் ஒழுங்கீனங்களாகி விடும்.

# ஈழத்தமிழர்களின் போராட்டம் நியாயமானது; ஏகாதிபத்திய அரசுகள் வேண்டுமென்றே வீழ்த்தியது

## லத்தின் அமெரிக்க எழுத்தாளர் ரான் ரைடனவர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஈழத்தமிழர்களின்போராட்டம்நியாயம் மிகுந்தது. அதை ஏகாதிபத்திய அரசுகள் வேண்டுமென்றே வீழ்த்தின என்று குறிப்பிட்டலத்தீன்அமெரிக்கஎழுத்தாளரும் களப்பணியாளருமான தோழர் ரான் ரைடனவர் அதற்கு சோசலிச நாடுகளும் துணை போனது மிகவும் துயரமானது என்று குறிப்பிட்டார்.

த த தமிழ்நேசன்இன்சிறிலங்காஎன்ற அவரது நூல் வெளியீட்டில் பேசிய போது தோழர் ரான் ரைடனவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஈழத்தமிழர்களுக்கு எதிரான யுத்தத்தில் போர்க்குற்றவாளியாக உள்ள இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக கியூபா எடுத்த நிலைப்பாடு தனக்கு பெரும் அதிர்ச்சியைத் தந்ததாகவும் தோழர் ரான் ரைடனவர் தெரிவித்தார்.

புலிகள் பயங்கரவாத இயக்கம் கிடையாது என்று குறிப்பிட்ட ரான் ரைடனவர், அவர்கள் கையாண்ட முறைகளில் சில அப்படி இருந்தாலும் புலிகள் விமர்சனங்களுடன் ஆதரிக்கப்பட வேண்டிய முக்கியமான விடுதலை இயக்கம் என்றும் குறிப்பிட்டார்.

தனதுரையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நான் ஒரு இடதுசாரியாகவும் சர்வதேசவாதியாகவும் இருந்தாலும் மறுக்கப்படும் உரிமையையும் சுதந்திரத்தையும் ஈழத்தமிழர்கள் கோரிக்கொண்டு தனி நாடு ஒன்றில் வாழவிரும்பும் அவர்களின் அமைதிக்கான போராட்டத்தை அங்கீகரிக்கின்றேன்.

ஈழத்தமிழர்கள் அமைதிக்காகவும் சுதந்திரத்திற்காகவும் சிந்திய இரத்தம் விலை மதிக்க முடியாதது. அவர்களது சுதந்திரத்தை பெற்றுக் கொடுக்க இயற்கையான உறவாக இருக்கும் தமிழக தமிழர்கள் செயற்பட வேண்டும்.

ஈழத்தமிழர்களின் போராட்டம் நீண்டகாலமாக நடந்திருக்கிறது. அவர்கள் அமைதியான வழியில் 30 ஆண்டுகள் போராடி இருக்கிறார்கள். அவர்கள் விரும்பி ஆயுதங்களைத் தூக்கவில்லை. அதற்கான சூழலை இலங்கை அரசுதான் உருவாக்கியிருக்கிறது. கறுப்பினமக்களை விடவும் பாலஸ்தீன மக்களை விடவும் ஈழத் தமிழர்கள் அதிகம் இழந்திருக்கிறார்கள்.

ஈழப் போராளி இயக்கங்கள் தங்களுக்குள் முட்டி மோதிக் கொண்டதும் தலைவர்களைக் கொலை செய்துகொண்டதும் முற்காலத்தில் நடந்த பிழையான செயற்பாடுகள். ஈழத்தமிழர்கள் தொடர்ச்சியாக அமைதிக்காகப் போராடிக் கொண்டிருந்தார்கள். அவர்களை இலங்கை அரசாங்கம் ஏமாற்றியதுடன் அனைத்து ஏகாதிபத்தியங்களும் அவர்களின் போராட்டத்தை ஒடுக்கியிருக்கின்றன.

ஏகாதிபத்தியம் தனது நடவடிக்கைகளுக்கு ஆதரவான போராட்டங்களை விடுதலைப் போராட்டம் என்றும் தனது போக்கிற்கு உடன்பாடற்ற போராட்டங்களை பயங்கரவாதப் போராட்டம் என்றும் சித்திரித்தது. கியூபா, லத்தீன் அமெரிக்கா போன்ற நாடுகள் ஈழப் போராட்டத்தைப் பற்றி அறிந்திருக்காத காரணத்தினால் ராஜபக்ஷவுக்கு ஆதரவு நிலைப்பாடு எடுத்திருக்கலாம்.

கறுப்பின மக்களை அமெரிக்கா படுகொலை செய்து இன அழிப்பை மேற்கொண்டதை நான் கண்களால் பார்த்ததன் காரணமாகவே பல்வேறு இனங்களிலும் நிறங்களிலும் ஒடுக்கப்படும் மக்களுக்காக நான் போராட்டத்தை தொடங்கினேன். அவ்வகையில் தான் ஒடுக்கப்படும் இனப்படுகொலை செய்யப்படும் ஈழத்தமிழர்களின் போராட்டத்தில் எனக்கு ஈர்ப்பு ஏற்பட்டது.

ஈழத்தமிழர்கள் அமைதியாக வாழவும் சுதந்திரத்தை பெறவும் உலகெங்கிலும் பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டும். சோசலிச நாடுகளுக்கு ஈழத் தமிழர்களின் போராட்டத்தையும் தியாகத்தையும் புரிய வைத்தால் அவர்களிடமிருந்து பெரும் ஆதரவு சக்தி உருவாகும். அதற்காக எல்லோரும் உழைக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

தோழர் ரான் ரைடனவர் வட அமெரிக்காவைச் சேர்ந்தவர். ஏகாதிபத்தியத்தை எதிர்த்து சே குவேரா கொள்கையைப் பின்பற்றும் இவர் லத்தீன் அமெரிக்க நாடுகளின் விடுதலைப் போராட்டங்களை ஆதரிப்பவர். கியூபப் புரட்சியினால் உந்தப்பட்டு பத்திரிகையாளராகவும் எழுத்தாளராகவும் களப்பணியாளராகவும் செயற்பட்டவர்.

கியூபா புரட்சி குறித்து நான்கு நூல்களை எழுதியுள்ள தோழர் ரான் ரைடனவர் ஈழ விடுதலைக்கான தனது ஆதரவை தெரிவிக்கும் முகமாக ஈழத்தமிழர்களின் போராட்டம் குறித்து த த தமிழ்நேசன் இன் சிறிலங்கா என்ற நூலை எழுதியுள்ளார். இந்நூலில் ஈழப் போராட்டத்தின் நியாயத்தை எடுத்துச் சொல்லியுள்ளார். (பா–11)

# வடக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றம்; டிசம்பர் இறுதியில் பட்டியல் வெளியிடப்படும்

## மாகாணக் கல்வித் திணைக்களம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான வருடாந்த இடமாற்றத்தின் இறுதிப்பட்டியல் டிசம்பர் 4ஆம் வாரத்தில் வெளியிடப்படுமென வடக்குமாகாண கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது.

அத்துடன் இம்முறை இடமாற்றத்திற்கு உட்படுத்தப்பட்ட ஆசிரியர்களது மேல்முறையீடு உடல் சார்ந்த பாரதூரமான மருத்துவப் பிரச்சினைகளை எதிர்கொண்டால் மட்டுமே கருத்தில் கொள்ளப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கடந்த 11ஆம் திகதி யாழ்.பொதுநூலகத்தில் அமைந்துள்ள வட மாகாண மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற வடக்கு மாகாண கல்வி அபிவிருத்தி கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் வருடாந்த இடமாற்றங்கள் யாவும் தற்போது உள்ள ஆசிரிய சேவையின் அடிப்படையிலான தரவுகளுக்கு ஏற்ப வலயக் கல்விப் பணிப்பாளர்கள், மாகாணக்கல்விப் பணிப் பாளர் மற்றும்ஆசிரியதொழிற்சங்கஉறுப்பினர்கள் கொண்ட இடமாற்ற சபையினரின் சிபார்சுக்கு அமைய ஆளுநரின் அனுமதியுடன் இடமாற்றம் பெறும் ஆசிரியர்களின் பட்டியல் பார்வைக்கு இடப்படும்.

இதில் இடமாற்றத்திற்கு உட்பட்ட ஆசிரியர்களது மேல்முறையீடு உடல் சார்ந்த பாரதூரமான மருத்துவப் பிரச்சினைகளை எதிர்கொண்டால் மாத்திரமே கவனத்தில் கொள்ளப்படும். ஏனைய மேல்முறையீடுகள் நிராகரிக்கப்படும்.

இந்நடவடிக்கையின் பின் இடமாற்றம் வழங்கப்படும் ஆசிரியர்களின் இறுதிப்பட்டியல் எதிர்வரும் டிசம்பர் 4 ஆம் வாரத்தில் வெளியிடப்பட்டு ஜனவரி மாதம் முதலாம் தவணை ஆரம்பத்தில் அமுலுக்கு வரும் என வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

## புதையல் தோண்டிய ஒன்பது பேர் கைது

(கொழும்பு)

அம்பாறை நவகம்புர பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டின் பேரில் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் புதையல் தோண்டுவதற்காக சந்தேக நபர்கள் பயன்படுத்திய உபகரணங்களையும் கைப்பற்றியதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்களை அம்பாறை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ–2)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### கஷ்டங்களை வெல்வது எப்படி?



மேலை நாட்டு விஞ்ஞானத்தோடு இணைந்த வேதாந்தமும் பிரமச்சாரியமும் வாழ்க்கையின் அடிப்படை இலட்சியங்களாக நமக்குத் தேவைப்படுகின்றன.

ஆசிரியரின் வாழ்க்கை முன்மாதிரியாக அமையாமல் மாணவனால் எந்தவிதக் கல்வியையும் பெறமுடியாது.

உன்னுடைய குறிக்கோளை அடைய முயற்சிக்க வேண்டும். தோல்வியை கண்டுதுவளக்கூடாது.தோல்வியின் மூலமே நாம் புத்திசாலிகளாகிறோம்.

உனக்குள் இருக்கும் ஆற்றல் புறத்தில் வெளிப்படும் வகையில் நீ வளர வேண்டும். வேறு எவரும் உனக்கு கற்பிக்கவும் முடியாது.உன்னை ஆன்மீக வாதி ஆக்கிவிடவும் முடியாது. உனது சொந்த ஆன்மாவை தவிர வேறு ஆசிரியர் யாரும் இல்லை.

இடையறாத பயிற்சியின் மூலம் கஷ்டங்களை நாம் வெல்ல முடியும். எளிதில் பாதிக்கப்படும் வகையில் நம்மை நாமே விட்டு வைத்தாலன்றி நமக்கு எதுவும் நேர்ந்து விட முடியாது என்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

தொடர்ந்து புனிதமான எண்ணங்களை சிந்தித்தபடி நன்மையைச் செய்து கொண்டிருந்தால் தீய செயல்கள் தலை காட்ட வழி ஏற்படாது.

# கூடங்குள போராட்டக்காரர்களை யாரும் களங்கப்படுத்தக்கூடாது

## மக்கள் போராட்டம் ஓங்கி எழும் என்கிறார் வைகோ

(சென்னை)

கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு எதிராக போராட்டம் நடத்திவருபவர்களை களங்கப்படுத்த முயற்சிக்க வேண்டாம் என்று ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோ வேண்டுகோள் விடுத்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையின் விபரம் வருமாறு, அணுமின் நிலையம் பாதுகாப்பற்றது. கோடிக்கணக்கில் இலாபம் ஈட்டுகின்ற பன்னாட்டு நிறுவனங்கள் மனித உயிர்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் கொடுத்தும் உடல் நலக்கேடுகள் வராமல் தடுப்பதற்கும் ஏதேனும் விபத்துக்கள் ஏற்பட்டால் உரிய நட்டஈடு வழங்குவதற்கும் தயாராக இல்லாத நிலையில் தங்களுக்குப் பேராபத்து ஏற்படுமென அஞ்சுகின்ற மக்களின் போராட்டம் சரியானதுதான் என்று அணுசக்தியை ஆய்வு செய்யும் மேதைகளான சூரத் ராயு ,எம்.பி. ரமணா ஆகியோர் கூறியுள்ளனர்.

இந்த அணு மின்னிலையத்தில் அமைக்கப்படுகின்ற ரியாக்டர்கள் பாதுகாப்பானவை என்பதற்கு எந்த உத்தரவாதமும் தரமுடியாது என்றும் கூறியுள்ளனர். இந்திய மின் துறையின் முன்னாள் செயலர் சர்வா, அப்துல் கலாம் கூறிய கருத்துக்களுக்குக் கடுமையான மறுப்பு தெரிவித்து ,கூடங்குளம் அனல் மின் நிலையம், முழுவதும் பாதுகாப்பானது என்பதை மறுத்து உள்ளார்.

இந்நிலையில் 70 பதுகளின் தொடக்கத்தில் இந்தியாவில் 43 ஆயிரத்து 500 மெகாவோட் அணுசக்தி மூலம் 2000 ஆம் ஆண்டுக்குள் உற்பத்தி செய்யப்படும் என்று அறிவித்தது. ஆனால், இதுவரையிலும் 2 ஆயிரத்து720 மெகாவோட் மின்சாரம் மட்டுமே அணுசக்தியால் உற்பத்தி செய்யப்படுகிறது. அதாவது , இப்போதைய இந்தியாவின் மொத்த மின் உற்பத்தியில் 2.8 விழுக்காடு தான் அணுமின்நிலையங்கள் மூலமாக உற்பத்தி ஆகின்றது. இந்நிலையில், தங்கள் உயிர்களுக்கும் ,வருங்காலத் தலைமுறையினரின் உடல்நலனுக்கும் ,பேராபத்து நேரும் என்ற காரணத்தால் கூடங்குளம் வட்டாரத்தில் உள்ள இலட்சக்கணக்கான மக்கள் தங்களை வருத்திக்கொண்டு போராடுகின்றார்கள். பல்லாயிரக்கணக்கான தாய்மார்கள் தொடர்ந்து பட்டினிப்போரும் நடத்துகின்றார்கள்.

ஆனால் இந்தப் போராட்டத்தை ஒடுக்க வேண்டும் என்கிற நோக்கத்தில் அதில் ஈடுபட்டு உள்ளவர்களை களங்கப்படுத்தி, கொச்சைப்படுத்தி, பழிதூற்றும் எண்ணத்துடன் வெளிநாட்டுச் சக்திகளின் தூண்டுதல் என்று அணுசக்திதுறைதலைவர் ஒரு அக்கிரமமான குற்றச்சாட்டை சொன்னார். அது கிறிஸ்தவ மிஷநெறிகளின் பின்னணி என்று சிலர் நஞ்சைக் கக்கினார்கள். மத்திய அமைச்சர் நாராயணசாமி போராட்டக்காரர்களுக்கு எங்கிருந்தோ பணம் வருகின்றது. அது குறித்து விசாரிக்கப்படும் என்று கூறியிருப்பது மிகவும் கண்டனத்துக்குரியதாகும்.

போபர்ஸ் பீரங்கி பேர ஊழலில் கோடிக்கணக்கில் பணத்தை கொள்ளை அடித்து வெளிநாட்டு வங்கிகளில் பதுக்கி வைத்ததோடு அதற்கு புரோக்கர் வேலை பார்த்த வின்சட்டாவையும் வெளிநாட்டுக்கு தப்பவைத்த ஊழல் பேர்வழிகள் பங்குச்சந்தை ஊழல் தற்போதைய இமாலய ஸ்பெக்ட்ரம் ஊழல் மூலமாக உலகத்திலேயே மிகப்பெரிய ஊழல் செய்த பேர்வழிகளாகப் பெயர் எடுத்த கூட்டத்தைச்சேர்ந்தவர்கள் நியாயமாகப் போராடுகின்ற மீனவ மக்களையும் தென் மாவட்ட மக்களையும் களங்கப்படுத்த முயல்கின்றனர்.

மக்கள் கோபத்தின் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் போராட்டத்தை முன்னின்று நடத்துபவர்கள் மீது பொய்யான வழக்குகளைப்போட்டு போராட்டத்தை நசுக்க மத்திய அரசு திட்டமிட்டு உள்ளதாகத் தெரிகின்றது.

இந்த முயற்சிகளுக்கு மாநில அரசு ஒருபோதும் துணைபோகக்கூடாது. முல்லைப் பெரியாறு பிரச்சனையிலும் தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் நாளும் தாக்கிக்கொல்லப்படும் பிரச்சினையிலும் ஈழத்தமிழர் பிரச்சினையிலும் தொடர்ந்து தமிழ் நாட்டுக்குத் துரோகம் இழைத்து வருகின்ற இந்திய அரசுக்கு தலைமை தாங்கும் காங்கிரஸ் கட்சி கூடங்குளம் அணுமின் நிலையப் பிரச்சினையிலும் அக்கிரமமான நடவடிக்கைகளில் ஈடுபடுமானால் மக்கள் போராட்டம் மேலும் ஓங்கி எழும். பொய் வழக்குப் போடுவதால் நச்சுப்பிரசாரம் செய்வதால் மக்கள் சக்தியை ஒடுக்கமுடியாது என எச்சரிக்கின்றேன். இவ்வாறு வைகோ தனது அறிக்கையில் கூறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் பாராளுமன்றத்தில் ஆழமாக ஆராயப்படும்

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை அரசாங்கத்திடம் சம்ர்ப்பிக்கப் பட்டதும் அதன் உள்ளடக்கங்கள், பரிந்துரைகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் ஆழமான ரீதியில் விவாதிக்கப்படும் ஆளும் கட்சியின் பிரதம கொராடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் நீண்டகால செயற்பாடுகளின் பின்னர் சில தினங்களில் அதன் அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப் படவுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் அரசாங்கத் தரப்பினரும் பொது மக்களும் இதுவரை காலமும் காத்திருந்தனர். இந்நிலையில் ஆரோக்கியமான ரீதியில் அதனை நாங்கள் எதிர்நோக்குகின்றோம் என்றும் அவர் கூறினார். (அ-2)

# வவுனியா வளாகத்தின் வருடாந்த ஆராய்ச்சி அமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் வருடாந்த ஆராய்ச்சி அமர்வு (VCA RS-2011) நாளை மறுதினம் காலை 8.30 தொடக்கம் மாலை 4.30 மணிவரை வவுனியா றோயல் காடின் மண்டபத்தில் வவுனியா வளாக முதல்வர் ஆர். நந்தகுமார் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், சிறப்பு விருந்தினராக வவுனியா வளாக முன்னாள் முதல்வர் பேராசிரியர் எஸ். இராசதுரை ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

களனி பல்கலைக்கழக பட்டப்படிப்புகள் துறை பீடாதிபதி பேராசிரியர் மணிகுணசேகர ஆங்கிலத்தில் பங்கும் பிராந்தியங்களின் அபிவிருத்திக்கான மேற்கிளம்பும் வாய்ப்புகள் எனும் தொனிப்பொருளில் தொடக்க உரையை ஆற்றவுள்ளார்.

அத்துடன் யாழ். பல்கலைக்கழக பௌதீகத்துறைத்தலைவரும் பேராசிரியரு[illegible]ன பி.ரவிராஜன் மாற்றுசக்தி மூலத்தி[illegible]ன பிராந்திய மட்டத்தில் அபிவிருத்தி செய்தல் எனும் தலைப்பில் சிறப்புரையினை நிகழ்த்தவுள்ளார்.

தொடர்ந்து ஒரேநாளில் ஆராய்ச்சி அமர்வுகள் எட்டு பிரிவுகளாக காலையிலிருந்து மாலை வரை இடம் பெறும்.

நிகழ்ச்சியின் நிறைவில் கலாசார நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாக வவுனியா வளாகத்தின் ஆங்கிலத்துறைத்தலைவரும் ஆராய்ச்சி அமர்வின்இணைப்பாளருமான கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் அறிவித்துள்ளார்.

(அ-2)

# இலங்கையில் வருடாந்தம் 80 ஆயிரம் வீதி விபத்துக்கள்

(கொழும்பு)

இலங்கையில் வருடாந்தம் 80 ஆயிரம் வீதிவிபத்துக்கள் இடம்பெறுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அவற்றுள் 30 ஆயிரம் விபத்து பாரதூரமானவை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு 10 நிமிட இடைவெளியில் நாட்டின் ஏதேனும் ஒரு பகுதியில் விபத்து ஒன்று இடம் பெறுவதாக கூறப்படுகிறது.

இந்தநிலையில் இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரையில் வாகன விபத்துக்களை தடுக்கும் தெளிவுபடுத்தும் வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

நாடெங்கிலும் உள்ள சுகாதார மத்திய நிலையங்களின் ஊடாக இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

வாகன விபத்துக்கள் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. (அ-2)

# வேதாரணியத்தில் வசிக்கும் இலங்கை நபரிடம் 80 இலட்சம் பெறுமதியான போதைப்பொருள்

(வேதாரண்யம்)

வேதாரண்யத்தில் ரூ 80 இலட்சம் மதிப்பிலான ஹெரொயின் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. நாகை மாவட்டத்தில் வசிக்கும் ஆல்பர்ட் வயது 36 என்பவர் இலங்கையைச் சேர்ந்தவராவார். இவர் தற்போது வேதாரண்யத்தில் வசித்து வருகிறார்.

இந்நிலையில் இவரது வீட்டில் ஹெரோயின் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக வந்த தகவலையடுத்து அங்கு சென்ற பொலிஸ் குழு வீட்டு பரணில் 885 கிராம் ஹெரோயின் கைப்பற்றினார்.

அத்துடன் அவரும் கைது செய்யப்பட்டார். கைப்பற்றப்பட்ட ஹெரோயின் இந்திய மதிப்பு ரூ 80 இலட்சமாகும்.

(அ-2)

# புலம்பெயர் தமிழருக்காகவே சனல்-4 தொழிற்பட்டு வருகின்றது

## அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளில் புலம்பெயர்ந்த நிலையில் வாழுகின்ற இலங்கை தமிழர்களுக்காகவே சனல் 4 தொலைக்காட்சி செயற்படுவதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

சனல் 4 தொலைக்காட்சி இலங்கை தொடர்பில் புதிதாக வெளியிட்ட காணொளி தொடர்[illegible] கருத்து தெரிவித்த அமைச்சர் மகிந்த சமரசிங்[illegible] மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

பிரித்தானியாவில் சம்பாதிக்கும் நோக்குடன் வசிக்கும் புலம்பெயர்ந்த தமிழர்களை அங்கிருந்து இலங்கைக்கு நாடுகடத்தாத படிக்கும் செய்யும் நோக்கில் இந்த காணொளி உருவாக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக கைதுகளும் பல்வேறு வன்முறைகளும் இடம் பெற்று வருவதாக இந்த காணொளியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்கான ஆதாரங்க[illegible]யும் சனல் 4 தொலைக்காட்சி வெ[illegible]யிட்டுள்ளது. (அ-2)

# பகிரங்க உரிமை மாற்ற ஆவணங்கள் வைத்திருப்போருக்கு அபராதம்

## மோட்டார் வாகன ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

பகிரங்க உரிமை மாற்ற ஆவணங்கள் வைத்திருக்கும் வாகன உரிமையாளர்களிடம் அபராதம் அறவிடும் கால எல்லையை மீளாய்வு செய்ய மோட்டார் வாகன ஆணையாளர் அலுவலகம் தீர்மானித்துள்ளது.

வாகனங்கள் தமது பெயருக்கு பதிவு செய்யாமல் பகிரங்க உரிமை மாற்ற ஆவணங்கள் வைத்திருப்பவர்களிடம் நாளொன்றுக்கு 100 ரூபா வீதம் ஏற்கனவே அறவிடத் தீர்மானிக்கப்பட்டதாக மோட்டார் வாகன ஆணையாளர் நாயகம் லலித் தர்மப்பிரிய கூறினார்.

கடந்த ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில் அபராதம் அறவிட நேரிடுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தத் திகதிக்கு முன்னதாக பகிரங்க உரிமை மாற்ற ஆவணங்களை வைத்திருப்பவர்களிடம் அபராதம் அறவிடப்பட்டதென மோட்டார் வாகன ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (அ-2)

# பீட்டர் ரோபக் தற்கொலையில் மர்மம் ஆறாவது மாடியிலிருந்து குதித்துள்ளார்

பிரபல கிரிக்கெட் விமர்சகரும் முன்னாள் இங்கிலாந்து வீரருமான பீட்டர் ரோபக் தற்கொலை செய்து கொண்டார். இவரிடம் பொலிஸார் விசாரணை நடத்திய சில மணி நேரங்களில், திடீரென தான் தங்கியிருந்த ஹோட்டலின் ஆறாவது மாடியில்இருந்து கீழே குதித்துள் ளார். இதையடுத்து இவரது மரணத்தில் பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன.

இங்கிலாந்தைச் சேர்ந்தவர் பீட்டர் ரோபக், (55). கேம்பிரிட்ஜில் சட்டம் பயின்ற இவர் கிரிக்கெட்டிலும்சிறந்து விளங்கினார்.1980 களில் சாமர்சட் அணியின் தலைவராக இருந்தார். 335 முதல் தர போட்டிகளில் 33 சதங்கள் உட்பட 17 ஆயிரத்து 558 ஓட்டங்களெடுத்தார். 1991 ல் ஓய்வு பெற்ற இவர், அவுஸ்ரேலியாவில் குடியேறினார், பின் கிரிக்கெட் எழுத்தாளராக அவதாரம் எடுத்தார்.

அவுஸ்திரேலியா பங்கேற்கும் போட்டிகள் குறித்து விமர்சன கட்டுரைகளை சிட்னி மோர்னிங் ஹெரால்ட் பேர்பேக்ஸ் பத்திரிகைகள் மற்றும்கிரிக்இன்போ இணையதளத்தில் எழுதினார். வர்ணனையாளராகவும் பணியாற்றினார்.

**பொலிஸ் விசாரணை**


தற்போது , அவுஸ்திரேலியா- தென்னாபிரிக்க அணிகள் மோதும் டெஸ்ட் தொடர் பற்றி அவுஸ்திரேலிய வானொலியில் வர்ணனை செய்து வந்தார். சமீபத்தில் நியூலேண்ட்சில் நடந்த முதல் டெஸ்டில் அவுஸ்திரேலிய அணி படுதோல்வி அடைந்து. இப்போட்டி முடிந்தவுடன், தான் தங்கியிருந்த நியூலாண்ட்ஸ் சதர்ன் சன் ஹோட்டலுக்கு ரோபக் திரும்பியுள்ளார். அப்போது இவரிடம் பொலிஸார் விசாரணை நடத்தியதாக கூறப்படுகிறது. இவரது அறையில் இருந்து முக்கிய ஆதாரங்களை அவர்கள் எடுத்துச் சென்றதாக தெரிகிறது.

**தற்கொலை சோகம்**

இதனைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் இரவு 9.15 மணிக்கு (தென்னாபிரிக்க நேரப்படி) திடீரென தான் தங்கியிருந்த ஹோட்டலின் ஆறாவது மாடியில் இருந்து கீழே குதித்து தற்கொலை செய்து கொண்டுள்ளார். இவரது சோக முடிபுக்கான சரியான காரணம் எதுவும் தெரிய வில்லை.

இது குறித்து கேப்டவுன் பொலிஸ் செய் தித் தொடர்பாளர் பெடரிக் வான் விக் கூறுகையில் ,

சனிக்கிழமை இரவு 9.15 மணி அளவில் பிரிட்டனை சேர்ந்த கிரிக்கெட் வர்ணனையாளர் ஹோட்டலின் ஆறாவது மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டார்.



இந்த சம்பவத்தில் அவர் மரணம் அடைந்தார். இவரிடம் ஏற்கெனவே பொலிஸார் விசாரித்தனரா என்பது குறித்து கருத்து எதுவும் தெரிவிக்க இயலாது. தற்கொலைக்கான காரணம் குறித்து விரிவான விசாரனை நடந்து வருகிறது என்றார்.

# ஆஸி–மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் தொடர் மார்ச்சில்

(பிரிஜ்டவுன்)

அடுத்த ஆண்டு அவுஸ்திரேலியா–மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடர் நடக்கவுள்ளது.

எதிர்வரும் 2012 மார்ச் – ஏப்ரல் மாதத்தில் அவுஸ்திரேலிய அணி மேற்கிந்தியத் தீவுகள் செல்கிறது. இங்கு மூன்று டெஸ்ட், ஐந்து ஒரு நாள் மற்றும் 2 இருபது–20 போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

பார்படாஸ், குயின்ஸ் பார்க் ஓவல், கஜானாவில் டெஸ்ட் போட்டிகள் நடக்கிறது.

செயின்ட் வின்சண்ட் நகரில் முதல் மூன்று ஒருநாள் மற்றும் செயின்ட் லூசியாவில் அடுத்த 2 ஒரு நாள் போட்டிகள் நடக்கின்றன.

இதைத் தொடர்ந்து இரு அணிகள் இடையிலான 2 இருபது -20 போட்டிகள் செயின்ட் லூசியா, பார்படாசில் நடக்கவுள்ளது.

# உலகக்கிண்ண தகுதி போட்டியில் உருகுவே உதைபந்தாட்ட அணி வெற்றி

(சென்டனரியோ)

உலகக்கிண்ண தகுதிச்சுற்று உதைபந்தாட்ட போட்டியில், ஆர்ஜென்டினா, பொலிவியா அணிகள் இடையிலான போட்டி சமனிலையானது.

2014, உலககிண்ண உதைபந்தாட்ட தொடரில் பங்கேற்கும், அணிகளுக்கான தகுதிச் சுற்றுப்போட்டிகள் தற்போது நடக்கிறது.

தென் அமெரிக்க நாடுகளுக்கான தகுதிச் சுற்றுப்போட்டி, உருகுவேயில் நடந்தது. இதில் உருகுவே, சிலி அணிகள் மோதின.

ஆரம்பத்தில் இருந்தே உருகுவே அணி ஆதிக்கம் செலுத்தி வந்தது. இந்த அணியின் நட்சத்திர வீரர் லூயிஸ் சாரெஸ் ,41,45,67 வது நிமிடங்களில்ஹற்ரிக்கோல்அடித்து அசத்தினார்.

தொடர்ந்து அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய இவர், 73 வது நிமிடத்தில் மற்றொரு கோல் அடித்தார். முடிவில் 4:0 என்ற கோல் கணக்கில் உருகுவே அபார வெற்றி பெற்றது.

**ஆர்ஜென்டினா சமனிலை**

ஆர்ஜென்டினாவின் பியுனஸ் ஏர்சில் நடந்த மற்றொரு போட்டியில், ஆர்ஜென்டினா, பொலிவியா அணிக் மோதின இப் போட்டியின் முதல்பாதியில் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்கவில்லை.

இரண்டாவது, பாதியில் மார்செலோ (55 வது நிமிடம்) ஒரு கோல் அடிக்க ,பொலிவியா முன்னணி பெற்றது. அடுத்தசில நிமிடங்களில் (59வது) ஆர்ஜென்டினாவின் லாவெஜ்ஜி பதிலடி தந்தார். முடிவில் 1:1 என்ற கோல்கணக்கில் போட்டி சமனிலையானது.

மற்றப் போட்டிகளில் பராகுவே அணி, 2:1 என்ற கணக்கில் ஈகுவடோரை வீழ்த்தியது. வெனிசுலா, கொலம்பியா இடையிலான போட்டி சமனிலை (1:1) ஆனது.

# அஸ்வின்-ப்ரீத்தி திருமணம் சென்னையில் நேற்று கோலாகலம்


இந்திய கிரிக்கெட் வீரர் அஷ்வின் – ப்ரீத்தி திருமணம், சென்னையில் நேற்று காலை வெகுவிமரிசையாக நடந்தது.

இந்திய கிரிக்கெட் அணியின் சுழல்பந்து வீச்சாளர் அஷ்வின். தமிழகத்தைச் சேர்ந்த அஷ்வின், டில்லியில் மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான முதல் டெஸ்ட் போட்டியில் அறிமுகப்படுத்தப்பட்டார்.

அறிமுகப்போட்டியிலேயே 9 விக்கெட்டுக்களை வீழ்த்திய அஸ்வின் ஆட்டநாயகன் விருதையும் பெற்றார்.

இந்நிலையில்,நேற்று காலை அஷ்வின் திருமணம் சென்னையில் நடந்தது.

தனது பள்ளித்தோழியான ப்ரீத்தியை அவர் திருமணம் செய்து கொண்டார். இத்திருமண விழாவில் நெருங்கிய உறவினர்கள் மற்றும்



நண்பர்களுக்கு மட்டுமே அழைப்பிதழ் அனுப்பப்பட்டிருந்தது.

அத்துடன் கொல்கத்தாவில் இன்று ஆரம்பமாகும் 2வது டெஸ்ட் போட்டியில் அஷ்வின் விளையாடவுள்ளார்.

# பாகிஸ்தான் வீரர்கள் நாடு கடத்தப்படுவர்

இங்கிலாந்து சிறையில் இருக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் மூன்று பேரை, தண்டனைக்காலம் முடிந்ததும், நாடு கடத்த முடிபு செய்திருப்பதாக தெரிகிறது. இங்கிலாந்துக்கு எதிரான லோர்ட்ஸ் டெஸ்டில் ஆட்டநிர்ணய சதியில் ஈடுபட்ட, பாகிஸ்தான் வீரர்கள் சல்மான் பட், முகமெட் ஆசிப், முகமெட் அமிர்பிடிபட்டனர்.

இவர்கள் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டு, இப்போது லண்டன் சிறையில் உள்ளனர். இதில் முகமெட் அமிர், ஹெர் மெஜஸ்டில் சீர்திருத்தப் பாடசாலையில் உள்ளார்.

இதனிடையே, திடெய்லிமெயில் இங்கிலாந்து பத்திரிகையில் வெளியான செய்தியில், வாண்ட்ஸ் வெர்த் சிறையில் அடைக்கப்பட்டு இருந்த சல்மான்பட், முகமெட் ஆசிப் இருவரும்கடந்த வாரம் கான்டர்பரியில் உள்ள எச்.எம்.பி., சிறைக்கு மாற்றப்பட்டனர். இங்கிலாந்தில் குற்றம் செய்து பிடிபடும் வெளிநாட்டை சேர்ந்தவர்கள் மட்டும், இந்த சிறையில் அடைக்கப்படுவர். இது 2007 முதல் நடைமுறையில் இருந்து வருகிறது.

இதற்கு சி பிரிவு வழங்கப்பட்டுள்ளது. இதன்படி, இங்குள்ள கைதிகள் தண்டனைக் காலம் முடிந்ததும் இங்கிலாந்தை விட்டு தானாக நாடு கடத்தப்படுவர் அவர்கள் மறுத்தாலும் இங்குள்ளகுடியேற்றத்துறைஅதிகாரிகள்தண்டனை முடிந்த கைதிகளை இங்கிலாந்தை விட்டு செல்லத்தேவை யான நடவடிக்கை எடுப்பர்.

**என்ன விளைவு?**

இதன்படி , நாடு கடத்தப்படும் இந்த வீரர்கள் அடுத்த 10 ஆண்டுகளுக்கு இங்கிலாந்துக்குள் நுழைய முடியாது. சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) சார்பில் முகமெட் அமிருக்கு விதிக்கப்பட்ட ஐந்து ஆண்டு தடை நீங்கி,அவர் இங்கிலாந்து செல்ல முடியாது. இவ்வாறு அந்த பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது.

# இந்திய–மேற்கிந்தித் தீவுகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் இன்று ஆரம்பம்



(கொல்கத்தா)

இந்தியா–மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் இடையிலான இரண்டாவது டெஸ்ட் இன்று கொல்கத்தாவில் ஆரம்பமாகிறது. முதல் டெஸ்ட் போட்டியைப் போல, இப்போட்டியிலும் இந்திய அணியின் சுழல் ஆதிக்கம் தொடருமா என எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்திய தீவுகள் அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.டில்லியில் நடந்த முதல் டெஸ்டில் வெற்றி பெற்ற இந்திய அணி, தொடரில் 1:0 என முன்னிலையில் உள்ளது.

இந்தப் போட்டியில் பிரக்யான் ஓஜா, ஹர்பஜனுக்குப்பதில் வாய்ப்பு பெற்ற அஷ்வின் இருவரும் 16 விக்கெட்டுக்களை கைப்பற்றி இந்திய அணியின் வெற்றிக்கு உதவினர்.

இதில் 9 விக்கெட்டுக்களை வீழ்த்திய அஷ்வின், மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிராக அறிமுகமான வீரர்களில் இரண்டாவது சிறந்த பந்து வீச்சை பதிவுசெய்தார்.

**புதிய ஜோடி**

இந்தியாவின் கும்ளே–ஹர்பஜன் ஜோடி, அணியின் போட்டி வெற்றியாளர்களாக இருந்துள்ளனர். கும்ளே 2008 இல் ஓய்வுபெற்றார். ஹர்பஜன் சமீபகாலமாக போர்ம் இன்றி தவித்து வருகிறார். இப்படி ஒரு இக்கட்டான நிலையில் , பிரக்யான் ஓஜாவும் (7விக்..), அஷ்வினும் இணைந்துபோட்டிவெற்றியாளர்களாக சரியான நேரத் தில் ஜொலித்துள்ளனர். இரு அணிகள் இடையிலான இரண்டாவது டெஸ்ட்போட்டி, இன்று கொல்கத்தாவில் ஆரம்பமாகின்றது.

வழக்கமாகவே சுழலுக்கு நன்கு ஒத்துழைக்கும் இங்குள்ள ஆடுகளம், இம்முறையும் ஏமாற்றாது என்று தெரிகிறது.

இதனால், டில்லி டெஸ்டில் ஏற்கெனவே சுழற் பந்து வீச்சை சந்திக்க திணறிய மேற்கிந்திய தீவுகள் அணியினர், கொல்கத்தாவில் மீண்டு வருவது சிரமம்.

**துடுப்பாட்டத்தில் நம்பிக்கை**

இந்திய அணியின் துடுப்பாட்டத்தைப் பொறுத்த வரை, முதல் டெஸ்டின் முதல் இன்னிங்சில் சொதப்பினாலும், இரண்டாவது இன்னிங்சில் எழுச்சி பெற்றது.

ஆடுகளம் துடுப்பாட்டத்திற்கு ஒத் துழைக்காத நிலையிலும், சச்சின், சேவாக், லக்ஸ்மன், டிராவிட் போன்ற மூத்த வீரர்கள் அசத்த லான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். காம்பீர் இரு இன்னிங்சிலும் நல்ல தொடக்கத்தை அமைத்தார்.

**சந்தர்போல் அபாரம்**

மேற்கிந்திய தீவுகள் அணியில் சந்தர்போல் மட்டும் (118,47ஓட்டங்கள்) சிறப்பான முறையில் ஓட்டங்கள் சேர்த்தார். மற்ற வீரர்கள் இந்தியாவின்சுழலில்சிக்கிவிரைவில்திரும்பினர். இதை அந்த அணியின்தலைவர் சமியும் ஒத்துக்கொண்டார்.

பந்து வீச்சில் சமி, பிடல் எட்வேட்ஸ், தேவேந்திர பிஷூ ஆகியோர், முதல் டெஸ்டில் சிறப்பாக செயல்பட்டனர். இருப்பினும், இந்திய அணியின் வலிமையானதுடுப்பாட்ட வரிசை மீது, தொடர்ந்து நெருக்கடி கொடுத்தால்தான், எழுச்சி பெறமுடியும்.

TILKO JAFFNA CITY HOTEL

70/6,K.K.S ROAD,JAFFNA. T.P:0212225969

Web:cityhoteljaffna.com
e-mail:info@hoteljaffna.com

Tilko Jaffna City Hotel for Business & Relaxation in the heart of Jaffna City
Conference Hall Facilities including Multimedia & PA System
Large Banquet Hall For Wedding Receptions, Work Shops, Conventions & Seminars
Non Ac Mini Conference Hall
Special take away Lunch/Dinner Pack
Morning/ Evening Snacks
Special Package Rate for
Family Get-to-Gathers, Birthday/ Anniversary Functions, Company Get to Gathers

Await Opening
Special Barbaque at our Garden Cafeteria
Inclusive of Chines/Indian Jaffna Authentic
Variety Cuisine s From our open hot ranga Kitchen

உங்கள் வியாபார நடவடிக்கைகள் மற்றும் பொழுது போக்கு அம்சங்களுக்கு யாழ். நகரின் மத்தியில் ஒளி, ஒலி அமைப்பு மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய மாநாட்டு மண்டபம், சிறிய /நடுத்தர /பிரமாண்டமான குளிருட்டபட்ட, குளிருட்டபடாத சகல வசதிகளுடன் கூடிய மண்டபங்கள்,திருமண, பிறந்த நாள் கொண்டாட்டங்கள்,வியாபார நிறுவன ஒன்றுகூடல்களுக்கும் ஏதுவான பாரிய மண்டப வசதி அத்துடன் மதிய, இரவு பொதி செய்யப்பட் உணவு வகைகள், காலை, மாலை சிற்றுண்டிகள்...

இந்தியா, சீனா மற்றும் யாழ். பாரம்பரிய உணவு வகைகளும் ஒரே இடத்தில்...



மிகவிரைவில் TILKO HOTEL இல் Barbeque வசதியுடனான பூந்தோட்ட உணவகம் திறக்கப்பட வுள்ளது.

உங்கள் வியாபார நடவடிக்கைகள் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுக்கு யாழ் நகரில்...

T.P.:077 6943479
K.Gunaseelan
Marketing Executive


# விடுதலைப்புலிகளின் தலை...

விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் மற்றும் சமாதான செயலகத்தின் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் சர்வதேச அனுசரணையுடன் சரணடைய விருப்பம் தெரிவித்தனர்.

இவ்விடயம் தொடர்பில் இவர்கள் இருவரும் நோர்வே மற்றும் அமெரிக்க பிரித்தானிய தூதரகங்கள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் தமிழ் அரசியல்வாதியான சந்திரநேரு ஆகியோருடன் தொடர்பு கொண்டு சரணடைய விருப்பம் தெரிவித்தனர்.

இதையடுத்து அப்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசகராக இருந்த பசில் ராஜபக்ஷவுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் பின், அவர்களை வெள்ளைக் கொடிகளை ஏந்தியவாறு படைத்தரப்பினரை நோக்கி செல்லும்படி அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இவர்கள் சரணடையப் புறப்படுவதற்கு சற்று நேரம் முன்னர் வரை அவர்களுடனான தொடர்பாடல்கள் இருந்தது. அதனைத் தொடர்ந்த சில மணித்தியாலங்களின் பின்னர் அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி வெளியானது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட போரின் போது இரத்தக்களரியைத் தடுப்பதற்காக நோர்வே மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் ராஜதந்திர நகர்வுகள் சிலவற்றை மேற்கொண்டன. அதேவேளை இணைத் தலைமை நாடுகளும் விடுதலைப் புலிகளின் சரணடைவு தொடர்பாக பணியாற்றுவதற்கு இணக்கம் தெரிவித்தன.

அதேவேளை ஜப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன நேரடியாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவில்லை. இம்முயற்சியில் இந்தியா நேரடியாக தொடர்புபடவில்லை. ஆனால் பொதுமக்களின் இழப்புக்களைத் தவிர்ப்பதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு இந்தியா வேண்டுகோள் விடுத்த போதிலும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான படை நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு அவர்களை தோற்கடிப்பதற்கு ஆதரவை வழங்கும் நிலைப்பாட்டில் இந்தியா இருந்தது.

இதேவேளை அமெரிக்கா மற்றும் நோர்வே ஆகிய நாடுகள் மனிதாபிமான நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்காக விடுதலைப் புலிகளை சரணடைய வைப்பது தொடர்பில் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டிருந்தன. இதனடிப்படையில் நான்கு முக்கிய ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

♦ விடுதலைப்புலிகளின் உயர்மட்டத் தலைவர்களைத் தவிர்ந்த ஏனைய போராளிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்க அரசாங்க உத்தரவாதம் வழங்குதல்

♦ விடுதலைப்புலிகள் தமது ஆயுதங்களை ஐக்கிய நாடுகள் சபையிடம் ஒப்படைத்தல்

♦ விடுதலைப்புலிகளின் போராளிகள் ஐக்கிய நாடுகள் சபை அல்லது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகளிடம் சரணடைவது

♦ இணைத்தலைமை நாடுகள் பொதுமக்களின் நிலைமைகளை மேம்படுத்துவதற்கும் அரசியல் தீர்வுக்கு ஆதரவு வழங்கவும் வாக்குறுதி அளித்தல். திருகோணமலைக்கு பொதுமக்களைக் கொண்டு செல்வதற்காக அமெரிக்கா கப்பல்களைத் தயார் படுத்தல்.

ஐக்கியநாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதி மூலம் அல்லது வேறு வழிகள் ஊடாக களமுனையில் ஒரு சர்வதேச தலையீட்டை மேற்கொள்வதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு சாட்சியாக அமெரிக்காவும் இந்தியாவும் களத்தில நிற்கவேண்டும் என்று உறுதிப்படுத்தப்பட்டது.

இந்தக் கட்டத்தில் விடுதலைப்புலிகள் சரணடைந்தால்ஏற்றுக்கொள்வதாக இலங்கை அரசாங்கத்திடமிருந்து நோர்வேஜிய அரசாங்கத்திற்கு [illegible]மிக்ஞைகள் தெரிவிக்கப்பட்டன.

இதேவேளை 25 தொடக்கம் 50 வரையான விடுதலைப் புலிகளின் தலைவர்களையும் அவர்கள் குடும்பத்தினரையும் வெளிநாடு ஒன்றுக்கு கொண்டு செல்வதற்கான சாத்தியம் குறித்து விடுதலைப்புலிகளின் செயற்பாட்டாளர் கே.பி. கலந்துரையாடியபோது விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அத் திட்டத்தை நிராகரித்துவிட்டார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமை ஒரு கனவுலகத்தில் இருந்தது. அவர்கள் ஒரு அதிசயம் நிகழும் என்று நம்பினார்கள். முன்னைய சந்தர்ப்பங்களில் தப்பித்துக் கொண்டதைப் போன்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மீண்டும் அதிசயத்தை நிகழ்த்துவார் என்று நம்பியதாக நோர்வேஜிய அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைப் படைத் தரப்பினரால் விடுதலைப் புலிகள் முற்றாக சுற்றிவளைக்கப்பட்ட போது அவர்களைச் சரணடையச் செய்யும் விருப்பம் கொழும்புக்கு மிகவாக குறைந்து போனது. விடுதலைப்புலிகள் தப்பித்துக் கொள்வதைக் கூட இந்தியா விரும்பியிருக்குமா என்பது சந்தேகமே.

இலங்கை அரசாங்கத்திடம் மேற்கத்தைய அழுத்தங்களை புறக்கணிக்குமாறு மேற்கு அல்லாத நாடுகள் கூறியதாக இலங்கையின் இராஜதந்திரி ஒருவர் தெரிவித்தார் எனவும் இந்த மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக சண்டே ரைம்ஸ் தெரிவித்துள்ளது. (பா-1)

# கொலைக்களம் -2...

போர் குற்றங்கள் நடைபெற்றுள்ளதாக குற்றம் சுமத்தி வீடியோ ஆதாரங்களை வெளியிட்டிருந்தது.

இதுகுறித்து அரசாங்கம் பதில் வழங்கியதை அடுத்து, அது பொய்யானது என்பதை சர்வதேசம் ஏற்றுக் கொண்டதாகவும் சரத் திஸாநாயக்க கூறியுள்ளார்.

யுத்த காலத்தில் நடந்தவை குறித்து ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை அடுத்த வாரம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட உள்ளது. இந்த அறிக்கை மூலம் உண்மை உலகத்திற்கு தெரியவரும் என்பதால் உலகத்தின் கவனத்தை திசை திருப்ப மேலும் ஒரு வீடியோவை வெளியிட சனல் 4 தொலைக்காட்சி முயற்சித்து வருவதாகவும் வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (பா)

# நாடு பூராக...

இன்று நள்ளிரவு முதல் மறு அறிவித்தல் வரை சேவை யில் ஈடுபட மாட்டாது என சங்கத்தின் பொது முகாமையாளர் வி.எஸ்.இரத்தின சபாபதி அறிவித்துள்ளார். (பா)

# யாழ்.புறநகர்...

அத்துடன் அவ்விடுதியில் தங்கியிருந்த 4 காதல் ஜோடிகள் எச்சரிக்கையின் பின் விடுதலை செய்யப்பட்டனர்.

இதேவேளை பாடசாலை மாணவிகளை இவ்வாறான தங்குமிட விடுதிகளுக்கு அழைத்துச் செல்லும் முகவர்கள் அவர்களுக்கு மயக்க மருந்து கலந்த குளிர்பாணங்களை கொடுத்து விட்டு பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு பயன்படுத்து கிறார்கள் என்ற தகவல்களும் இரகசிய பொலிஸாரால் வழங்கப்பட்டுள்ளது.

எனவே பாடசாலைகளுக்கு செல்லும் பெண்பிள்ளைகள் தொடர்பில் விழிப்பாக இருக்குமாறு பெற்றோர்களை கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு யாழ் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி சமன் சிகார தெரிவித்தார். (பா-6)

# மீள்குடியேற்றம்...

செய்த பத்திரிகையாளர்களிடம் விமானத்திலேயே பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

மாலைதீவில் நடந்த சார்க் மாநாடு, மிகவும் பயனுள்ளதாக இருந்தது. தெற்கு ஆசிய பிராந்தியத்தில் உள்ள பிரச்சினைகள் பற்றி விரிவாக விவாதித்தோம். மேலும், இந்த ம்ாநாட்டில் கலந்து கொண்ட பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், பூட்டான், நேபாளம், ஆப்கானிஸ்தான், மாலைதீவு ஆகிய நாடுகளின் தலைவர்களுடன் தனிப்பட்ட முறையிலும் பேச்சுவார்த்தை நடத்தினேன்.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் பேசும் போது,

தமிழக மீனவர்கள் தொடர்ந்து இலங்கை கடற்படையால் தாக்கப்படும் சம்பவம் குறித்து பேசினேன். தமிழக மீனவர்கள் கடற்படையால் சுடப்படுவதை, ராஜபக்ஷவும் கண்டித்தார்.

இந்த பிரச்சினை குறித்து, இரு நாட்டு மீனவர்கள் குழுக்களுக்கு இடையே, பேச்சுவார்த்தை நடத்த ஏற்பாடு செய்வதாகவும், இரு நாட்டு பிரதிநிதிகள் மட்டத்தில் பேச நடவடிக்கை எடுப்பதாகவும் மகிந்த ராஜபக்ஷ உறுதியளித்தார்.

இலங்கையிலேயே அகதிகளாக முகாம்களில் வசிக்கும் தமிழர்களை மீளக்குடியமர்த்தும் பணியை விரைவுபடுத்த வேண்டும் என ராஜபக்ஷவிடம் கூறினேன். முகாம்களில் இன்னமும் ஏழாயிரம் பேர் மட்டுமே உள்ளதாகவும், அவர்களும் வரும் டிசம்பர் மாதத்திற்குள் குடியமர்த்தப்பட்டு விடுவார்கள் என்றும் மகிந்த ராஜபக்ஷ கூறினார். (பா)






# தனயன் தாக்கி...

ஆத்திரமடைந்த மகன் இரும்பு வாளியால் தந்தையை தாக்கியுள்ளார்.

இதன்போது தலையில் படுகாயமடைந்த முதியவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

எனினும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் பிரஸ்தாப முதியவர் நேற்று முன்தினமிரவு கிளிநொச்சி வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (பா)


கார் வாடகைக்கு

மிகவும் குறைந்த விலையில் அதிநவீன சொகுசு கார்கள் வாடகைக்கு கிடைக்கும். திருமண வைபவங்களுக்கும் மாத, வார, நாள் வாடகைக்கு கிடைக்கும்

தொடர்புகளுக்கு: 0776237546



(6792)


# மரண அறிவித்தல்

## சங்கரப்பிள்ளை சிவதாஸன்

(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், பனை அபிவிருத்திச் சபை முன்னாள் தலைவரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மூத்த உறுப்பினரும்)



கிளானை, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் வங்களா ஒழுங்கை, மல்லாகத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை சிவதாஸன் அவர்கள் 13.11.2011 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - செல்லமுத்துவின் மகனும் காலஞ்சென்ற சிவகுணநாயகியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்லப்பா - சின்னம்மா தம்பதியினரின் மருமகனும் காலஞ் சென்றவர்களான Dr. மாணிக்கம், மணிமேகலை மற்றும் மனோன்மணி, திருநடராஜா (கனடா), வைரவப்பிள்ளை, நகுலேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலம்சென்ற காசிப்பிள்ளை, மற்றும் துரைரட்ணம், பத்மினிதேவி, கோகிலாதேவி, இராசலட்சுமி, மாலினி, பராசக்தி, பரமேஸ்வரி, சீனிவாசகம், ஜெகதாம்பிகை, சைலேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் பத்மநாதன், காலம்சென்ற கனகச்சந்திரன், இராஜரட்ணம் மற்றும் பரஞ்சோதி, லீலாவதி ஆகியோரின் சகலனும் கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மாமனும் ஆவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக் கொள்கிறோம்.

இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: குடும்பத்தினர்

(6794)

இப்பத்திரிகை வலம்புரி அன்.ஃகோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.11.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.